# ஞானிகள்

சுவடிமூலம் அருளி

# அருள்வாக்கு

பரமானந்த சதாசிவ சற்குரு

**தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

நிறுவனர்,

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**

**ஓங்காரக்குடில்,** துறையூர் – 621 010, திருச்சி மாவட்டம்.

தொலைபேசி 04327–255684, 255184.

நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூல் | : | ஞானிகள் சுவடிமூலம் அருளிய அருள்வாக்கு |
| முதற்பதிப்பு | : | 05–10–2003 தீட்சை விழா வெளியீடு |
| பக்கம் | : | 144 |

வெளியீடு

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில், துறையூர் – 621 010,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

தொலைபேசி : குருநாதர் : 04327–255684.
அலுவலகம் : 255184, 255784.

Fax : 04327-255284.

Homepage : www.agathiar.org

e-mail : agathiartrust.in@agathiar.org

அச்சிட்டோர்

வாஞ்சி மறுதோன்றி அச்சகம்,
துறையூர்–621 010. தொலைபேசி 04327–243638.

## வேண்டுகோள்

அன்புடையீர், வணக்கம்.

முற்காலத்தில் ஓலைச்சுவடி மூலமாக மக்களுக்கு அவரவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளை மகான்கள் பனை ஓலைமூலம் எழுதியுள்ளார்கள்.

இல்லறத்தார்களுக்கு ஓலைச்சுவடி எழுதிய ஞானிகள் ஆன்மீகவாதிகளுக்கும் அறிவுரைகளை ஓலைச்சுவடி மூலம் எழுதியுள்ளார்கள். மேலும், சரியை, கிரியை, யோக, ஞானம் ஆகியவைகளை அறிந்து ஜென்மத்தைக் கடைத்தேற்ற முயற்சிக்கும் யோகிகளுக்கும் அறிவுரையாக சுவடிமூலம் அருளியுள்ளார்கள். அதில் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜதேசிக சுவாமிகள் அவர்களுக்கு ஆசான் அகத்தீசரும், மகான் நந்தீசரும், மகான் திருமூலதேவரும், மகான் கருவூர் முனிவரும், ஆசான் காலாங்கிநாதரும், போக மகாரிஷியும் மற்றும் அநேக ஞானிகள் ஞானத்திற்கு உரிய அறிவுரைகளை சுவடிமூலம் எழுதி வைத்துள்ளார்கள். அதன்படி நாயன்மார்களும், ஆழ்வார்களும் மற்றும் முற்காலப் பெரும்புலவர்களும் சுவடிமூலம் எழுதியுள்ளார்கள். இதில், நாயன்மார்கள் நூல்களும், ஞானிகள் நூல்களும் இந்தநூலில் உள்ளது.

பரமானந்த சதாசிவ சற்குரு தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளுக்கு சரியை, கிரியை, யோக, ஞானத்தைப் பற்றி சொல்லியுள்ள கருத்துக்கள் பிற்காலத்தில் ஞானத்தைமேற்கொள்ளும் அன்பர்களுக்கு பயன்படும் என்று கருதியே இந்நூல் வெளியிடுகின்றோம். அன்பர்கள் படித்துப் பயனடையும்படி கேட்டுக்கொள்கிறேன்.

குருவின் திருவடி பணிந்து
**இரா. மாதவன்,**
துறையூர், திருச்சி மாவட்டம்.

## முன்னுரை

அடியேன் யோக நிலையையும், ஞான நிலையையும் அறிந்துகொள்ள பலகுருமார்களை தேடி அலைந்தேன். ஒவ்வொருவரும் யோகத்தைப் பற்றி சொன்னார்கள். அதில் எனக்கு நன்மை ஏற்படவில்லை. துறையூர் அவல்பட்டறை தெருவில் **சித்த வைத்திய மேதையும், சித்த தத்துவ மேதையுமான பெ. சின்னசாமி சாஸ்திரி அவர்கள்தான்** யோக ஞானத்தைப் பற்றியும், ஆசான் அகத்தீசர் ஆசியால்தான் ஞானத்தைப் பெறமுடியும் என்பதையும் அவர் உபதேசத்தால் அறிந்துகொண்டேன். அவர் உபதேசத்தின்படி தினமும்

காலையில் 30 நிமிடமும், மாலையில் 30 நிமிடமும் முடிந்தால் இரவு நேரங்களிலும் ஆசான் அகத்தீசரை **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபமாகிய பூஜைசெய்து வந்தேன்.

01. நாயினும் கடையேனாகிய என்னையும் ஒருபொருட்டாக மதித்து அருள் செய்ய வேண்டுமென்று ஆசான் அகத்தீசரை வேண்டிக்கொண்டேன்.
02. பொறிப்புலன் என்னும் பேய்கள் என்னைப் பிடித்து ஆட்டும்பொழுது ஆசான் அகத்தீசரை அழைத்து இவர்களது சீற்றத்தை அடக்கி அருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டேன்.
03. பொல்லாத காமப்பேய் என்னைப் பிடித்து வஞ்சிக்கின்றது, அதை வெல்லும் வல்லமை எனக்கு இல்லை, அதை வெல்லுவதற்கு நீ அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டுக்கொண்டேன்.
04. பொல்லாத காம தேகமே அறியாமையை உண்டுபண்ணுகின்றது. அதை வெல்லும் வல்லமையை எனக்கு தந்தருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டேன்.
05. பலஜென்மங்களில் செய்த பாவங்கள் உன் திருவடியை உருகி தியானிக்க முடியாமல் செய்கிறது. அதை வெல்லும் வல்லமை வேண்டும் என்று வேண்டிக்கொண்டேன்.
06. நீரே எனது இடது கலையாகிய சந்திர கலையையும் பிங்கலையாகிய சூரிய கலையையும் சார்ந்திருந்து ரேசித்து, பூரித்து, கும்பித்து புருவ மத்தியில் ஸ்தம்பிக்க வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.
07. அடிக்கடி உன்திருவடியை உருகி தியானிக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். பல பிரச்சினைகள் என்னைத் தாக்கி தியானிக்க முடியாமல் செய்கிறது. எனவே, பிரச்சினைகளை தீர்த்து உமது திருவடியை பூஜிக்க அருள்செய்ய வேண்டுமென்று வேண்டிக்கேட்டேன்.
08. உனது பெருமையை அறிந்து உமது திருவடியை பூஜிப்பது என்பது எளிதான காரியமல்ல என்பதை அறிந்துகொண்டேன். உன்பெருமையை உணரவும், உன்

திருவடியை உருகி தியானிக்கவும், உன் திருவருள் வேண்டுமென்று வேண்டிக்கேட்டேன்.

09. உன்திருவருளால் அன்றி, உன் திருவருளை பெற முடியாது என்பதை அறிந்து உன் திருவருள் துணை கொண்டே உன்திருவருளை பெறவேண்டுமென்று வேண்டிக்கேட்டேன்.

10. நீரே எனக்கு தாய் போன்று இருந்து மும்மலக்கொடுமைகளை வெல்ல வேண்டும் என வேண்டிக்கேட்டேன்.

11. அநித்தியத்தை நித்தியம் என்று மயங்குகின்ற மயக்கத்தை நீக்கவும், உன் திருவருள் வேண்டுமென்று வேண்டிக்கேட்டேன்.

12. தூலமாகிய புற உடம்பு பற்றியும், சூட்சமமாகிய அக உடம்பு பற்றியும் என் அறிவுக்கு தோன்றவில்லை. எனவே, எனக்கு உணர்த்திட அருள்செய்ய வேண்டுமென்று வேண்டிக்கேட்டேன்.

13. காரண தேகம், காரிய தேகம், காரண–காரிய தேகத்தை என் அறிவால் அறிந்து கொள்ளமுடியாது. எனவே, எனக்கு உணர்த்தவேண்டுமென்று வேண்டிக்கேட்டேன்.

14. தூலதேகத்தின் துணை கொண்டுதான் சூட்சமதேகத்தை ஆக்கம் பெற முடியும் என்பதை என்னால் உணரமுடியவில்லை. ஆகவே, என் அகமும், புறமும் இருந்து உணர்த்தவேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

15. இடகலையையும், பிங்கலையையும், சுழிமுனையில் சேர்த்தால் அதுவே சமாதி நிலை என்பதை என்னால் அறிய முடியாது. எனவே, எனக்கு நீ உணர்த்த வேண்டுமென்று வேண்டிக்கேட்டேன்.

16. சும்மாயிரு என்ற ரகசியம் என் அறிவுக்கு தோன்றவில்லை. எனவே, சும்மாயிரு என்ற ரகசியத்தை எனக்கு உணர்த்தவேண்டும் என்று ஆசான் அகத்தீசரை திருவடி பணிந்து வேண்டிக்கேட்டேன்.

17. என் அறிவு நீ, என் உணர்வு நீ, என் தாயும் நீ, என் தந்தையும் நீ, என் இனிய உறவும் நீ என்று வேண்டிக்கேட்டேன்.

18. என் சிந்தை நீ, என் சொல்லும் நீ, என் செயலும் நீயாகயிருந்து அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

19. உன்திருவடியைப் பூஜித்து, உன்னிடம் என்ன வேண்டிக்கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை. எனக்கு என்ன என்ன கேட்கவேண்டும் என்று உணர்த்தி அருள வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

20. எனக்கு கல்வி இல்லாததால், கேள்வி ஞானத்தைக் கொண்டுதான் திருவடியைப் பூஜித்து வந்திருக்கிறேன். அதுவும் உன்திருவருள் செயல் என்பதை உன் அருளால் உணரப்பெற்றேன். எனவே, ஜென்மத்தைக் கடைத்தேற்ற எந்தெந்த வகைகளில் செயல்படவேண்டும் என்பது தெரியவில்லை. அடியேனுக்கு நீ உணர்த்தி அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

21. உமது திருவருளால் அடியேன் உண்மைப்பொருளை அறியவும், மரணமில்லாப் பெருவாழ்வு பெறவேண்டும் என்று ஆசான் அகத்தீசரை வேண்டிக்கேட்டேன்.

22. வீடுபேறு அடைவதற்கு மிகமிக நுட்பமான அறிவு வேண்டும். எனக்கோ, எள்ளளவும் அதற்குரிய அறிவு இல்லை. வீடுபேறு அடைவதற்குரிய அதிநுட்பமான அறிவாக நீ இருந்து அருளவேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

23. எனத சிற்றறிவு துணைகொண்டுதான் உமது திருவடியைப் பூஜிக்கிறேன். என் அறிவில் சார்ந்து, பேரறிவாக இருந்து அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

24. உமது திருவடியைப் பூஜிக்க பூஜிக்கதான் வன்மனம் நீங்கி நல்லமனம் வரும் என்பதை என்னால் அறியமுடியவில்லை. உமது திருவடியை பூஜிக்கும் அறிவும், தூய மனதுடன் வாழவும் அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

25. தூய மனமில்லாதவர், அருளைப்பெற முடியாது என்பதை என்னால் அறியமுடியவில்லை. ஆகவே,

தூயமனமும், உன் அருளைப்பெறுவதற்கும் நீ எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

26. முன்செய்த பாவங்கள்தான் பொல்லாத காமதேகமும், கொடிய வறுமையும், யான் என்ற கர்வமும், சான்றோர்களை நாடி ஆசிபெறாத மூடத்தனமும் இருக்கும் என்று என்னால் அறியமுடியவில்லை. எனவே, நான் முன்செய்த பாவங்கள் தீரவும், நற்பண்புடன் வாழவும் எனக்கு நீ அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

27. சான்றோர்கள் நட்பும், சாதுங்க தொடர்பும் இருந்தால்தான் குணக்கேடுகளை அறியவும், நீக்கவும் முடியும் என்பதை என்னால் அறிந்துகொள்ளமுடியவில்லை. சான்றோர்கள் நட்பும், சாதுங்க தொடர்பும் எனக்கு அமைய அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

28. முன்செய்த வினை காரணமாக சான்றோர்களை நாடுதலும், அவர்களுடைய உபதேசம் பெறுதலும் வேண்டும் என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. எனவே, சான்றோர்களை நாடவும், அவர்கள் உபதேசத்தைப் பெறவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றவும் நீ அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

29. முன்செய்த வினையின் காரணமாக, நான் மிகவும் அறிவுடையவன் என்று பெருமிதம் கொண்டு இருக்கிறேன். என்னால் அறியமுடியவில்லை. எனவே, அதுபோன்ற குணக்கேடுகளை நீக்கி எனக்கு அருளவேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

30. பொருள்கொடாத லோபித்தனமும், பிறரை மதியாத குணக்கேடும் என்னிடம் உள்ளது. ஆகவே, இதுபோன்ற குணக்கேடுகள் நீங்க அருள் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

31. பொறாமை, பேராசை, கட்டுக்கடங்கா சினம், பிறர்மனம் புண்படும்படி பேசுதல் போன்ற குணக்கேடுகளே மீண்டும் பிறவிக்குக் காரணம் என்பதை என்னால் அறியமுடியவில்லை. குணக்கேடுகள் நீங்கவும், இதுபோன்ற குணக்கேடுகள் மீண்டும் வராமல்

இருக்கவும் நீ எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

32. ஜீவகாருண்யம் இல்லாதவர்களுக்கு ஞானவாழ்வு இல்லை என்பதை என்னால் அறியமுடியவில்லை. எனவே, ஜீவகாருண்யமே ஞானவிட்டின் திறவுகோல் என்பதை உன்அருளால் எனக்கு உணர்த்திட வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

33. உன்திருவருளால் செல்வம் பெற்றிருந்தாலும், அதை வறியவர்களுக்கு மனமுவந்து கொடுக்கும் மனம் எனக்கு இல்லை. அதுவே ஆன்மலாபம்பெற தடையாக இருக்கும் என்பதை என்னால் அறியமுடிவில்லை. எனவே, மனமுவந்து பிறருக்கு உதவ அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

34. புண்ணிய பலமும், அருள் பலமும் இல்லாதவர்களுக்கு ஞானவாழ்வு கிட்டாது என்பதை என்னால் அறியமுடியவில்லை. எனவே, புண்ணியபலமும், அருள்பலமும் பெற்று வீடுபேறு அடைய அருள்செய்யவேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

35. எல்லோரும் என்னை நல்லவன் என்று சொன்னால்தான் நான் ஆன்மலாபம் பெறமுடியும் என்பதை என்னால் அறியமுடிவில்லை. நான் எல்லோருக்கும் நல்லவனாக வாழ உன் திருவருள் வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

36. பொருள்பற்று உள்ளவன் அருளைப்பெற முடியாது என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. எனவே, பொருள்பற்று நீக்கி, உன் திருவடியே பற்றுக்கோடாக பற்றிக்கொள்ள அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

37. வீடுபேறு அடைய அன்பு, தயவு, கருணை, தன்னடக்கம் வேண்டும் என்பதை என்னால் அறியமுடியவில்லை. எனவே, அன்பும், தயவும், கருணையும், தன்னடக்கமும் தந்து எனக்கு அருளவேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

38. நான் வாழ ஆசைப்படுவதுபோல் மற்றவர்களும் வாழ ஆசைப்படுவார்கள். அவர்களுக்கு இடையூறாக

இருந்தால் தீவினை சூழும் என்பதை என்னால் அறியமுடியவில்லை. எனவே, நான் வாழ்வதுபோல் மற்றவர்களும் வாழவேண்டும் என்று நான் நினைக்க எனக்கு நீ அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

39. எல்லோரும் என்னை கொடும்பாவி கொடும்பாவி என்றால், என்னை அறியாமலே நான் நரகத்திற்குப் போவேன் என்பது எனக்குத் தெரியாது. ஆகவே, நான் பாவி என்று பெயரெடுக்காது இருக்கவும், பணிவுடன் வாழவும் எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

40. நான் உயிர்க்கொலை செய்வதிலும், புலால் உண்பதிலும் நாட்டமாக இருக்கின்றேன். இது பொல்லாத நரகத்தில் சேர்க்கும் என்பது எனக்குத் தெரியாது. புலால் உண்ணாமலும், உயிர்க்கொலை செய்யாமலும் இருக்க எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

41. சும்மா இரு என்ற இரகசியம் கோடி பிரம்ம பட்டத்திற்கு ஒப்பான பெருமையுடையது என்று என்னால் அறியமுடியவில்லை. சும்மா இரு என்ற இரகசியத்தை உணர்த்தி எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

42. துரியம் கடந்து சுடர்ஒளியைக் கண்டால் மரணம், பிறப்பு இல்லை என்பதை என்னால் அறியமுடியவில்லை. துரியம் கடந்து சுடர்ஒளி காணவும் எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

43. மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தாக்கால் ஈசனைக் காட்டும் உடம்பு என்பதை என்னால் அறியமுடியவில்லை. எனவே, மாசற்ற கொள்கையை அறிந்து கடைப்பிடிக்கவும், என்னுள் பரம்பொருளைக் காணவும் அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

44. எவ்விடத்திலும் எவ்வுயிரிலும் எங்கும் சிவம் இருப்பதை என்னால் அறியமுடியவில்லை. ஆகவே, எவ்விடத்திலும், எவ்வுயிரிலும் எங்கும் சிவம்

இருப்பதை நான் அறிந்துகொள்ள எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

45. உடம்பென்னும் பாசமாகிய சந்திரகலையையும், உயிரென்னும் பசுவாகிய சூரியகலையையும், உயர்சிறப்புடைய பதியாகிய சுழிமுனை பற்றியும் என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. எனவே, உடம்பென்னும் பாசமாகிய சந்திரகலையையும், உயிரென்னும் பசுவாகிய சூரியகலையையும், உயர்சிறப்புடைய பதியாகிய சுழிமுனை பற்றியும் அறிந்துகொள்ள எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

46. ஒருவன் தவத்தில் சித்திபெற வேண்டும் என்றால் பண்புள்ள தொண்டர்களின் உதவிகள் மிக அவசியம். தொண்டர்களை மதித்தலும், அவர்களுக்கு நல்வழி காட்டுதலும், அவர்களுக்கு வரும் துன்பங்களைத் தீர்த்தலும் ஆகிய பண்புகள் எனக்கு இல்லை. எனவே, உண்மைத் தொண்டர்களுக்கு நல்வழி காட்டவும், அவர்களுக்கு வரும் இடையூறுகளைத் தீர்த்து மகிழச்செய்யவும் எனக்கு அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

47. நாயினும் கடையேனாகிய எனக்கு வாசி நடத்திக்கொடுத்து பொருளும் புகழும் உன்திருவருளால் பெற்றதை அறியாது, எனக்கு வந்த பெருமைகளில் மயங்கி உன் திருவடியைத் தொடர்ந்து பூஜிக்காது இருக்கின்றேன். எனவே, உனது அருளால் கிடைத்த இந்தப் பெருமைகள் எல்லாம் உன் திருவடியைப் பூஜிக்காவிட்டால் தடைபட்டுப்போகும் என்பதை அறியமுடியவில்லை. எனவே, எனக்கு எத்தனைப் பெருமைகள் வந்தாலும், அத்தனையும் உனது திருவருளால் வந்தது என்று அறிந்து, உமது திருவடியை மறவாது பூஜிக்க அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

48. பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள் மற்றும் நமது முன்னேற்றத்திற்கு துணையாக இருந்தவர்களிடம் நன்றியுடனும், தயவுடனும் நடந்துகொண்டால்தான் இறையருள்பெற முடியும் என்பதை என்னால்

அறியமுடியவில்லை. எனவே, பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள் மற்றும் நமது முன்னேற்றத்திற்கு துணையாக இருந்தவர்களிடம் தயவுடனும், நன்றியுடனும் நடந்துகொள்ள எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

49. ஆசான் நிலை உயர்ந்தால் நாமும் நிலை உயர்வோம் என்று எண்ணி, தொண்டு செய்த தொண்டர்களை உணராமலும், அவர்களை மதியாமலும் என்ன கடுந்தவம் செய்தாலும் கடுகளவு சித்திபெற முடியாது என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே, தொண்டனுக்குத் தொண்டனாக இருந்து அவர்கள் மனம் மகிழும்படி நடந்துகொள்ள அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

50. ஒருவருக்கு வாசி நடத்திக்கொடுத்தால் சித்திபெற பலஆண்டுகள் ஆகும். **சீசனாம் எனத்தேர்ந்தால் மௌனம் சொல்வார் சிற்றெறும்பு ஊறையிலே கல்லில் குளி விழுந்தாற்போல்** என்று மகான் கொங்கண மகரிஷி அருளியுள்ளார். நானோ விரைவில் சித்தி பெறவெண்டும் என்று ஆசைபட்டு தளர்ச்சி அடைகிறேன். எனவே இதுபோன்று அவசரபட்டு தளர்ச்சி அடைகிறேன். எனவே இதுபோன்று அவசரபடாமல் தொடர்ந்து உமது ஆசிபெற்று ஞானம் சித்திபெற நீ எனக்கு அருள்புரிய வேண்டுமென்று வேண்டிக்கேட்டேன்.

51. எல்லாவகைப் பாவங்களும், குணக்கேடுகளும் தீர ஏழைகளுக்குப் பசியாற்றிவைப்பதே பரிகாரம் என்பதை என்னால் அறியமுடியவில்லை. எனவே, ஏழைகளுக்குப் பசியாற்றவும், அதற்குத் தேவையான வாய்ப்பும் பொருளும் தந்து என்னை இரட்சித்து அருள வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

ஆசான் அகத்தீசரே மனமுவந்து என் உடம்பில் தங்கி பிறவிக்கு காரணமான அசுத்த தேகத்தை நீத்து ஒளி உடம்புபெற அருள்செய்ய வேண்டும் என்று கேட்டு வருகிறேன் என்று ஆசான் அகத்தீசர் மனமிறங்கி அருள் செய்கின்றாரோ அன்று சித்தி பெறுவது உண்மை. அதுவும், அவர் திருவருளே என்று அறிகின்றேன்.

எனவே, ஆன்மிக அன்பர்கள் ஆசான் அகத்தீசரையே தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும் எண்ணி ஆசான் அகத்தீசர் அருளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டிக்கேட்டேன்.

நாயினும் கடையேனாகிய அடியேன் உண்மைப்பொருளை உணர்ந்ததாக கற்பனை செய்து கொண்டு வாழ்கின்றேன். கல்லாத மூடனாகிய அடியேன் சொல்லுகின்ற கருத்துக்களில் குற்றங்கள் இருப்பது இயல்பே. கற்றுணர்ந்த சாற்றோர்களும் பெரியோர்களும் பொறுத்தருள வேண்டும் என்று திருவடிபணிந்து வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

திருச்சி, புத்தூரில் உள்ள அகத்தியர் நாடி ஜோதிடர் **A.A. தரணிபாலன்** அவர்களால் படிக்கப்பட்ட மகான் மாணிக்கவாசகர் நூல் வெளிவருவதற்கும் மற்றும் திருச்சி சங்கிலியாண்புரத்தில் உள்ள அகத்தியர் நாடி ஜோதிடர் V.T. பரணீதரன் அவர்களால் படிக்கப்பட்ட ஞானியர்களின் நூல்கள் வெளிவருவதற்கும் உற்ற துணையாக இருந்த அன்பர் மாதவன் அவர்களுக்கு எல்லாம்வல்ல மாணிக்கவாசகர் ஆசியும், ஆசான் அகத்தீசர் ஆசியும், மேலும் அவருக்கும் அவரது குடும்பத்தார்களுக்கும் மகான் இராமலிங்க சுவாமிகளின் ஆசியும் உண்டு.

மகான் மாணிக்கவாசகர் அருளிய பாடல்களில் ஒருசில பாடல்களுக்கு என் அறிவுக்கு எட்டியபடி விளக்கம் தந்திருக்கின்றேன். அதில் குறையிருப்பது இயல்பே கற்றுணர்ந்த சான்றோர்கள் குறைகளைப் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூல் வெளிவருவதற்கு உற்ற துணையாக இருந்த அன்பர் இரா. மாதவன் பல வேலைப்பளு இருந்தபோதிலும் இரவு பகல் பாராது பாடுபட்டுள்ளார். அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் எல்லாம்வல்ல ஞானிகளின் ஆசி உண்டு.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறவர்களுக்கு இந்த புத்தகம் மிகவும் பயன்படும் என்பதை நான் நம்புகிறேன்.

இங்ஙனம்,

**ரெங்கராஜ தேசிகன்.**

## திக்கெல்லாம் புகழ்வாய்ந்த மகான் திருமூலர் அருளிய திருமந்திரம்

## சிவகுரு தரிசனம்

மகான் திருமூலதேவரை தாயாகவும், தந்தையாகவும், நற்குருவாகவும் எண்ணி தினமும் காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் சமமான இடத்தில் வெண்ணிறத்துணியில் அமர்ந்து, ஒரு திருவிளக்கு ஏற்றி, நறுமணமுள்ள பத்தி வைத்தும் **ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் செய்தால் மும்மலமாகிய பாசதேகம் நீங்கி பதியாகிய தலைவனை அறியலாம்.

திருமூலர் திருவடியைப் பூஜித்தாலே ஆகமங்கள், வேதங்கள் இன்னும் அனேக சாஸ்திரங்களைப் படித்து அறியமுடியாத ஞான சூட்சமங்களை அறிந்து கொள்ளலாம். அவர் திருவடியே இடகலையாகிய சந்திரகலையையும், அவர் திருவடியே பிங்கலையாகிய சூரியகலையையும், அவர் திருவடியே பதியாகிய சுழிமுனையாக எண்ணி பூஜைசெய்தால் இடகலையாகிய பாசமும், பிங்கலையாகிய பசுவும் பதியாகிய சுழிமுனயைில் ஒடுங்கும். இதுவே ஞானமாகும். இதை நன்கு அறிய ஆசான் திருமூலதேவரே அருள் செய்ய வேண்டும். அவர் அருள் செய்தால்தான் நாம் அறியமுடியாதவற்றை அறிந்து தெளிவு பெறலாம்.

ஆகவே, அவர் அருளிய திருமந்திரம் சிவகுரு தரிசனம் என்ற இந்த நூல், மகான் மாணிக்கவாசகர் அருளிய நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. அன்பர்கள் படித்து பயனடையும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஆசான் திருமூலதேவரை பரப்பிரம்மம் என்றும், சிவன் என்றும் போற்றி பூஜிக்கவேண்டும்.

## சிவகுரு தரிசனம்

1573. பத்திப் பணித்துப் பரவு மடிநல்கிச்
சுத்த வுரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்துஞ் சதசத்துங் காட்டலாற்
சித்தம் இறையே சிவகுரு வாமே. 1.

பத்திப் பணித்து – பத்தியை உண்டாக்கி. பரவும் அடி நல்கி – திருவடியை வணங்கச் செய்து. சுத்த உரையாடல் துரிசறச் சோதித்து – பிரணவ உபதேசத்தால் குற்றங்களை நீங்கச் செய்து. சத்தும் அசத்துஞ் சதசத்துங் காட்டலால் – சத்தும் அசத்தும் சதசத்துமான பொருள்களின் உண்மை இயல்புகளை உள்நின்று உணர்த்தியமையால். சித்தம் இறையே சிவகுருவாமே – சித்தத்தில் உள்ள இறைவனே குருவாவன்.

சுத்த உரை – பிரணவம். இது சத்தியோ நிர்வாண தீட்சையாகும் : மந்திரம், கிரியை, பாவனையற்றது. பிரணவ உபாசகர்க்கு அசத்தாகிய பாசமும், சதசத்தாகிய பசுவும், சத்தாகிய சிவமும் விளங்கும்.

சிவகுரு சித்தமிசை குடிகொண்டு அறிவும் அறியாமையுமான பொருள்களின் இயல்புகளை உணர்த்துவான்.

1574. பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு
நேசித்த காயம் விடுவித்து நேர்நேரே
கூசற்ற முத்தியிற் கூட்டலா நாட்டத்த
தாசற்ற சற்குரு அம்பல மாமே. 2.

பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு – ஆணவத்தால் மறைப்புண்டு கிடந்த சீவனை மாயா மலத்தைக் கூட்டி ஆணவத்தை அகற்றி. நேசித்த காயம் விடுவித்து – உடலே தான் என்றிருந்த ஆசையை அறுத்து. நேர்நேரே கூசற்ற முத்தியிற் கூட்டலா நாட்டத்தது – நேருக்கு நேரே நிலை குலையாத முத்தியில் கூட்டுவதற்கு

உபகாரப்படுவது. ஆசற்ற சற்குரு அம்பலமாமே – உபாசகனின் ஒளி மண்டலத்தில் விளங்கும் உருவமற்ற சற்குருவாம்.

ஆணவம் – இருள். மாயை – ஒளி. கட்டிப் பறித்தல் – ஒளியால் இருளைப் போக்குதல். கூசுதல் – நிலைகுலைதல். கூசற்ற முத்தி – நிலையில் திரியாத முதல் நிலை.

சற்குருவின் அருளால் பாசநீக்கம் பெற்று முதல் நிலைக்குச் செல்லலாம்.

1575. சித்திகள் எட்டொடுந் திண்சிவ மாக்கிய
சுத்தியும் எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்
சத்தியும் மந்திர சாதக போதமும்
பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே. 3.

சித்திகள் எட்டொடும் – அணிமாதி சித்திகள் எட்டுனுடம், திண் சிவமாக்கிய சுத்தியும் – சாதகனைச் சிவமாகச் செய்த பக்குவ நிலையும். எண் சத்தித் தூய்மையும் – வாமாதி எண் சத்திகளால் பந்திக்காத தூய்மையும். யோகத்துச் சத்தியும் – யோகத்தால் உண்டாகும் ஆற்றலும். மந்திர சாதக போதமும் – மந்திரங்களைத் தியானிப்பதால் விளையும் ஞானமும். பத்தியும் – இறைவன்பால் உண்டாகும் அன்பும் ஆகிய எல்லாம். நாதன் அருளிற் பயிலுமே – சிவகுருவின் அருளால் நடைபெறும்.

எண்சத்தித் தூய்மையாவது – வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி ஆகிய எட்டும் பந்திக்காத சுத்தசத்திகளாவது. யோகத்துச் சித்தி – குண்டலினி சத்தியும் சிற்சத்தியும் சமமாகப் பொருந்துமளவு உயர்ந்து நிற்றல்.

சித்திகள் முதல் பத்தி ஈறாகச் சிவகுருவின் அருளால் அமைவன.

1576. எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக்கொண் டிங்கெ அளித்தலாற்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே. 4.

எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய் – இருநூற்று இருபத்து நான்கு புவனங்களையும் கடந்து விளங்குபவன் இப்பிரகிருதிமயமான உலகிலும் உள்ளவனாய். நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால் – நல்லவர்கள் உள்ளத்தில் சிறந்து விளங்கி அருள் புரிவதாலும், எல்லாரும் உய்யக் கொண்டிங்கே அளித்தலால் – எல்லோரும் உய்யும்வண்ணம் இம்மண்ணுலகிலேயே அருள் செய்வதாலும். சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே – பிரணவ சொரூபமாகவுள்ள நல்ல குரு சிவமேயாகும்.

பார் பதம் அண்டம் கடந்து நின்ற சற்குரு எல்லோர் உள்ளத்திலும் கலந்து அருளால் சிவமேயாகும்.

1577. தேவனுஞ் சுத்த குருவும் உபாயத்துள்
யாவையும் மூன்றா யுனக்கண் டுரையாலே
மூவாப் பசுபாச மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே. 5.

தேவனுஞ் சுத்த குருவும் – தேவனும் சுத்த குருவாகவும் உள்ள சிவன். உபாயத்துள் யாவையும் மூன்றாய் உனக்கண்டு – ஆகமத்துள் எல்லாம் பதி பசு பாசம் என்று மூன்றாகக் கருதுவது அறிந்து. உரையாலே மூவாப் பசுபாச மாற்றியே – உபதேசத்தாலே அழிவற்ற சீவனது பாசத்தை நீக்கியே. முத்திப்பால் யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே – குருபரன் அன்புகொண்டு முத்தியின்கண் யாவையும் அருளும்.

உபாயம் – தந்திரம், ஆகமம். உன்னல் – கருதல்.

சிவன் அன்புகொண்டு சீவரது தகுதிக்கேற்ப குருவாக வந்து முத்தி அருளும்.

1578. சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணா அதிமூடர்

பொய்த்தகு கண்ணான் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென் றடிபணி வாரே. 6.

சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மை செய்து – சுத்த சிவனே சீவர்களிடம் கருணைகொண்டு குருவாக வந்து மலக் குற்றத்தினை நீக்கி. அத்தனை நல்கருள் காணா அதிமூடர் – அத்துணை புரியும் அருளினைக் காணாத அறிவிலிகள். பொய்த்தகு கண்ணான் நமர் என்பர் – பொய் மிகுந்த புவன போகங்களையே பொருளெனக் கண்டறியும் பாசம் பற்றியவர் குருவை நம்மவர் என்று தம்மோடு ஒப்பவைத்து எண்ணுவர். புண்ணியர் அத்தன் இவன் என்று அடிபணிவாரே – சிவபுண்ணியமுடைய ஞானியர் சிவனே இவன் என்று அடிபணிந்து வணங்குவர்.

தூய்மை செய்து அருளலாவது, குருவானவர் தன்னருட்சத்தியால் சீடனது பாசத்தை நீக்கிச் சிவனை வெளிப்படுத்திக் காட்டல். இது சத்தியோ நிர்வாணம் என்ற தீட்சையைச் செய்யும் சத்தியுடைய குருவால் நிகழ்வது.

சிவனே குருவாக வந்து அருளுகிறான் என்பதை ஞானியர் உணர்வர்.

1579. உண்மையிற் பொய்மை ஒழித்தலும் உண்மைப்பார்
திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்
வண்மையும் எட்டெட்டுச் சித்தி மயக்கமும்
அண்ணல் அருளன்றி யாரறி வாரே. 7.

உண்மையிற் பொய்மை ஒழித்தலும் – ஞானத்தால் பொய்மை நீக்குதலும். உண்மைப்பார் திண்மையும் – பிருதிவி தத்துவத்தின் வலிமையும். ஒண்மைச் சிவமாய அவ்வரன் வண்மையும் – சிவமாகிய அவ்வரனது உபகாரமும். எட்டெட்டுச் சித்தி மயக்கமும் – அறுபத்து நான்கு கலைகளால் வரும் மயக்க அறிவும். அண்ணல் அருளன்றி யார் அறிவாரே – அண்ணலின் சத்தி பதியாது யார் அறியமுடியும்?

பொய்மை ஒழித்தல் – இருளை நீக்குதல். உண்மைப் பார் திண்மை – பூமி தத்துவத்தின் கீழிழுக்கும் சத்தி. சிவமாய அரன் – சிவமே மூலாதாரத்தில் அரன்,

பயில் உருத்திரனைப் பரசிவன் எனலும் – சதாசிவ ரூபம். வண்மையாவது, உலகக் கவர்ச்சியினின்றும் நீக்கி மேலேறச் செய்வது. சித்திகள் ஞானம் பயவாமையின் சித்தியை மயக்கம் என்றது.

குருவருளால் அஞ்ஞானம் நீங்கி இறைவனது உபகாரம் விளங்கும்.

1580. சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனஅடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே. 8.

சிவனே சிவஞானியாதலால் – சிவனே சிவஞானியாக அமைவதால். சுத்த சிவனேயென அடிசேர வல்லார்க்கு – தனக்கு அடைவர்க்கு. நவமான தத்துவ நன்முத்தி நண்ணும் – சிவத்தினது தோழமையும் நல்ல முத்தியும் பொருந்தும். பவமானதின்றிப் பரலோகமாமே – பிறப்பின்றி மேலான சிவலோகத்தைச் சென்றடைவர்.

சிவனேயென அடிசேர்தலாவது, இது சிவம் பண்ணிய மேனி என்று தெளிந்து பூசை செய்தல்.

புண்ணிய மண்டலம் பூசை நூறாகுமமாம்
பண்ணிய மேனி பத்து நூறாகுமாம் 1851–மந்.

நவம் – தோழமை. பவம் – பிறப்பு.
சிவகுருவை வழிபட்டார்க்குப் பிறப்பு இல்லை.

1581. குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. 9.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி – எனது குருமண்டலத்தில் விளங்கும் நந்தி குருவே சிவம் என உபதேசித்தான். குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும் – குருமண்டலமே சிவனுமாய் உயிருக்குத்

தலைவனுமாயுள்ளது. குருவே உரையுணர்வு அற்றதோர் கோவே – குருமண்டலமே வாக்கு உணர்வைக் கடந்து விளங்கும் அரசனாகும். குருவே சிவமென்பது குறித்து ஓரார் – இத்தகைய பெருமையுடைய குருமண்டலத்தில் சிவம் உள்ளிருந்து விளங்குவதைச் சாமானியர் அறியாதவராக உள்ளார்.

குரு – ஒளி மண்டலத்தில் விளங்கும் குரு. பாசத்தில் விட்டவரும், நீக்கியவரும் இவரே.

குருவே வாக்கு மனம் கடந்த பொருளாகவுள்ளது.

15823. சித்தம் யாவையுஞ் சிந்தித் திருந்திடும்
அத்தம் உணர்த்துவ தாகும் அருளாலே
சித்தம் யாவையுந் திண்சிவ மானக்கால்
அத்தனும் அவ்விடத் தேயமர்ந் தானே. 10.

சித்தம் யாவையுஞ் சிந்தித்திருந்திடும் – சீவர்களிடமுள்ள சித்த மண்டலம் தன்னறிவுக்கு வரவேண்டிய எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டிருக்கும். அத்தம் உணர்த்துவதாகும் அருளாலே – அருள் சத்தி பதிந்தவர்க்குச் செம்பொருளே உணர்த்துவதாகும். சித்தம் யாவையும் திண்சிவமானக்கால் – அந்நெறியே சித்தம் முழுமையும் வேறுபொருளுக்கிடமின்றிச் சிவத்துக்கே இடமாக்கினால். அத்தனும் அவ்விடத்தே யமர்ந்தானே – அத்தனாகிய சிவனும் அவ்விடத்தில் அமர்ந்தருளுவான்.

அத்தம் – செம்பொருள், சிவன், சித்தம் சிவமாதல் – சித்தத்தில் சிவனை வைத்து நினைத்தல், இதுவே தவம்.

சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே – மந்திரம் 1644.

சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் – திருவாசகம்.

குருவருளால் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தால் சிவன் விளங்குவான்.

1583. தானந்தி சீர்மையுட் சந்தித்த சீர்வைத்த
கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை
வானந்தி யென்று மகிழும் ஒருவற்குத்

தானந்தி யங்கித் தனிச்சுட ராமே. 11.

தான் நந்தி சீர்மையுட்சந்தித்த சீர்வைத்த – சிவமாகிய தானே விளங்கும் சிறப்பான குருமண்டலத்துள் பொருந்துவதால் அமையும் பெருமையை வைத்த. கோன் நந்தி எந்தை குறிப்பு அறிவாரில்லை – தலைவனாகிய நந்தி எம்பெருமானது குறிப்பை உணர்வார் இல்லை. வான் நந்தியென்று மகிழும் ஒருவற்கு – ஆகாயத்தில் குரு மண்டலத்தில் விளங்குபவன் என்று மகிழ்ந்திருப்பார்க்கு. தான் நந்தி அங்கித் தனிச் சுடராமே – முன்னர் அக்கினி மண்டலத்தில் விளங்கிய அரனே ஒப்பற்ற சிவசூரியனாகும்.

குறிப்பு : ஆகாயத்தில் குரு மண்டலத்தில் சந்திக்க வேண்டும் என்ற குறிப்பு.

நந்தியெம்பெருமானது குறிப்பினை அறிவார்க்குச் சுடராகக் காட்சியளிப்பான்.

1584. திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
*உருவாய் வரவிடி லோரஒண் ணாதே 12.

*பாடபேதம் : உருவா யருளாவிடி.

திருவாய சித்தியும் – ஞானமாகிய பேறும். முத்தியும் – அதன் பயனான முத்தியும் சீர்மை மருளாத அருளும் – அச்சிறப்பினில் மயங்காத அருளும். மயக்கறும் வாய்மைப் பொருளாய வேதாந்த போதமும் – அஞ்ஞானம் நீங்கும் உண்மைப் பொருளாய வேதாந்த ஞானமும். நாதன் உருவாய் அருளாவிடில் ஓர ஒண்ணாதே – குருநாதன் மானிடச் சட்டை தாங்கி வராவிட்டால் அறியவெண்ணாதாகிவிடும்.

வேதாந்த போதமாவது, அது நீ ஆகிறாய் என்பது.
குருவருளால் மயக்கம் நீங்கி ஞானம் கிட்டும். 12.

1585. பத்தியும் ஞானவை ராக்கிய மும்பர
சித்திக்கு வித்தாஞ் சிவோகமே சேர்தலான்
முத்தியின் ஞான முளைத்தலால் அம்முனை
சத்தி யருள்தரில் தானெளி தாமே. 13.

பத்தியும் ஞான வைராக்கியமும் – சிவத்தினிடம் பத்தியும், அதனால் ஞானத்தைப் பெறவேண்டும் என்ற வைராக்கியமும். பரசித்திக்கு வித்தாம் – வீடுபேறடையச் சாதனங்களாம். சிவோகமே சேர்தலால் – அவற்றால் சிவமே தான் என்ற பாவனை முதிர்ந்து. முத்தியின் ஞானம் முளைத்தலால் – வீடுபேற்றுக்கு ஏதுவான ஞானம் தோன்றி. அம்முனை சத்தி அருள்தரில்தான் எளிதாமே – அந்த ஞானப் பயிர் சத்தியின் அருளால் எளிதாக வளர்ந்து முத்தி கிட்டும்.

வைராக்கியம் – விஷயங்களில் பற்றின்மை.

சிவகுருவினிடம் பத்தியினாலே வைராக்கியமும் ஞானமும் தோன்றி முத்தி கிட்டும்.

1586. பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு
மன்னெய்த வைத்த மனமது தானே. 14.

பின்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை. இவ்வுலகில் நான் வீடுபேறடைவதற்காக அமைத்த இன்பப் பிறப்பை. முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை – முன்னமே எனக்கு உதவிய முதல்வனாகிய இறைவனை. தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படும் – ஞானத்தால் அடையுங் காலத்தில் அவன் என்னிடமாகத் தானே வெளிப்படுவான். மன்னெய்த வைத்த மனமதுதானே – அங்ஙனம் எனது தலைவனை அடையத் துணை செய்தது என்னுடைய மனமேயாகும்.

மனத்தை அகண்டத்தில் வைத்தபோது இறைவன் சீவனில் வெளிப்பட்டருளுவான்.

1587. சிவமான ஞானந் தெளியவொன் சித்தி
சிவமான ஞானந் தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. 15.

சிவமான ஞானந் தெளிய ஒண்சித்தி – அகண்டமான சிவஞானம் தெளியவே சிறந்த சித்திகள் உண்டாம். சிவமான ஞானந்தெளிய ஒண்முத்தி – அத்தகைய சிவஞானத்தில் நின்று மேலும் தெளிய சிறந்த முத்தி கிட்டும். சிவமான ஞானஞ் சிவபரத்தே ஏக – சிவமான ஞானத்தால் சிவம் ஆன்மாவில் நிலைபெற. சிவமான ஞானஞ் சிவானந்தம் நல்குமே – சிவமான ஞானத்தினால் சிவானந்தம் விளையும்.

பரம்–தத்துவங்களை விட்ட ஆன்மா. சிவம் பரத்தில் நிலை பெறுவதே முத்தி நிலை.

சிவஞானத்தால் சிவம் ஆன்மாவில் விளங்கச் சிவானந்தம் உண்டாம்.

1588. அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை
பிறிந்தொழிந் தேனிப் பிறவியை நானே. 16.

அறிந்துணர்ந்தேன இவ்வகலிடம் முற்றும் – நான் நூலறிவினால் அறிந்தும் அநுபவத்தால் உணர்ந்தும் இவ்விரிந்த உலகங்களையெல்லாம் கண்டேன். செறிந்துணர்ந்து ஓதித் திருவருள் பெற்றேன் – சிவத்தோடு பொருந்திச் சிவத்தைத் தியானித்து சிவத்தின் அருளைப் பெற்றேன். மறந்து ஒழிந்தேன் மதிமாண்டவர் வாழ்க்கை – அறிவில்லாதவர் கூட்டத்தை விட்டு ஒழிந்தேன். பிறிந்து ஒழிந்தேன் இப்பிறவியை நானே – அதனால் இப்பிறவியை நீங்கினேன்.

சிவத்தோடு பொருந்தி அருள் பெற்றமையால் பிறவியை நீங்கினேன்.

1589. தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாங் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற இந்தப் பிணக்கறுத் தெல்லாங்
கருக்கெண்ட ஈசனைக் கண்டுகொண்டேனே. 17.

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாங் தலைவன் – வினைக்கீடாகப் பெற்ற உடல் முதலியவற்றைச் சுமக்கின்ற பல்லுயிர்க்கெல்லாம் தலைவனாகிய இறைவன். இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார் – எவ்வாறு சீவர்களோடு பொருந்தி இயக்குகின்றான் என்பதை எவ்வகையாலும் அறியார். பிரிக்கின்ற இந்தப் பிணக்கறுத் தெல்லாம் – சீவர்கள் அறியாவகை பிரிக்கின்ற தடைகளை நீக்கி. கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண்டேனே – எல்லா உயிர்களையும் தன்கருவில் கொண்ட இறைவனை நாம் கண்டுகொண்டேனே.

கரு – கருப்பம். இருநூற்றிருப்பது நான்கு புவனங்களுக்கும் சிவம் ஆதாரமாகவுள்ளது.

இறைவன் குருவாக வந்து தடைகளை நீக்கியபோது கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண்டேன்.

**பரமானந்த சதாசிவ சற்குரு**
**தவத்திரு. ரெங்கராஜ தேசிகா சுவாமிகள் அவர்களின்**
**உபதேசம்**

## குரு பக்தி

குரு பக்தி செலுத்தவேண்டும், அந்த பக்தியும் யாரிடத்தில் செலுத்த வேண்டும், எப்படி செலுத்த வேண்டும் என்பதை அறிந்துகொண்டு பக்தி செலுத்தவேண்டும். இதனுடைய விளக்கம் தெரியாமல் பக்தி செலுத்தினால் காலம்தான் வீணாகுமே தவிர அதனால் எந்த காரியமும் நடக்காது.

நாம் தினசரி பிரம்ம முகூர்த்தமாகிய அதிகாலை 4.30 மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு தீபம் ஏற்றி நறுமணமுள்ள பத்தி வைத்து சமமான இடத்தில் ஒரு வெண்ணிற துணியில் அமர்ந்து (திசை முக்கியமல்ல, பக்திதான் முக்கியம்) **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று காலை

30 நிமிடமும் மாலையில் 30 நிமிடமும் முடிந்தால் இரவு 12.00 மணிக்கு 30 நிமிடமும் நாமஜெபமாகிய பூஜை செய்துவந்தால் சத், அசத் அல்லது தூல சூட்சுமத்தை அறிந்துகொள்ளலாம். ஜென்மத்தைக் கடைத்தேற்ற உற்ற துணையாகவும் இருக்கும். சத், அசத்தை அறிந்தாலே முக்தி நெறிக்கு வழிவகுக்கும். மேலும் விடுபேறும் அடையலாம்.

அசத்து என்பது மும்மல தேகமாகும். அதில் சத்தாகிய சூட்சும தேகம் அடங்கியுள்ளது. மும்மலமாகிய தூல தேகத்தின் மாசாகிய அசத்தை நீக்கினால் சுத்தமாகிய சத்தே ஒளி உடம்பாகும். இந்த நுட்பத்தை ஆசான் அகத்தீசன் ஆசி இல்லாமல் அணுஅளவும் நம்மால் அறிந்துகொள்ள முடியாது.

அசத்தாகிய மும்மலந்தான் அஞ்ஞான காசமாகிய அறியாமையை உண்டுபண்ணுகிறது. அதன் காரணமாகத்தான் பாவபுண்ணியத்தை அறியாமல் செய்படுவதுதான் மீண்டும் மீண்டும் பிறவிக்கு காரணமாக அமைகிறது. ஆசான் அகத்தீசன் ஆசி இருந்தால்தான் அறியாமைக்கு காரணம் மும்மலம் என்னும் அசத்தாகிய உடல் குற்றமாகிய காமதேகமே என்று அறியமுடியும். ஆசான் அகத்தீசர் திருவடியை பூஜிக்க பூஜிக்க அசத்தாகிய மும்மல குற்றத்தை அறிந்துமெல்ல நீக்கிகொள்ள முடியும்.

ஆசான் திருவடியை பூஜிக்கபூஜிக்கத்தான் சத், அசத்தை பற்றி அறியமுடியும். ஆசான் அகத்தீசரே நமது அகமும், புறமும் இருந்து மீண்டும் மீண்டும் பிறவிக்கு காரணமாயும், அறியாமைக்கு காரணமாயும் உள்ள அசுத்த தேகத்தை மாற்றி சுத்த தேகமாக ஆக்குவார்கள். ஆசான் அகத்தீசர் சுத்த தேகமாகிய ஒளிஉடம்பு பெற்றதால்தான் பலகோடி யுகங்கள் மரணமில்லா பெருவாழ்வு பெற்றுள்ளார். அவருடைய ஆசியால்தான் நவகோடி சித்தர்களும் சத், அசத்தை அறிந்து அசத்தை நீக்கி, சத்தாகிய சுத்த தேகத்தை பெற்றுள்ளார்கள். இதற்கு பக்தி கலந்த யோகமே முக்கியமாகும்.

ஆசான் அகத்தீசன் ஆசி பெறவேண்டுமென்றால் ஜீவகாருண்யத்தை கடைப்பிடித்தால்தான் முடியும். ஜீவ தயவு உள்ளவர்கள்தான் பிறருக்கு பசியாற்றுவார்கள். பசியாற்றும்பொழுது பசியாறிய ஆன்மாக்கள் மகிழ்ச்சி

அடைகிறது. அந்த மகிழ்ச்சியே பசியாற்றிய ஆன்மாவிற்கு ஆக்கத்தை உண்டுபண்ணுகிறது. அவ்வாக்கமே ஆசான் அகத்தீசர் ஆசிபெற உற்றதுணையாக அமைகிறது. ஜீவதயவு உள்ளவர்களுக்குத்தான் ஆசான் அகத்தீசர் அருள்செய்வார்.

ஆசான் அகத்தீசர் திருவடியை பூஜை செய்யச்செய்ய நித்தியம் அநித்தியத்தை அறிந்துகொள்ள முடியும். (நித்தியம் என்பது நிலையானது, அநித்தியம் என்பது அழியக்கூடியது) அவர் ஆசியால்தான் அநியத்தை நித்தியம் ஆக்கிகொள்ள முடியும். அவர் ஆசியே நமக்கு அறிவாகவும், அவர் ஆசியே முன்செய்த பாவங்கள் நீக்கவும், அவர் ஆசியே தெளிவான அறிவாகவும், அவர் ஆசியே தூல சூட்சமத்தை அறிவதற்கு உரிய அறிவாகவும், அவர் ஆசியே இடை, பின், சுழி முனையாகவும், அவர் ஆசியே இடகலையாகிய சந்திரகலையையும், பின்கலையாகிய சூரியகலையையும் சேர்த்து ரேசித்து, பூரித்து, புருவ மத்தியில் ஸ்தம்பிக்கவும் துணையாக இருக்கும். அவரே இடகலையையும் பின்கலையையும் சேர்த்து சுழிமுனையில் ஒடுங்கிவிடுவார். அப்படி ஒடுங்கினால் அசத்தாகிய களிம்பற்று, சத்தாகிய ஒளிதேகம் பெறுவார்கள். அவரே நம்மைச் சார்ந்திருந்து பிரணவ தேகம் ஆக்குவார். அவரே நமது பிரணவ தேகமாக மாறிவிடுவார். அவர்வேறு நாம் வேறு அல்ல என்ற நிலையை உருவாக்கிவிடுவார்.

ஆகவே பக்தியால் அன்றி வேறு எவ்வகை சடங்குகளினாலும் வீடுபேறு அடையமுடியாது என்பதை ஆன்மிக அன்பர்கள் அறிந்து எந்த நேரத்திலும் **அகத்தீஸ்வரா! அகத்தீஸ்வரா!! அகத்தீஸ்வரா!!!** என்று ஒரு நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ஆயிரம் முறையாவது ஆசான் அகத்தீசர் நாமத்தை சொல்லி வந்தால் மானுடர்கள் அறியமுடியாத ஒன்றை அறிந்து ஜென்மத்தைக் கடைதேற்றிக்கொள்ள முடியும்.

ஈரேழு பதினான்கு லோகத்தில் எந்த மூலையில் இருந்தும் அகத்தீஸ்வரா எனக்கு அருள்செய்ய வேண்டுமென்றால் அஞ்சேல் மகனே! என்று அருள்செய்யும் வல்லமை ஆசான் அகத்தீசருக்கே உண்டு. அழைத்து பாருங்கள் உண்மை தெரியும்.

ஆசான் அகத்தீசரை போற்றுவோம், வீடுபேறாகிய மோட்சம் பெற்று இன்புற்று வாழ்வோம்.

### பரமானந்த சதாசிவ சற்குரு

### தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களின் உபதேசம்

## ஆசான் அகத்தீசரே உண்மை குரு

84 லட்சம் பேதமுள்ள ஜீவராசிகளில் மனிதனே உயர்ந்தவன். அவனுக்குத்தான் வீடுபேறு(மோட்சம்) அடையும் வாய்ப்பு இருக்கிறது. அதற்கு உபாயம் – புலால் மறுத்தல், உயிர்க்கொலை தவிர்த்தல், பொறாமை, பேராசை, சினம், வன்சொற்கள் ஆகிய குற்றங்கள் தம்மிடம் தோன்றாதவாறு பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

மேலும் தினமும் ஆசான் அகத்தீசரை ஒரு திருவிளக்கு ஏற்றி, நறுமணமுள்ள பத்தி வைத்து, சமமான இடத்தில் வெண்ணிறத்துணியில் அமர்ந்து, ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி என்று காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும், முடிந்தால் இரவு 12 மணிக்கு 10 நிமிடமும் நாமஜெபம் செய்ய வேண்டும். திசை முக்கியமல்ல, பக்திதான் முக்கியம்.

நாமஜெபம் செய்துவிட்டு **ஓம் அகத்தீஸ்வரா!** தினமும் உமது திருவடியை மறவாமல் உருகி நாமஜெபம் செய்ய அருள்செய்ய வேண்டுகிறேன். எனக்கு ஞானத்திற்கு உரிய அறிவும், பரிபக்குவமும் இருக்க நீரே அருள்செய்ய வேண்டும். பிறவிக்குக் காரணம் காமதேகம்தான் என்பதை உமது திருவருளால் நான் உணர்ந்துகொள்ள வேண்டும். உமது திருவருளால் நான் உணர்ந்துகொள்ள வேண்டும். உமது திருவருளால், மும்மலமாகிய காமதேகத்தை வெல்வதற்கு நீர் எனக்கு அருள்செய்ய வேண்டும். உமது திருவருள் இல்லாமல் மும்மலமாகிய காமதேகத்தை அறிதலும் வெல்லுதலும் முடியாது. எனவே, நீர் எனது அகமும் புறமும் இருந்து எனக்கு உணர்த்தி அருள்செய்ய வேண்டும் என்று கேட்கவேண்டும்.

விடுபேறு அடைவது என்பதே நம்முள் அன்மஜோதியைக் காணுவதே ஆகும். அந்த ஆன்மஜோதியை அறிவதற்கும் குருவருள் வேண்டும். குருவருள் இல்லாமல் ஆன்மாவைப்பற்றியோ அல்லது ஆன்மஜோதியைப் பற்றியோ அறியமுடியாது.

அகத்தீஸ்வரா! உமது திருவருளால் பலகோடி மக்கள் ஞானிகளாகி இருக்கிறார்கள். நானும் உமது திருவடியைப் பூஜித்து ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறேன். நான் செய்த பாவங்கள் உன்திருவடியை உருகி தியானிக்க முடியாமல் செய்கிறது. நீரே நான் செய்த பாவங்களை நீக்கியும், உனது திருவடியை உருகி தியானிப்பதற்கும் எனக்கு அருள் செய்ய வேண்டும். உமது திருவருள் கடாட்சம் இல்லை என்றால், ஒரு கணப்பொழுதும் உன் திருவடியைப் பற்றமுடியாது. எனவே, இன்றுமுதல் என் உடல், பொருள், ஆவி அனைத்தும் உமது திருவடிக்கே சமர்ப்பனம் செய்கிறேன். என்னை கொத்தடிமையாக ஏற்று அருள் செய்வதால், உமக்கு எந்த நட்டமும் இல்லை. எனவே, என்னைப்போனற் பஞ்சமாக பாவிகளை அடிமையாக ஏற்று அருள்செய்ய வேண்டுகிறேன். உன்பெருமையைப் பேசினால் முன்செய்த பாவங்களும் தீரும், பலஜென்மங்களில் வாங்கிய சாபங்களும் நீங்கும். எனவே, உன்பெருமைகளை பேசவும், உமது திருவடிகளைப் பற்றவும் நீரே அருள்செய்ய வேண்டும்.

நான் பல ஞானநூல்களைப் படித்தாலும், அணுவளவும் உண்மைப்பொருளை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, என் சிந்தையில் சார்ந்திருந்து, படிக்கின்ற நூல்களில் உள்ள உண்மைப்பொருள்களை அறியவும் கடைப்பிடிக்கவும் நீரே எனக்கு அருள்செய்ய வேண்டும் என்று உமது திருவடிகளைப் பணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

**குறிப்பு 1 :** ஆசான் அகத்தீசன் ஆசிபெற வேண்டும் என்றால் மாதம் ஒருவருக்காவது அன்னதானம் செய்ய வேண்டும். ஒருவருக்கு அன்னதானம் செய்யும் மனம் வந்தாலே மேலும் பலருக்கு அன்னதானம் செய்வார்கள் என்பது நிச்சயம். பிறருக்கு பசியாற்றக்கூடிய எண்ணம் வந்தாலே, அவரிடம் எல்லாம்வல்ல பரம்பொருள் தங்கி அருள்செய்யும் என்பது உண்மையே.

**குறிப்பு 2 :** மனிதனை மீண்டும் மீண்டும் பிறவிக்குத் தள்ளுவது லோபித்தனமா, காமமா என்று பார்த்தால் காமத்தைவிட லோபித்தனம்தான் பிறவிக்குக் காரணமாக உள்ளது. ஆசான் அகத்தீசர் ஆசியிருந்தால்தான், லோபித்தனமும் நீங்கும், காமவிகாரமும் நீங்கும்.

**ஆகவே, ஆசான் அகத்தீசரைப் போற்றுவோம், தயைசிந்தை பெற்று விடுபேறு அடைவோம்.**

## மகான் மாணிக்கவாசகர் ஆசி காண்டம்

**04 – 04 – 2003**

**நூலாசான் : யுயு. தரணிபாலன், ஸ்ரீ அகத்தியர் நாடிஜோதிடர், 15/3 ஈ.வே.ரா. ரோடு, சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் பின்புறம், புத்தூர், திருச்சி – 620 017.**

மகாராஜ யோகியே அரங்கா போற்றி
மகாராஜ சக்தியே அரசா போற்றி
மகாராசன் ஆனதொரு தேசிகா போற்றி
மாணிக்கமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே மாணிக்க வாசகர்யானும்
புகலவந்தேன் ஆசியின் இப்பாகம்தான்
பார்காக்க அவதாரம் கொண்டாயப்பா
பாருலகில் மன்னவனுக்கு மன்னவன் நீயே 02.

மண்ணாளும் அதிகாரம் உனக்கே தந்தோம்
மகானாக அதிகாரம் உனக்கே தந்தோம்
விண்கலக்கும் அதிகாரம் உனக்கே தந்தோம்
வேதமதில் புதுவேதம் படைப்பதற்கும் 03.

அதற்குமே அதிகாரம் தந்தோமப்பா
அவனியில வாழையடி வாழையாக
பூதலத்தில் தவம்புரிந்து நீயும்வந்தாய்
பூவுலகில் வருவாய்நீ தனிமையாக 04.

ஆகவே முன்னூழின் (முற்பிறப்பில்) புண்ணியங்கள்
அவனியிலே இன்னூழின் (இப்பிறப்பில்) புண்ணியங்கள்
யோகசக்தி மிகுந்திருக்க யானும் கண்டேன்
உன்தனை வாசகன்யான் விடமாட்டேன் என்பேன் 05.
(கைவிடமாட்டேன்

என்பேனே பொன்னிநதி எல்லைதன்னில்
இவ்வுலகில் புனிதமாவாய் என்று சொல்வேன்
உண்மையுடன் புதுயுகத்தை நீ படைப்பாய்
உலகத்தில் பலருமே வியப்பார்தானே 06.

வியப்பார்கள் என்விழாவாம் சன்மார்க்கவிழா
விளம்பிட்டேன் சன்மார்க்க சங்கவிழாவும்
வியப்புடனே எல்லையில்லா ஆற்றலுடன்
வருமாண்டில் நடக்குமப்பா ஆசியுண்டு 07.

உண்டான பலதேச மாந்தர்களை
ஓங்கார குடிலதற்கு வரவழைப்போம்
கொண்டுரைப்போம் சுத்தசன் மார்க்கம்தனை
குருநாதர் உன்மார்க்கம் சன்மார்க்கமே 08.

சன்மார்க்க சங்கமென்றால் ஓங்காரக்குடிலே
சாகாகல்வி போதிப்பதிலும் ஓங்காரக் குடிலே
துன்மார்க்கம் நீக்குவதும் ஓங்காரக் குடிலே
தீட்சைகளை அளிப்பதும் ஓங்காரக் குடிலே 09.

ஓங்கார குடிலதுவே பரம்பொருளைகாட்டும்
ஓங்கார குடிலதுவே பாக்கியத்தை அளிக்கும்
ஓங்கார குடிலதுவே பெரும்வழியில் செல்லும்
ஓங்கார குடிலே பேதத்தை அகற்றும் 10.

அகற்றியே முனைசூட்சம்(சுழிமுனை இரகசியம்) சொல்லுமப்பா
அருளோடு முக்திதரும் ஓங்காரக்குடிலே
யகாரத்தை உணரவைக்கும் ஓங்காரக்குடிலே
யான்எனது நீக்குவதும் ஓங்காரக்குடிலே 11.

குடிலமர்ந்து உலகோரை வான்கலக்கவைக்க
குருதீட்சை நீ அளிப்பாய் வான்கலப்பாய்
தேடியே வாசியோகம் செல்லவேண்டாம்
தெரிவிப்பேன் வேதமுடன் இதிகாசங்கள் 12.

பக்தியால்தான் யோகசக்தி சித்திக்கும். பக்தியில்லா வாசியோகத்தால் பயன் இல்லை.

இதிகாசம் புராணம் ஆகமம்பயன்தர
இவ்வுலகில் சுத்தசன் மார்க்கசக்தி சாரும்
மேதினியில் பயனளிக்கும் என்று சொல்வேன்
மேன்மைபெற அடையோகம் தேவையில்லை 13.

சன்மார்க்கத்தைப் பற்றி அறியவைப்பதே மகான் மாணிக்கவாசகர் திருவடி பூஜைதான். எனவே, மகான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜித்தால், அவரே அகமும் புறமும் இருந்து சன்மார்க்கத்தைப் பற்றி உணர்த்துவார். ஆகவே, காலையில் 30 நிமிடமும், மாலையில் 30 நிமிடமும் ஒரு வெண்ணிறத் துணியில் அமர்ந்து **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபமாகிய பூஜை செய்தால், நாம் பலகோடி ஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கி, புண்ணியம் பெருகும், சிறப்பறிவு உண்டாகும், தன்னைத்தான் அறியலாம், தகைமையும் பெறலாம்.

தேவையே சீவர்கட்கு அன்னமிட்டால்
தெரிவிப்போம் அதுபோதும் பயனளிக்கும்
(அன்னதானத்தால்தான் ஞானம் சித்திக்கும்)

அவனியிலே அறங்கள்பல புரிந்தாய் நீயே
அவனியதை காக்குமப்பா உன்தன்சக்தி 14.

சக்தியாய் உலகமும் ஒருகுடையில்
சாற்றியே ஒடுங்கியே குடிலின்வாசம்
பக்குவமாய் சன்மார்க்கம் வளர்த்தாய் நீயே
பொன்மார்க்கம் என்மார்க்கம் சன்மார்க்கம்தான் 15.

சன்மார்க்க விழாவை செகத்தின்விழா என்போம்
சன்மார்க்கம் சாராவிட்டால் துன்மார்க்கமே பற்றும்
சன்மார்க்க விழாவதும் சாகாகலை சொல்லும்
சத்தியமே சொன்னேனே மாணிக்கன் யானும் 16.

தமிழ்நாடு, திருச்சி மாவட்டம், துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க ஓங்காரக்குடிலில் இருந்து ஒரு செய்தி வெளியெ வந்தால், அது சாகாக்கல்வியை வெளிப்படுத்துவதாகும்.

யான்பெற்ற பேரின்பம் அரங்கன் பெறுவான்
யேறாத நிலையில்தான் ஏற்றிவைப்பேன்
என்மைந்தன் அரங்கனை உலகமறிந்து கொள்ளும்
இறைஆசான் அரங்கரே இனிமைதரும் ஆசான் 17.

ஆசான்ஆசி பெறுகின்ற வேளைதன்னில்
அவணியில்இனி வெண்சர்க்கரை ஈதல் ஆகா
நேசமுடன் புழுக்காத சர்க்கரைஈய
நிலமதனில் ஆசியதை அளித்தேன் அப்பா 18.

அப்பனே தீட்சைவிழா பொறுப்புகளும்
அவணியிலே பொருள் நிர்வாக பாதுகாப்பும்
தப்பாமல் பின்நூலில் உரைப்பேன்யானே
தரணியிலே உலகளவில் விழாசிறக்கும் 19.

சிறக்குமே ஞானிகளின் ஆசிஉண்டு
சிறப்பாக வள்ளலுக்கு ஆண்டவர்தான்
(அருட்பிரகாச வள்ளலார்)
சிறந்திடவே அருள்செய்தார் என்றுசொல்வேன்
சிறப்புபெற வள்ளலும் வான்கலந்தார் 20.

கலந்தாரே வள்ளல்அருள் உனக்குள்உண்டு
கலந்திடுவார் வான்கலப்பாய் சத்தியம்தான்
கலந்திடவே அன்பர்கள் யாவருமே
கவனமுடன் அகவலை உரைத்திடல் வேண்டும் 21.

வேண்டியே மகாமந்திரம் சொல்லல் வேண்டும்
விளம்பிடுவேன் ஓங்கார குடிலில்தானே
உண்மையுடன் சக்திகளும் விளங்குமப்பா
உன்மார்க்கம் என்மார்க்கம் என்றுசொல்வேன் 22.

சொல்லிடுவேன் உன்மார்க்கமே இனிநிலைத்து நிற்கும்
சிறப்பின்றி மற்றவையெல்லாம் மண்ணில் மறையும்
நல்விதமாய் உன்வழி அடைந்தவர்க்கு
நானிலத்தில் துன்பம்இனி அணுகாதப்பா 23.

அப்பனே அருளாசி வல்லமையால்
அவரவர்க்கும் பரிபூரண ஆயுள்உண்டு
ஒப்பில்லா ஆசான்உன் ஆசிதன்னால்
உயர்வுடனே வாழ்ந்திருப்பார் ஆசிஉண்டு 24.

உண்டான நீ வான்கலப்பது உண்மை
உன்னோடு மட்டுமே நான் கலப்பேனப்பா
உன்னுடலை வள்ளல்(வள்ளலார்) சார்வது சத்தியமே
உரைத்தஇது வள்ளலின் வாக்குதானே 25.

வாக்குதான் மாணிக்க வாசகராசி
வழுத்திட்டேன் இதன்காலம் அறிவாயப்பா
ஊக்கம்தரும் உன்தனுக்கு உறுதுணையாக
உரைக்கவந்த நூலாசான் இருவருமே 26.

இருவருமே உந்தன் இரு புசங்களாக
உந்தன்இரு பிள்ளைகளாக மட்டுமின்றி
இருகரங்களாக செயல்பட்டு குடிலும் ஓங்க
இவ்வுலகில் செயல்புரிவாய் என்று சத்தியம் 27.

சத்தியமும் செய்திடுவார் ஏற்றுக்கொள்வாய்
செகம்முழுதும் உன்புகழ்இனி ஓங்கும் ஓங்கும்
சுத்தசன் மார்க்கமிது உலகை காக்கும்
சித்தர்வழி நூலெல்லாம் உன்னை பாடும் 28.

பாடுமே பலர்வியக்க செயலை காண்பாய்
பாருலகில் மாணிக்க வாசகன் அளித்தேனாசி
நாடியே குடில்நாடி உரைத்தேன் இன்னாள்
நாட்டிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றே. 29.

.....சுபம்.....

## மகான் மாணிக்கவாசகர் ஆசிகாண்டம்

**09 – 06 – 2003**

நூலாசான் : A.A. தரணிபாலன்

அருளாகி அகிலத்தின் ஒளிவிளக்காகி
அறம்செய்யம் அறமாகி ஆசானாகி
உருவாகி உலகோர்க்கு உண்மையாகி
ஊக்கமாகி மாந்தர்கட்கு ஞானமாகி 01.

ஞானமாகி ஞாலமாகி சித்தியாகி
நாதமாகி வேதமாகி போதமாகி
கானமாகி மாரியாகி(மழை) கருணையாகி
காப்பாகி கோப்பாகி மூப்பறுத்து 02.

அறுத்திட்ட அன்பாகி இன்பமாகி
அகிலத்தை ஆளுகின்ற வல்லமையாகி
திருவாகி தெவிட்டாத கவியுமாகி
தீஞ்சுவையாய் தமிழுரைக்கும் அரங்கா வாழ்க 03.

வாழ்கவென கிழவன்யான் வாசகன் சொல்வேன்
வையகத்தில் உனக்காக மகிழ்ச்சிகாக
ஆழ்ந்து பலமுறை சொல்வேன் கிழவன்என்று
அஞ்ஞானி அறிவானோ இந்த சொல்லை 04.

சொல்லுதற்கும் முடியுமோ பிறரும் என்னை
சுத்தமுடன் ஒருகணத்தில் அழித்துநிற்பேன்
கல்விகற்க மேதையெல்லாம் எங்களுக்குப் பேதை
கருணைகொண்ட நீயெல்லாம் எனக்குமேதை 05.

மேதையற்கு மெய்ஞ்ஞானம் சித்தியாகும்
மேல்கல்வி விருதாய்வு எதற்காகும் செயல்
ஆதிஅடி முடிஅறியா மூடர்கட்கு
அறைவோமோ அன்புகொண்டு ஒருநாளுமில்லை 06.

ஒருநாளும் எனைஅறியார் ஒன்றும் அறியார்

(மகான் மாணிக்கவாசகர் பெருமையை அறியாதவன் என்ன கற்றும் கல்வியில்லாதவனே. எனவே, மகான் மாணிக்கவாசகர் பெருமையை அறிதலும், அவர் திருவடியைப் பற்றி பூஜிப்பதும், ஆன்மீக அறிவுடையவர்களின் செயலாகும். எனவே மகான் மாணிக்கவாசகரை ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி என்று காலையில் 30 நிமிடமும், மாலையில் 30 நிமிடமும் நாமஜெபமாகிய பூஜைசெய்தால் எண்ணிலடங்கா சித்திகளும் பெறுவதோடு முன்செய்த பாவங்களும் தீரும். நமது அறியாமை காரணமாக பல ஜென்மங்களில் வாங்கிய சாபங்களும் தீரும். ஆகவே, மகான் மாணிக்கவாசகரை போற்றுவோம், அவர்கள் திருவடியைப் பூஜித்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வோம்.)

**ஒருகணத்தில் நீஅறிவாய் அறியவைப்பேன்**

மகான் மாணிக்கவாசகர் திருவடியை பூஜித்தால் அறியமுடியாத ஞான சூட்சமங்களை அகத்தும் புறத்தும் இருந்து உணர்த்துவார். **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்று சொன்னால் ஓராண்டு செய்த பாவங்கள் தீரும். தொடர்ந்து பூஜிப்பவர்களுக்கு பல ஜென்மங்களில் செய்த பாவங்களும் தீரும். ஞானமும் சித்திக்கும்.

திருவாக்கு உலகத்தில் உனக்கு மட்டும்
திரிலோகம் உனக்குமட்டும் அடங்கிநிற்கும் 07.

அடங்குமே பூதங்கள் உனக்கு அஞ்சி
அடங்குமே புலன்களும் பொறியும் அங்கே
முடங்காது முனைவெற்றி ஒருவனுக்கே
முன்நிற்க வாசகன்யான் இணைந்துசெய்வேன் 08.

ஓங்காரக்குடிலாசான், குருநாதர், தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளின் சுழிமுனை வாசலைத் திறப்பதற்கு ஆசான் மாணிக்கவாசகர் உற்றதுணையாக இருப்பேன் என்று அருளியுள்ளார்.

செய்வதெல்லாம் எங்களுக்கு பொழுதுபோக்கு
சித்திக்கு வந்துமாண்டோர் கோடாகோடி
மெய்யறியா பகட்டிற்கு அழிந்தோர்கோடி
மேனிக்கு தீனிதந்து மாண்டோர் கோடி 09.

கோடியில்நீ ஒருவன் தான் அதனால் உன்னை
குருவாகி குவலயத்தை காப்பதற்கு
தேடிவந்து நூல்சொல்ல ஆணையிட்டேன்
திரவியம்தான் கோடியே தந்திட்டாலும் 10.

தந்தாலும் திறப்போமோ எங்கள்வாயை
தர்மமிலா பாவியர்க்கு என்வாக்குஏது
வந்திடுமோ என்வாக்கு பிறர்தனக்கு
வான்கலக்க உனக்குமட்டும் தகுதிசொன்னோம் 11.

சொன்னதொரு தர்மத்தை நிலையாய்நாட்டி
சுத்தமான சங்கத்தை நிலைநிறுத்தி
அன்போடு சன்மார்க்கம் உலகில் நிற்க
அன்றுமுதல் இன்றுவரை பற்றைவிட்டு 12.

விட்டுநீ இன்றுகூட சங்கம் தன்னை
விளங்குதற்கு பொறுப்பாக நியமனம் செய்து
இட்டமுடன் வழிநடத்த தியாகத்தோடு
இருப்பதனால் என்வாக்கு உனக்குஇன்று 13.

இன்றுஇல்லை நாளைஇல்லை என்றும்வாக்கு
என்மூச்சும் உன்மூச்சும் ஒன்றுதானே
மன்னன்யான் மகானானேன் மன்னன்நீயும்
மகானாவாய் வாசகன்போல் வள்ளலாசி 14.
(வள்ளல் பெருமான் ஆசி)

ஆசிதான் சித்திபுரம் பார்வதிபுரமாய
அமைந்திடுமே சிதம்பரமாய் சத்தியவாக்கு
மாசற்ற ஞானிகளை உருவாக்கும் இங்கெ
மண்ணில்லை பொன்னென்று உலகமேசொல்லும் 15.

(ஓங்காரக்குடில் மண்ணை பொன் என்று உலகம் போற்றும்.)

சொல்லுகிறேன் வள்ளலும் உலகில் மீண்டும்
சுத்தமுடன் காட்சிதர வருவார் இங்கே
நல்லதொரு ஞானபுரம் சிதம்பரமாக
நானிலமே சொல்லும் அப்போ உண்மையாக 16.

உண்மையாய் ஆட்சிசெய்ய தகுதி ஆற்றல்
உன்ஒருவன் தனக்குமட்டும் வாசகன் தந்தேன்
எண்ணத்தில் விகாரமிலா இருப்பவன் நீயே
இருக்கார்பலர் விகாரத்தை மூடிக்கொண்டு 17.

மூடியே மறைக்கின்ற மூடர்கட்கு
முக்தியும் சித்தியும் கிட்டுமோசொல்
தாடிசடை வளர்த்திடல் வருமோஞானம்
தங்கம் வெள்ளி அணிந்திட்டால் வருமோ ஞானம் 18.

ஞானமென்ன கடைசரக்கோ வாங்குதற்கு
நானென்ன சேவகனோ மற்றோர்க்கெல்லாம்
ஏன்உன்னை நாடுகிறேன் விளக்கம்கேளு
என்செயலை என்உருவை கொண்டவன்நீயே 19.

கொண்டதனால் குருவென்பேன் இறைவனென்பேன்
குருடர்கட்கோ மாணிக்கவாசகன் சொல்வேன்
கொண்டதொரு கொள்கையில் நீ நின்றவன் நீ
குவலயமே உன்னை சுற்றவைப்பேன் யானும் 20.

யானுனக்கு உலகமது உள்ளமட்டும்
எடுத்துரைப்பேன் என்வாக்கை பலவழியில்தான்

தேனாக மழைபொழிவேன் உனக்காகத்தான்
தீர்க்கமுடன் சன்மார்க்க விழாவைநானும் 21.
நானுமே வள்ளலுடன் இணைந்துநின்று
நடத்திடவே எண்ணியதோர் பொருளும் கிட்டும்
தானுனக்கு புரட்டாசிதீட்சை விழாவில்
தடையில்லா சித்துக்களை தருவேன் திண்ணம் 22.

திண்ணமதாய் உரைநடை நூல்களைதான்
தீர்க்கமாய் வெளியிடவே பலர் அதனால்
கண்டிடுவார் ஞானத்தை கரத்தால் தொட்டால்
கடையனையும் மடையனையும் ஞானியாக்கும் 23.

அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய திருஅருட்பா உரைநடை நூலை பார்த்தாலும், தொட்டாலும், படித்தாலும் அவர்கள் ஞானியாவார்கள். எனவே, அந்நூலைப் பயபக்தியோடு வாங்கி, படித்து ஆசிபெற வேண்டும்.

ஞானியாக்கும் சித்திதரும் விடாதுஅவனை
நரகத்தில் இருக்கின்ற பாவிகூட
கணப்பொழுது அந்நூலை நினைத்துவிட்டால்
கடந்தவனும் சொர்க்கத்தை அடைவான் திண்ணம் 24.

வள்ளலார் அருளிய உரைநடை நூலை மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் கொடிய புற்றுநோய் உள்ளவர்களும், நினைத்தாலே நோய் நீங்கும் என்பது மகான் மாணிக்கவாசகர் வாக்கு.

திண்ணமதாய் உன்கரமும் பட்டநூலை
தேடிவந்து வாங்குவோர்க்கு கோடிபங்கு வெற்றி
கண்டிடுவான் பிறவிப்பயன் அக்கணம் தொட்டே
கண்டிப்பாய் வள்ளல்சூழ்ந்து வாழவைப்பார் 25.

வாழவைக்க மகான்களே துணையாய்நிற்பார்
வகையான சன்மார்க்கம் பற்றிக்கொள்ளும்
ஊழறுக்க மார்க்கம் சொன்னேன் இதுவே உண்மை
ஊதாசினம் செய்வோர்க்கு வாக்குஏது 26.

வாக்குஏது வாழ்வுஏது மீண்டும்மீண்டும்
வந்துவந்து பிறந்துபிறந்து செய்வான்பாவம்
சாக்காட்டை நீக்குதற்கே சன்மார்க்கம்வேண்டும்
சாகாமல் இருப்பதற்கு குருதீட்சை வேண்டும் 27.

தீட்சையில்லா மாந்தர்கட்கு கூடாதுஞானம்
தெளிவறியான் ஒளிஅறியான் குருடன்போல
ஆட்டம்போட்டு அடங்கிடுவான் நரகத்துள்ளே
அஞ்ஞானம் ஒருகணத்துள் சூழ்ந்துகொள்ளும் 28.

சூழ்ந்திட்ட பாவத்தை போக்குவது எவ்வாறு
சுத்தசன்மார்க்கத்திற்கு செல்லாவிட்டால்
ஆழ்ந்ததொரு அஞ்ஞானம் அகன்றுஓட
அரங்கனையே பற்றவேண்டும் பற்றவேண்டும் 29.

பற்றவேண்டும் பற்றியவார் நிற்கவேண்டும்
பரமன்வேறு அரங்கன்வேறு என்றுஎண்ணா
உற்றதொரு இருஉருவும் ஒன்றே என்று
உண்மையாய் வணங்கியோர்கள் என்னையும் காண்பார் 30.

காண்பதற்கு காட்சியும் தருவேன் திண்ணம்
கருத்தறிந்து அரங்கனை தொழுதோர் எல்லாம்
மாண்புபெற்றோர் என்றுதான் வாசகன் வாக்கு
மேலான நடராசன் விழாவில் தானே 31.

தானவனும் நூல்பொறுப்பை ஒலிநாடா பொறுப்பை
தவறாது வெளியிடவே வேண்டும்வேண்டும்
ஆனதொரு வாக்கோடு செயல்வனம் நன்று
அரங்கன்என் வடிவமுடன் உயிர்மூச்சாகும் 32.

ஆகுமதை உணர்ந்துநீ நடக்கநன்று
அரங்கனுக்கே பலகூத்தை ஆடிநிற்போம்
வாகுடனே அண்டத்தை பிண்டமாக்கி
வானதனை மண்ணாக்கி விளையாடி நிற்போம் 33.

நிற்கவோர் தயாளனுக்கு அடிமை நாங்கள்
ஞானத்தை கற்றவர்க்கே ஆசான் நாங்கள்
கற்றவர்கள் யாவருமே அறிவோர் இல்லை
கடுந்தவமே இல்லையென்றால் புண்ணியம் இல்லை 34.

புண்ணியமே தவத்தில்தான் முடிவுமாகும்
பூவுலகம் அதற்குமே அடிமையாகும்
கண்ணியமே கொண்டதொரு அரங்கனுக்கே
கடுகுக்குள் உலகத்தை புகுத்திநிற்போம் 35.

நிற்கவே சன்மார்க்க சங்கம்தன்னை
நிலைநிறுத்த அவனடைந்த துன்பத்தை நாங்கள்
பெற்றவளாய் கண்டுள்ளோம் இன்று நாங்கள்
பேசுவது எளிதப்பா செயல்மிக வேண்டும் 36.

வேண்டியதோர் தியாகத்தை உணரவேண்டும்
விளம்ப பல சோதனைகள் கடக்க வேண்டும்
ஆண்டுபல பொறுக்க வேண்டும் அஞ்ஞானம் நீங்க
அருள்என்ன பாட்டன் சொத்தோ எடுப்பதற்கு 37.

எடுப்பதற்கும் கொடுப்பதற்கும் தகுதிவேண்டும்
என்போன்ற ஞானியர்க்கும் அரங்கனுக்கே சொந்தம்
தடுப்பதற்கு யார்உள்ளார் எவரும் இல்லை
தயவிருந்தால் எடுத்திடலாம் அதுவே மார்க்கம் 38.

மார்க்கமதை அறிந்தோர்கள் உடைப்பார்பூட்டை
மனதுள்ளே திறம்கொண்டோர் புகுவார் உள்ளே
சார்ந்திடுவார் சாகரத்தை சித்திபுரம் வந்தால்
சாகாக்கலை அடைந்திடுவீர் வருவீர் இங்கே 39.

இங்குவிட்டால் வேறுஎங்கு வழியிருக்கு
என்வாசம் இங்குதானே வருவோர்க்கெல்லாம்
பங்கமேது பரம்பொருளை காண்பார்தன்னை
பக்குவமே அடைந்திடுவார் அரங்கனை கண்டோர் 40.

கண்டுரைக்க அன்பரெல்லாம் வான்கலக்க
கருத்தறிந்து சிவயசிவ மந்திரத்தை
கண்டுரைக்க பூர்வசக்தி வந்திறங்கும்
கதிரவன்போல் அரங்கனும் பிரகாசமாவான் 41.

ஆவதொரு விழாவிற்கு பலரும் பொறுப்பேற்று
அன்போடு செய்துவந்தால் என்அருள்கிட்டும்
மேவிவரும் ஞானசித்தி இதுஎன்வாக்கு
மேலும் பின் எடுத்துரைப்பேன் வாசகன் முற்றே. 42.

.....சுபம்.....

## மகான் மாணிக்கவாசகர் ஆசிகாண்டம்

**13 – 06 – 2003**

நூலாசான் : A.A. தரணிபாலன்

அருளாகி அகிலத்தை ஆட்சிசெய்யும்
அன்புடைய மைந்தனாம் அரங்கனுக்கு
திருவாக்கு வாசகனும் உரைக்க வந்தேன்
தீர்க்கமுடன் பதஞ்சலியின் ஆசிபெற்றெ 01.

பெற்றுதான் வான்கலந்தேன் வையகத்தில்
பேறுபெற்றென் அவர்யோகம் தனை அறிந்து
கொற்றவனே அரங்கனே என்போல் நீயும்
குறையில்லா அவர்பதத்தை பற்றிவிட்டாய் 02.

பற்றியதால் உன்னைநான் பற்றி நின்றேன்
பதஞ்சலியை சொல்லாத நாள் உனக்கு ஏது
உற்றதொரு வாக்கிலும் மனத்திலும் நிற்பார்
உயிரிலும் உடம்பிலும் கலந்தே நிற்பார் 03.

நிற்க அவர்உன்னைவிட்டு பிரிந்ததேது
நினைக்குமுன் அவர்உனக்கு வந்துநிற்பார்
பெற்றவன்மேல் கருணைவைத்த தாயும் ஆவார்
பெரும் வழியின் யோகத்தை உரைத்தகுருவே 04.

குருவாகி கருணையாகி நின்ற தேவன்
குவலயத்தோர் இன்றும் அவர் யோகத்தை அறிவார்
உருவானார் ஞானியர்கள் கோடான கோடி
உலகத்தில் அவர்வாக்கே அமுதாவாக்கு 05.

வாக்கிலே அவர்நின்று செயல்களுக்கு
வழுத்துவான் பதஞ்சலியான் ஆசிஎன்று
யோக்கியனே சங்மது அகத்தியர் பெயரில்
யோதுவது பதஞ்சலியை முறையுமாமோ 06.

முறையில்லை எனஉரைக்கும் வழியில்கேளு
மூலப்பொருள் அங்கும் இங்கும் எங்கும் ஒன்றே
உரைக்கின்ற பதஞ்சலியும் அகத்தியனும் ஒன்றே
உயர்வான் மூலரும் பதஞ்சலியும் ஒன்றே 07.

ஒன்றான நாங்களெல்லாம் ஓர் தாய்மக்கள்
உலகமதில் எங்களுக்கு பேதம் ஏது
நன்றான ஞானியருக்கு நாமம்தான் வேறு
நாதவிந்தும் பரவிந்தும் எங்களுக்கு ஒன்றே 08.

எங்களில் பெரியோரும் சிறியோரும் இல்லை
எங்களில் சாதிமத பேதமும் இல்லை
எங்களுக்குள் குருசீட பேதமும் இல்லை
எங்களுக்குள் அறிவுபேத சச்சரவு இல்லை 09.

இல்லையே இறக்கம் ஏற்றம் பேசுவதற்கு
என்வாக்கும் பதஞ்சலிவாக்கும் ஒன்றேயாகும்
சொல்லியதோர் நூல்களெல்லாம் நாமம்தான் வேறு
சூத்திரமும் சாத்திரமும் ஒன்றேயாகும் 10.

ஒன்றாகி உலகத்தை ஆட்சி செய்வோம்
ஒருகுடையில் உலகத்தை வர வைப்போம்
நன்றான ஞானத்தை உலகத்தோர்க்கு
நாட்டிடுவோம் ஒன்றாகி ஒருநாமத்தில் 11.

நாமமது பேதமில்லை ஞானமே சித்தி
நரர்களுக்கு அறியாது எங்கள் சூட்சம்
தாமிதனை அறிவதற்கும் ஞானம்வேண்டும்
தரணியிலே கோடியில் ஒருவனே காண்பான் 12.

ஒருவனாக அரங்கனும் உலகில் நிற்பான்
ஒன்றையே தெளிவாக பற்றி விட்டாய்
திருவருளை திருவடியை பற்றியவன் நீ
திருவடிதான் ஞான்தரும் என அறிந்தாய் 13.

அறிந்ததையும் உலகோர்க்கு எடுத்து சொன்னாய்
அறிவுகெட்ட மடையர் எல்லாம் மறைத்தேவைத்தார்
அறிந்ததையும் அணுஅளவும் மறைத்தேவைத்தார்
அன்றுமுதல் இன்றுவரை தெளிவாய் சொன்னாய் 14.

சொன்னாயே நாங்களே வியக்கும் வண்ணம்
சுத்ததேகம் பெற்றதனால் அதுவும் சித்தி
நன்றான தீட்சைபெற்றாய் எங்களால் நீ
நாதவிந்தை அடைந்தவன் நீ சத்திய வாக்கு 15.

வாக்கிலும் மணத்திலும் எங்களை நீ
வகையாக கட்டிவைத்தாய் விலகா வண்ணம்
போக்கிரிகள் பொய்வேடம் போட்டுகொண்டு
புகழுக்கும் பொருளுக்கும் அடிமையாகி 16.

அடிமையாகி அஞ்ஞானம் சூழ்ந்து சூழ்ந்து
அழிந்திடுவான் மறலிவந்து (எமன்) மெய்ஞானம் காணான்
இடிஎன்ன மின்னல் என்ன மாரிஎன்ன
எது வந்தும் மெய்ஞானி உண்மை சொல்வான் 17.

சொல்லியே உலகத்தை நல்வழி செய்வான்
சுத்தஞானி எதற்குமே அஞ்ச மாட்டான்
வல்லமையை அடைந்திடுவான் வாசியை காண்பான்
வஞ்சத்திற்கும் அஞ்சானே பரமஞானி 18.

ஞானியவன் தீட்சைபெற்றோன் ஐந்தொழிலும் செய்வான்
நானிலத்தில் ஆலமும்(விஷம்) அமுதாகும்
ஞானமிலான் பகட்டுக்கு மயங்கி நிற்பான்
ஞானம் உள்ளான் உலகத்தை துச்சம் என்பான் 19.

துச்சமென பொருளையும் எறிவான் பாரு
துகில்கூட பாரமாய் அவனுக்கு நிற்கும்
பட்டெல்லாம் புல்லாகி புழுவாய் காணும்
பரமனையே கண்டோர்க்கு ஆசைஏது 20.

ஆசையில்லா வடிவமே அரங்கராஜா
அஞ்ஞானம் இல்லாத அரங்கராஜா
பூசையையே உயிராய் கொண்ட அரங்கராஜா
புகழுக்கு மயங்காத அரங்கராஜா 21.

அரங்கனே என்னை நீ அடைந்தவன் நீ
அப்பனே வள்ளலையும் கண்டவன் நீ
உறங்காமல் பலஆண்டாய் இருந்தவன் நீ
உன்அறையில் உறங்காமல் இருப்பதற்கு 22.

இருப்பதற்கு கொசுவாக தருவோம் துன்பம்
எங்கிருந்து வந்தது என்று அறியமாட்டாய்
விருப்பு வெறுப்பு இல்லாமல் விழித்தே நின்றாய்
விழித்திருந்தாய் ஞானமது கைகூடும் என்றே 23.

என்றுதான் எங்களின் திருவிளையாடல்
என்மைந்தா உன்னை நாங்கள் விடாமல்பற்றி
இன்றுவரை வழிநடத்த நாளையும் செய்வோம்
ஏன்கலக்கம் எங்களுக்கு மரணமேது 24.

மரணமேது உன்னையும் காக்க வந்தோம்
மனதால் நீ கொலை புலையும் செய்யஏது
உரியதொரு காலத்தில் சிலபிழை இயல்பே
உணர்வறிந்து செய்தால்தான் பிழையுமாகும் 25.

ஆகும்நீ என் வழியில் வந்து
அகிலத்தை ஆட்சிசெய்ய வந்துவிட்டாய்
வாகுடைய தருமகூடம் தயாளகூடம்
வகையான ஞானகூடம் கானகூடம் 26.

கூடமதை அமைத்துதான் தவமும் தானம்
குறைவில்லா செய்துதான் உயர்ந்தவன் நீ
பாடுதற்கு பெருமையாய் உள்ளதப்பா
பக்குவமே அடைந்திட்ட ஞானிநீயே 27.

ஞானியின் தீட்சையிலா எதுவும் இல்லை
நரர்எல்லாம் ஞானியாக தீட்சை வேண்டும்
ஞானியின் தயவில்லா எதுவும் இல்லை
நானிலமே எங்களுக்கு அடக்கமாகும் 28.

அடக்கமாகும் அகிலமெங்கள் விளையாட்டுமந்தை
அண்டபிண்டம் யாவும் எங்கம் சுட்டு விரலுக்கு ஆகும்
முடக்குவோம் இங்கிருந்தே ஏழு லோகத்தை
முடவனையும் ஒரு சணத்தில் மீட்படையவைப்போம் 29.

ஆசான் மாணிக்கவாசகர் திருவடியை பூஜைசெய்த அன்பர்களுக்கு இந்த உலகத்தில் எதை விரும்புகிறார்களோ அதைகைகூடச் செய்வார்கள். மேலும், ஆசான் மாணிக்கவாசகர் நினைத்தால் ஏழு அண்டங்களையும் இங்கிருந்தே இயக்க முடியும். மேலும் முடவனையும் நடக்கச் செய்வார். ஆணைப் பெண்ணாக்குதலும், பெண்ணை ஆணாக்குவதலும், வறட்சி மிகுந்த பகுதிகளில் மழையை வரவழைப்பதும், அவர் விரும்புகின்ற பகுதிகளையெல்லாம் செழிப்படையச் செய்வதும், மேலும் தன் திருவடிகளைப் பூஜை செய்யும் அன்பர்களுடைய பாவங்களைத் தீர்க்கவும், புண்ணியம் பெருகச் செய்யவும், ஞானத்திற்கு உரிய அறிவும், பரிபக்குவம்

தருவதும், மரணமிலாப் பெருவாழ்வு தருதலும், அவர்களுடைய நித்திய விளையாட்டாகும். எனவே, ஆசான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜிப்போம், மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று வாழ்வோம்.

வைக்கின்ற ஆற்றல் எல்லாம் எங்கள் ஆட்சி
வகையான சன்மார்க்கம் எங்கள் மூச்சு
மிக்கதொரு ஜீவன்காத்தால் எங்கள் கொள்கை
மேலான ஞானம் தரல் எங்கள் போதம் 30.

ஞானிகளின் கொள்கையே ஜீவதயவு அல்லது ஜீவகாருண்யம். ஆசான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜிப்பவர்களுக்கு மெய்ஞானம் அளிப்பது அவரது கொள்கை.

போதத்தை (ஞானம்) அறிந்தோர்கள் புண்ணியம் காண்பர்
பூவுலகை ஆளுதற்கம் ஆற்றல் காண்பர்
வேதத்தை அறியவைத்து விளையாடி நிற்போம்
வேங்கையை(புலி) எலியாக்கி விளையாடி பார்ப்போம் 31.

வேதங்களில் உள்ள நுட்பத்தை தன்னுடைய அன்பர்களுக்கு அறியச் செய்வார்கள். மேலும், முரண்பாடு உள்ள மற்றவர்களுக்கு மிக்க வலிமை பொருந்தியவனை, பலஹீனப்படுத்தியும், நலிந்த பண்புள்ளவரை பராக்கிரமம் உள்ளவனாக மாற்றும் வல்லமை அவர்களுக்கு உண்டு.

பார்க்கவே அரங்கனுக்கு இவைகள் யாவும்
பக்குவமாய் செய்துவைப்போம் காலம்தொட்டு
சார்ந்துவர வள்ளலே! குடிலில் நின்று
சன்மார்க்க போதனைகள் உனைசார்ந்து சொல்வார் 32.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளை சார்ந்திருந்து உண்மை ஆன்மீகத்தைச் சொல்ல வைப்பார்கள்.

சொல்லவே ஓங்கார குடிலையும்தான்
சித்திபுரமாய் மாற்றுவார் உலகோர் அழைப்பார்
நல்லதொரு மார்க்கங்கள் நிலைத்து நிற்கும்

நானிலமே குடில்வழியில் நிற்கும் பாரு 33.

சுத்த சன்மார்க்கமே இவ்வுலகில் நிலைத்து நிற்கும். சுத்த சன்மார்க்கம் நிலை பெற்றதால் உலக ஆன்மிகவாதிகள் ஓங்காரக்குடிலை நாடி வருவார்கள்.

பாரப்பா உன்இடரை அயனத்துள் நீக்கி
படிப்படியாய் உன்மனதை சாந்தம்செய்து
சேரப்பா தவத்தை நீ சிக்கலில்லா
செய்வதற்கு பதஞ்சலியும் துணைநிற்பாரே 34.

நிற்கவே வள்ளல் வாரி வழங்க போறார்
நிகழ்த்துகிறேன் அகவல்தனை செவியால் கேட்டு
உற்றதொரு சிவயசிவ மந்திரம் சொல்லி
உண்மையுடன் கேட்டுவிட்டால் உடனே செய்வோம் 35.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் ஓங்காரக்குடில் அறப்பணிகளுக்குத் தேவையான பொருளுதவியை அள்ளித் தருவார். அதன் மூலமாக தொடர்ந்து அறப்பணிகள் நடக்கும். மேலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவலை படித்தும் மற்றவர்கள் படிப்பதைக் கேட்டும், மேலும் மகான் சட்டை முனிவர் அருளிய மகாமந்திரமாகிய **சிவயசிவ சிதம்பர இராமலிங்காய பரப்பிரம்மனே நம** என்ற மந்திரத்தையும் பயபக்தியோடு சொன்னால் ஞானிகள் அனைவரும் சூழ்ந்து அவருக்கு வேண்டிய உதவிகள் செய்வார்கள்.

செய்வதற்கு எங்களுக்கு ஆற்றல் உண்டு
சிலகால பேதங்கள் தாமதமாகும்
மெய்யாக நீ விரும்பி எதை நீ சேர்த்தாய்
மகான்களே உனக்காக சேர்த்து வைத்தார் 36.

அகவல் படித்தாலும், மகா மந்திரத்தைச் சொன்னாலும், அவரவர்கள் வினைக்கு ஏற்றார்போல் ஒருசிலருக்கு உடனே சித்திக்கும். ஒரு சிலருக்கு சிறிது தாமதம் ஏற்படும். மேலும், ஓங்காரக்குடிலாசானுக்கு பலகோடி தனங்கள் வந்தபோதிலும் அதில் ஒருபைசாகூட பிற்காலத்திற்கு பயன்படும் என்று சேமிக்கவில்லை. **இந்த**

**தூய்மையான செயலைக்கண்டு ஞானிகள் அருளை ஓங்காரக்குடிலாசானுக்காக சேகரித்து வைத்திருக்கிறார்கள்.** குடிலாசான் எப்பொழுது விரும்பினாலும் தடையில்லாமல் அருட்செல்வத்தை அள்ளித் தருவார்கள்.

வைத்தாய் நீ எங்களுக்கு சூக்கும மூட்டை
வகையாக அதைநாங்கள் பிரித்து எறிவோம்
சுத்தமுடன் உனக்குஏன் அந்த அச்சம்
சுத்தஞானி தனக்கேது பாரமப்பா 37.

அப்பனே அதை நாங்கள் சுமந்திடுவோமே
அரங்கனே அரங்கமே உனது கையில்
தப்பாது ஞானசித்தி நீயும் காண
தரணியிலே தீட்சை விழா சிறப்பாய்செய்ய 38.

ஞானிகளுக்கு விழா எடுப்பதே அறிந்தவர்களும், அறியாதவர்களும் ஞானிகள் பெருமையை அறிந்து கொள்வதற்கும், அவர்கள் ஆசி பெறுவதற்கே ஆகும். எனவே, ஓங்காரக்குடிலில் நடைபெறும் விழாக்கள் அனைத்தும் புண்ணியச் செயல்களே ஆகும். அதில் வேறு எந்தச் சடங்குகளும் இருக்காது. ஒன்றே ஒன்று ஞானிகளின் திருவடி பூஜைதான்.

.....சுபம்.....

## மகான் மாணிக்கவாசகர் ஆசிகாண்டம்

**30 – 06 – 2003**

நூலாசான் : A.A. தரணிபாலன்

கருணையின் வடிவான அரசே போற்றி
காருண்ய வடிவான பரமேபோற்றி
உருவத்தை ஒளியாக்கி கொண்டாய் போற்றி
ஊன்உயிரை உருக்கியதோர் சிவமே போற்றி 01.

போற்றியே மாணிக்க வாசகன்வாக்கு
புவியிறங்கி வான்கலந்தேன் அதுபோல் நீயும்
மாற்றமிலா வான்கலக்க விடவேமாட்டேன்
மாணிக்க வாசகன்யான் உனக்குப்பாட்டன் 02.

பாட்டனை நீ அழைத்திடலாம் கிழவனென்று
பாகுபாடு நமக்கேது யாவும்ஒன்றே
வாட்டமேது உன்வாக்கும் என்வாக்கும் ஒன்றே
வாசகனும் அரங்கனும் ஒன்றே ஒன்றே 03.

ஒன்றானாய் என்போல் நீ இரண்டுமாவாய்
உயிரோடு உடல்மறைய மார்க்கம் தன்னை
நின்றானாய் நானானாய் தானேயானாய்
ஞானமானாய் ஞானத்தின் குருவுமானாய் 04.

கருவானாய் திருவானாய் சித்தியானாய்
காயத்தை மாயமாக்கி ஒளியுமானாய்
உருகொண்டாய் உருவையும் மறைக்கண்டாய்
உயிரையும் அழியாத மார்க்கம்கொண்டாய் 05.

கொண்டதொரு சன்மார்க்க நெறியில் நின்றாய்
குருவிற்கே குருவானாய் அரூபம் கண்டாய்
சண்டாளம் (மாயை) தனையழித்தாய் சாயுட்சம் கண்டாய்
(தூலதேகமாகிய மும்மலதேகத்தை அழித்துவிட்டாய்)
சாக்காட்டை முக்காடு போடவைத்தாய் 06.

வைத்தாய் நீ இந்திரிய நிக்கிரகம்பற்றி
வாழ்ந்தாய் விகாரத்தை பற்றிடாது
சித்தத்தை செம்புபோக்கி கனகமாக்கி
சிவகதியை அடையவே அடைந்தாய் மார்க்கம் 07.

(ஆசான் மாணிக்கவாசகர் அருளினால் தேகக்களிம்பை நீக்கி தேகத்தை கனகமாகிய தங்கமாக்கிக் கொள்ளலாம்.)

மார்க்கமென்ன எளிதாமோ கலியுகத்தில்
மங்கைமது புலால்புகை சுகமிருக்க
மார்க்கத்தை பற்றுவானோ உலகமாந்தன்
மாஞானி அதை நினையான் சிவத்தை எண்ணி 08.

தேகமாகிய செம்பை களிம்பு நீக்கிக்கொள்ளுதல் எளிதான காரியமல்ல. யார் ஒருவர் ஆசான் மாணிக்கவாசகர் திருவடியை உருகி தியானிக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் அந்த வாய்ப்பு கிடைக்கும். ஆசான் மாணிக்கவாசகரை தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும் எண்ணி பூஜை செய்தால்தான் தேகக் களிம்பாகிய காமதேகம் நீங்கும். இதற்கு உபாயம் ஜீவகாருண்யமும், பக்தியும் ஆகும். பக்தி செலுத்த செலுத்த ஜீவகாருண்யத்திற்கு உரிய அறிவும், பரிபக்குவமும் அவரே தருவார். அவர் தயவால்தான் நாம் ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடிக்க முடியும். பக்தியும் செலுத்த முடியும்.

பக்தி செலுத்துவதற்கு உபாயம் ஓம் மாணிக்கவாசகா! கணக்கிலடங்கா பஞ்சமா பாவிகள் உன் திருவடியை உருகி தியானம் செய்ததால், அவர்கள் பாவங்களையெல்லாம் தீர்த்து, உண்மைப்பொருளை அறியவும், ஞானம் சித்திக்கவும் அருள்செய்து இருக்கிறீர். நானும் பஞ்சமா பாவிதான். உமக்கும் தெரியும், எனக்கும் தெரியும் நான் பாவியென்று. எனவே, நாயினும் கடையேனாகிய அடியேன் உன் திருவடியைப் பற்றி பூஜிக்க விரும்புகிறேன். நான் செய்த பாவமோ உமது திருவடியை உருகி பூஜிப்பதற்குத் தடையாக உள்ளது. நீரே என்னை கொத்தடிமையாக ஏற்று அருள் செய்யாவிடில் கணப்பொழுதும் உன்திருவடியைப் பற்ற முடியாது. அடிமைபால் கருணைகொண்டு எனக்கு அருள் செய்ய வேண்டுகிறேன். எனக்கு அருள் செய்வதால் உனக்கு எந்தக் குறையும் வந்துவிடாது. எனவே, என்னை ஏற்று அருள்செய்ய உமது திருவடியை இறைஞ்சுகிறேன்.

என்னை கைவிடில் எனது குற்றமல்ல, உமது குற்றமே. ஏனென்றால் நான் உன் திருவடியைப் பூஜிக்கும்போதெல்லாம் நாயினும் கடையேனாகிய என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் உன் திருவடிக்கே அர்ப்பணம் செய்கிறேன் என்று சொல்லியே பூஜை செய்திருக்கிறேன். அப்படிச் சொல்லியும் என்னை ஏற்று அருள் செய்யாவிடில்,

பெருமைக்குரிய உமக்குதான் குற்றமே தவிர எனக்கு குற்றமில்லை. ஆகவே, என்னை ஏற்று அருள்செய்வது உமது பொறுப்பே என்று உமது திருவடிக்கு பூரணமாக சரணடைகிறேன். ஏற்று அருள் செய்வீர்.

குறிப்பு : ஒருவன் கலியுகத்தில் ஞானசித்தி பெறுவது எளிதல்ல. ஒருபக்கம் வினைகள், ஒருபக்கம் காம விகாரங்கள், ஒருபக்கம் விரைவாக ஞானசித்தி பெறவேண்டும் என்ற எண்ணங்கள். இதன்னில் நமது வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படும் ஒரு கூட்டங்கள். மறுபக்கம் பொறிபுலன் என்ற வஞ்சகர்கள் இடையூறு செய்வார்கள். இத்தனை தடைகளையும் தாங்கி தான் ஞானம் சித்திபெற முடியும். இத்தனை தடைகளையும் மகான் மாணிக்கவாசகர் அருளினால்தான் தாங்கி வெல்லமுடியும். இதற்கு உபாயம் தடைபடாமல் திருவடி பூஜை செய்வதுதான். வேறு வழி இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை.

மேலும், பெருமைக்குரிய ஞானிகள் மற்றதில் கவனம் செலுத்த மாட்டார்கள்.

எண்ணியே இருப்போர்க்கு இறையருள் கிட்டும்
ஏதப்பா உன்தவத்தை குறைசொல்லஇங்கு
எண்ணத்தை என்னடியில் வைத்தவன் நீ

ஓங்காரக்குடிலாசான் சதாகாலம் மாணிக்கவாசகர் திருவடியே சிந்தனையாக இருப்பார்கள்.

ஏகாந்தம் நீ கண்டாய் என்னைகண்டு 09.

கண்டிட்ட ஞானியல்லோ கடைதேறிநிற்பான்
கைலைதனை அறியாத மூடர்கட்கு
உண்டாக வழியேது மறைத்தே நிற்கும்
ஒருநாளும் அறியமாட்டான் சன்மார்க்கத்தை 10.

சன்மார்க்கம் சிவகதிக்கு அழைத்துசெல்லும்

(சன்மார்க்கம் என்பதே மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜிப்பதே.)

சாகாத வழிகளையும் எடுத்துரைக்கும்
என்போன்று நிலையடைய வழிபிறக்கும்
இருக்காது விகாரமும் விசாரம் பற்றும் 11.

மகான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜித்தால் காமவிகாரமும் அற்றுப்போகும். சத் விசாரத்தையும் அறியலாம்.

பற்றுவது சிவநிலையும் விட்டிடாது
பாலகனாய் குமரனாய் மிளிரவைக்கும்

(மகான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜை செய்தால் முதுமை நீங்கி பாலகனாகவும், குமரனாகவும் வாழலாம். அவர் அருளைப் பெறுவதற்கு மிகவும் எளிய முறை **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்பதேயாகும்.)

உற்றதொரு சன்மார்க்க விழா தலைப்பு
உரைக்கின்றேன் சுத்தசன்மார்க்க சங்கத்திருவிழா 12.

திருவிழாவும் ஞானதீட்சை என்று கீழ்சேர்க்க
திருவிழாவும் வள்ளல் செனித்த நாளில்செய்ய
திருவிழாவும் அன்பர்கட்கு சாகாக்கல்வி சொல்ல
திருவிழாவும் ஞானிகளை ஒன்று சேர்க்க 13.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க 27 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் குருநாதரின் ஞானதீட்சை விழாவும் 05–10–2003 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும்.

சேர்க்கவே உணவுபொறுப்பு செந்திலுக்கு
சிறப்பாக அதையவனும் செய்திடவேண்டும்
சார்ந்துவர நடராசன் நூல்பொறுப்பேற்க
சரியாக உரைநடைநூல் முன்னேவாங்கி 14.

05–10–2003 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் 27 ஆம் ஆண்டு ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்க நிறைவுவிழா, குருநாதரின் ஞானதீட்சை விழா அன்று உணவு தயாரித்தல் பொறுப்பு சு. செந்தில்குமார், மேலாளர் ஓங்காரக்குடில் அவர்களுக்கும். அகத்தியர் சன்மார்க்க சங்க கொள்கைப் பரப்பாளர் ந. நடராஜன் அவர்களுக்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இரமலிங்க சுவாமிகள் அருளிய உரைநடை நூலை சேகரித்து வைக்கவும், அதில் சித்திபுர விலாசம்

இட்டு அங்நூலில் பதிக்க வேண்டும் என்று ஆசான் அருளியுள்ளார்கள்.

வாங்கியே சித்திபுர விலாசமிட்டு
வகையாக நூலின்மேல் பதிக்கவேண்டும்
பாங்காக பிழையொன்றும் அதனால் இல்லை
பக்குவமாய் வள்ளல்படம் அச்சிடல் நன்று 15.

நன்றாக அரங்கன்படம் இணைந்தும் தனித்தும்
நல்சீடர் தொண்டர்கட்கு அளிக்கவேண்டும்
நன்றாக மந்திரத்தின் அட்டைகூட
நல்வண்ணம் ஆங்கிலத்தில் அச்சிடல்வேண்டும் 16.

**சிவயசிவ சிதம்பர இராமலிங்காய பரப்பிரம்மனே நம** என்ற மந்திரமாகிய மகாமந்திரத்தையும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்கசுவாமிகள் அருளிய **அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி** என்ற மந்திரத்தையும் **ஓம் இராமலிங்க சுவாமிகள் திருவடிகள் போற்றி** என்ற மந்திரத்தையும் ஆங்கிலத்தில் பலவண்ணங்களில் அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை அன்பர் மாதவனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

வேண்டுமதை மாதவனே பொறுப்பேற்றுசெய்ய
விளம்பபோறார் அகிலத்தோர் பலதேசத்தோர்
வேண்டியதோர் அட்டைதனை அச்சிட்டுத் தரவே
விளம்புகிறேன் பாலசுப்ரமணியமென்று 17.

என்றஓர்வன் ஆலயத்தின் நிர்வாகம் பார்ப்பான்
இயம்பஅவன் பொறுப்பேற்று செய்திடல்வேண்டும்
நன்றாக கற்கண்டும் அமுதளிக்கவேண்டும்
நலமோடு விளம்பரங்கள் செய்திடல்வேண்டும் 18.

வேண்டியதோர் குடில்விலாசம் அழகாயும் பொறித்து
விளம்பரமே அட்டையில் செய்திடல்நன்று
மாண்பாக மகாமந்திர அட்டையில்தான்
முதல்பக்கம் வள்ளலும் மாணிக்க வாசகர்பின்னே 19.

பின் அரங்கன் உருவத்தை பொறித்திடல் நன்று
பெருமையுடன் ஜீவகாருண்யம் சாகாக்கல்வி
நன்றான உறக்கம் தவிர்த்தல் விளக்கம்தன்னை
ஞானத்திற்கு ஜீவகாருண்யம் முதல் படியாகும். 20.

.....சுபம்.....

## மகான் மாணிக்கவாசகர் ஆசிகாண்டம்

**07 – 07 – 2003**

நூலாசான் : A.A. தரணிபாலன்

அருளாகி அருளிற்கும் அருளுமாகி
அன்பாகி அன்புநிறை அன்புமாகி
உருவாகி உருவிற்கும் உருவுமாகி
ஒளியாகி ஒடுங்கிநின்ற அரங்காவாழ்க 01.

வாழ்கவென மாணிக்கவாசகன் வாக்கு
வாழ்வாங்கு வாழ்கின்ற மைந்தனேவாழி
ஊழ்வினையை உதைத்திட்ட பரமேவாழி
உயிரழியா உடலழியா மறலியை காணா(மரணம்) 02.

காணாத மார்க்கத்தை கடைப்பிடித்து
கட்டாத கயிறுகொண்டு காலைகட்டி
ஆணையும் பெண்ணையும் அகத்துள்கண்டு
அடங்கியதோர் லலாடம் (புருவமத்தி) வெற்றிகண்டு 03.

பெண் கலையாகிய சந்திர கலையையும், ஆண் கலையாகிய சூரிய கலையையும் அகத்துள் கண்டு, இட கலையையும் பிங்கலையையும் சேர்த்து ரேசித்து, பூரித்து, கும்பித்து புருவமத்தியில் ஸ்தம்பித்தால் அதுவே ஞானமாகும். பிறகு லலாட ஸ்தானமாகிய சுழிமுனை திறந்து ஜோதியும் காணலாம்.

கண்டுதான் வந்திட்ட குமரனே வாழி
கிழவன்யான் உனக்காக உரைக்கவந்தேன்
தொண்டினால் அன்பினால் பரத்தைகாண
தூய்மையால் வாய்மையால் பரத்தைகாண 04.

காணவே வழிவகுத்தாய் அழைத்தாய் உலகை
கள்ளமிலா உள்ளமுடன் உலகத்தோர்க்கு
காணுதற்கு நெறிசொன்னாய் சன்மார்க்கம் சொன்னாய்
கடுந்தவத்தை நீசெய்தாய் வெற்றிகண்டாய் 05.

வெற்றிகண்டு உலகோரை சன்மார்க்கத்துள்ளே
வரவழைத்து புதுவேதம் தனைஉரைத்தாய்
உற்றதொரு சூரியனை உடலோடு கண்டாய்
உலகோர்க்கு அதைநீயும் ஒளிக்கா சொன்னாய் 06.

சொன்னதொரு சற்குருநீ சன்மார்க்கமும் நீ
சுத்தமார்க்கம் அறிந்தாலும் உரைக்காதோர் கோடி
தன்நிலையை உயர்த்துவான் பிறர்க்குரையான்
தவத்தையே பயமாக்கி அஞ்சசெய்வான் 07.

அஞ்சிடுவார் மக்களும் விதி நினைப்பார்
அப்படியே மீறிதான் செய்திட்டாலும்
வஞ்சகமே சொல்லியவன் கலைக்கப்பார்ப்பான்
வஞ்சகமே சூழ்ந்து நின்ற உலகம் தன்னில் 08.

தன்னிலே உடைத்தெறிந்தாய் தடைகளைநீயே
தவத்தையே எளிமையாக்கி சொன்னாய் நீயே
என்னையும் தலைவனையும் காட்டியவன் நீயே
என்னடியும் தலைவனடியும் ஒன்றெசொன்னாய் 09.

எல்லாம் வல்ல இயற்கைக் கடவுளால் படைக்கப்பட்ட மனிதனின் தேக அமைப்பே மிக உன்னதமானது. அதனுள் எல்லாம்வல்ல இயற்கைக் கடவுள் உன்னதமான மெய்ப்பொருளை அடக்கிப் படைத்துள்ளார். அந்த மெய்ப்பொருளை தூலமாகிய மும்மலம் மறைத்துள்ளது. அந்த மறைப்பை உடைத்தெறிந்து வெற்றிகண்டவர்தான் மகான் மாணிக்கவாசகர். எனவே, எல்லாம் வல்ல இயற்கைக் கடவுள் மகான் மாணிக்கவாசகர் ஒன்றேயாகும்.

மகான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜித்தாலே எல்லாம் வல்ல இயற்கைக் கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவடியைப் பூஜித்ததற்கு ஒப்பாகும். எந்த இயற்கைக் கடவுள் மனிதனைப் படைத்துள்ளதோ, அதே

இயற்கைக் கடவுள் துணைகொண்டுதான் தூல சூட்சமத்தை அறியமுடியும்.

தூலமாகிய புறஉடம்பு பற்றியும், சூட்சமமாகிய அகஉடம்பு பற்றியும்அறியமுடியும். அதே இயற்கைக் கடவுள்தான், நமது தூலமாகவும் சூட்சமதேகமாகவும் உள்ளது. தூலதேகமாகிய மும்மலச்சிறை நீங்கினால் சூட்சமதேகமாகிய சுத்த தேகம் அல்லது பிரணவதேகம் பெறலாம். பிரணவதேகம் பெற்றவர்தான் மகான் மாணிக்கவாசகர் ஆவார்.

மகான் மாணிக்கவாசகரை **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்று உருகி நாமஜெபமாகிய பூஜையை தினமும் செய்து வந்தால் அவர் பெற்றதுபோல் தூலமாகிய மும்மலதேகத்தில் ஆன்மா சிறைப்பட்டுவிட மும்மலதேகமாகிய சிறையை உடைத்தெறிந்தால் ஆன்மா விளக்கம்பெற்று சுத்ததேகம் அல்லது பிரணவ தேகமாகும்.

எனவே, ஆசான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜித்தால்தான் அவர்கள் பெற்றதுபோல் நாமும் பெறமுடியும். எந்த அளவிற்கு ஆசான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜிக்கின்றோமோ, அந்த அளவிற்கு முன்செய்த வினைகள் நீங்கி தெளிவான அறிவு உண்டாகும். சிறப்பறிவு துணைகொண்டுதான் தூல சூட்சமத்தை அறியமுடியும். அந்த சிறப்பறிவும் ஆசான் மாணிக்கவாசகரின் அருளினால்தான் பெறமுடியும். எனவே, மகான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜிப்போம், தூலதேகமாகிய மும்மலதேகத்தை வென்று வெற்றிபெறுவோம்.

குறிப்பு : இதை ஜீவதயவாலும், பக்தியாலும் அன்றி வேறு எவ்வித சடங்குகளினாலும் வெல்ல முடியாது.

எடுத்துக்காட்டு :

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். (குறள் –370)

சொன்னதுதான் உலகின்முதல் ஓங்காரக்குடிலே
சூட்சத்தை வெளியாக்கி உடைத்தவன் நீயே
அன்புதான் தவத்திற்கு முதல்படி என்றாய்
ஆசானின் திருவடியே சொர்க்கம் என்றாய் 10.

இன்றுநீ இன்றுஅல்ல நேற்றுஅல்லநீயும்
இறைஞ்சுகிறாய் (சொல்லுகிறாய்) பலஆண்டாய் உலகோர்வாழ
இன்றுவரை குடில்போல விளங்கியதெங்கே
எவர்உரைத்தார் மெய்ஞ்ஞானம் சன்மார்க்கம் தன்னை 11.

சன்மார்க்கம் ஒன்றுதான் நிலைத்துநிற்கும்
சன்மார்க்கம் என்றுபேரை வைத்துக்கொண்டு
துன்மார்க்க பூசைசெய்து அழிந்தோர்கோடி
துன்மார்க்க பற்றியே சன்மார்க்கம்விட்டு 12.

விட்டழிந்தோர் கோடானகோடி பேர்கள்
வேதத்தை அறியாதோர் கோடி கோடி
பட்டத்திற்கு மயங்கியோர் கோடி கோடி
பணத்திற்கு மயங்கியோர் கோடாகோடி 13.

கோடிகோடி கொட்டினாலும் மயங்காதவன் நீ
குப்பையென அதைநீயும் எண்ணிக்கொள்வாய்
தேடிவரும் பொருளைநீ தீண்டாதவன் நீ
தேகத்தை ஒளியாக்க முயன்றவன் நீ 14.

நீயாக எதையுமே விரும்பியதில்லை
நின்அகத்தில் நிலையாக அமர்ந்தது நாங்கள்
தாயாக தந்தையாக இருந்தது நாங்கள்
தவஅறிவை ஆற்றலை அளித்தது நாங்கள் 15.

நாங்கள்தான் நன்னெறியை போதித்துநின்றோம்
நாவிலே நன்மொழியை தந்ததுநாங்கள்
நாங்களே சன்மார்க்கம் அமைத்து நின்றோம்
நாங்கள்தான் செய்தோமென இன்றும் சொன்னாய் 16.

சொல்லுவார் வீணர்கள் தன்னறிவென்று
சிந்தையே எங்களின் மூச்சுக்காற்று
நல்வாக்கும் நினைப்பும் எங்கள் திருவிளையாடல்
நாரெல்லாம் நான்என்றெ விழ்ந்துபோனார் 17.

விழுந்திடா காத்தவனே அரங்கராஜன்
வேதத்தை உரைத்தவனே அரங்கராஜன்
ஊழறுக்க (முன்வினைகள்) தானத்தை தவத்தை சொன்னாய்
உயிரழியா இருப்பதற்கும் வழிகள் சொன்னாய் 18.

சொன்னதொரு எல்லையது ஓங்காரக்குடிலே
சூழ்உலகில் குடில்ஒன்றே உண்மையைசொல்லும்
தன்பெருமை உரையாது தலைவனை காட்டும்
தவத்தையும் தருமத்தையும் முறையாய் சொல்லும் 19.

தமிழ்நாடு, திருச்சி மாவட்டம், துறையூரில் உள்ள ஓங்காரக்குடில் அன்பர்கள்தான் உயிரைப்பற்றியும் உடம்பைப் பற்றியும் இரண்டிற்கும் காரணமான இயற்கைக் கடவுளைப் பற்றியும் அறிந்தவர்கள் ஆவார்கள்.

உடல் மாசு நீங்கினால் உயிர்மாசு நீங்கும் என்றும், உயிர் மாசு நீங்கினால் அறிவு தெளிவடையும் என்றும், தெளிந்த அறிவுகொண்டுதான் சூட்சமதேகமாகிய ஒளிஉடம்பு பெறமுடியும் என்றும், இதற்கு உபாயம் ஜீவகாருண்யமும், மகான் மாணிக்கவாசகர் திருவடியே துணைபுரியும் என்று சொன்னவர் துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் ஆவார்கள்.

சொல்லுகிறேன் என்வழியில் வந்தவள்ளல்
சுத்தஞானி வான்கலந்த எனதுஆசான்
என்றுதான் வாசகனும் சொல்வேணிப்போ
இன்றுசொல்வேன் வள்ளல்பின் வள்ளல்நீயே 20.

நீயாக எதையுமே சொன்னதில்லை
நின்வாக்கு என்வாக்கு இதைஉரைப்பாய்
நாயிற்கடையனையும் பொருளாய் கொண்டு
ஞானத்தை நல்கவேண்டும் என்று கேட்பாய் 21.

கேட்பதும் அருகில்நின்று பலநாள்கண்டேன்
கேட்பதற்கே வழியறியா நிற்பார்மூடர்
கேட்பதுவும் வள்ளலைபோல் கேட்கவேண்டும்
கடையனென்றும் மடையனென்றும் கேட்டார்வள்ளல் 22.

வள்ளல்போல் உளமுருகி அழைப்பாய் நீயே
வந்தேன் என உனக்குநான் தந்தேன் ஆசி
உள்ளத்தை திறந்தாய்நீ உட்புகுந்தேன்
ஒருகதவை மட்டும்அல்ல இருகதவையும் சாத்தி 23.

சாத்தியே முத்தத்தில் நிலாஒளிகண்டு
சாக்கிரத்தை அடைந்தவன் நீ அரங்கராஜா
நேத்திரமே கதிரொளியாய் திருச்சபையாய்
நின்அகமே கருவறையாய் உட்புகுந்தேன் 24.

உட்புகுந்து உனையாண்டேன் உலகத்தை ஆண்டேன்
உன்னுள்ளே இருந்துதான் குடிலமைத்தேன்
தட்டினேன் பலகதவை திறந்தார்பலரும்
தானத்தை தருமத்தை எடுத்துசொன்னேன் 25.

சொன்னதொரு வழியாகவும் சுத்தமார்க்கம்
சுகமறுத்து சுகம்காணும் எந்தன்மார்க்கம்
அன்போடு தயைசொல்லும் அரங்கன் மார்க்கம்
ஆசானை வெளிகாட்டும் ஆனந்தமார்க்கம் 26.

மார்க்கமது உனக்காக படைத்தேன் படைத்தேன்
மண்ணில்நீ விடிவெள்ளி மறைவதேது
மார்க்கமெல்லாம் பலவிழ்ந்தால் காரணமென்ன
மதத்தோடு இனத்தோடு கலந்ததுதானே 27.

தானியங்கே மதமேது இனமேது காண
தயைமட்டும் எடுத்துரைக்கும் தயாளகூடம்
ஞானிகளை வெளிகாட்டும் ஞானகூடம்
நாவரசர் வாசகனும் வள்ளல்கண்ட கூடம் 28.

கூடமதில் கூடியோர்கள் குருவைகாண்பர்
கூறுகிறேன் நாளைமுதல் அகவல்தன்னை
பாடவேண்டும் அடுத்தடுத்து இருநூறுவரிகள்
பக்குவமாய் தினம்இவ்வாறு பாடவேண்டும் 29.

பாடவேண்டும் உரைநடைப் பக்குவமாக
பக்குவமாய் உரைநடையில் தசபக்கம்மட்டும்
பாடவேண்டும் ஜீவகாருண்யம் நித்தியகருமம்
பண்பாக பொதுவிதியும் சிறப்புவிதியும் 30.

விதியோடு உபதேசம் பேருபதேசம்
விளம்பவேண்டும் திருமுகத்தை அறியதானே
விதிபடியே ஜீவகாருண்யம் தனைதிறமாய்சொல்ல
விளங்கும் இந்தகுடில்தானே தருமச்சாலையென 31.

சாலைக்கு ஆண்டவர்வருவது உண்மை
சன்மார்க்கம் அழியாமல் காப்பதுஉண்மை
மேலான ஞானத்தை உரைப்பது உண்மை
மகனே உனை மாந்தர்களை வான்கலக்கவைப்பது உண்மை 32.

உண்மையை உன்னால்தான் பலரறிவார்
உரைக்கின்றேன் காலையிலும் மாலையிலும் மட்டும்
திண்ணமதாய் அருட்பெருஞ்ஜோதி மந்திரத்தோடு
தீர்க்கமாய் சிவயசிவ மந்திரம் சேர்த்து 33.

சேர்த்துதான் பலர்கூடி உரைக்கும்போது
ஜீவசக்தி விளங்கிநிற்கும் வான்கலக்கவைக்கும்
சார்ந்துவரும் பெரும்யோகம் குடிசிறக்கும்
சாக்காட்டை உதைக்கும் இந்தமந்திரம் திண்ணம் 34.

திண்ணமதாய் இதைஉரைக்க வருமேமாரி
தேட்டுவளம் பொருள்வளமும் கிரிடிவளமும்(விவசாயம்)காண்பர்
எண்ணமெல்லாம் சித்திக்கும் இம்மந்திரத்தால்
இவையெல்லாம் ஓங்காரக்குடில் மட்டும் செய்யும் 35.

செய்வதற்கு வேறுஎல்லை எங்களுக்கில்லை
சத்தியமாய் உரைக்கின்றேன் இந்தவாக்கை
மெய்யறியா மூடர்களும் தன்பேர்முன்பின்
மேலான சாமியென்றும் பலதை சேர்த்து 36.

சேர்த்துதான் உண்மை உரையாமண்ணுக்குள்புகுமே
சிற்சபையை பொற்சபையை உரைப்பதுகுடிலே
சார்ந்துவரும் சன்மார்க்கத்தை உரைப்பதும் குடிலே
சற்குருவை பொற்குருவை காட்டுவது குடிலே 37.

குடிலில்தான் நாங்கள் விளையாடிநிற்போம்
கூறுகிறேன் அன்பரெலாம் சன்மார்க்கவிழாவில்
தடையில்லா தொண்டுசெய்ய வான்கலப்பர்
தயவுடனே யாவருக்கும் அளித்தேன் ஆசி 38.

சித்திநிலை குடிலோரே காண்பர் காண்பர்
சித்திநிலை ஆசானும் காண்பது உண்மை
உத்தமர்கள் அடைந்திடுவார் மெய்ஞ்ஞானம் இங்கே
ஓங்காரம் விளங்கிநிற்கும் ஆங்காரம் நீங்கும் 39.

நீங்கியே அருளாசி நம்மால்காண்பர்
நின்வாக்கு என்வாக்கு வள்ளல்வாக்கு
பாங்காக தில்லையம்பலத்தானுக்கு (நடராஜன்)
பணிமிகவே விழாவில் காத்திருக்கு 40.

இருக்கப்பா அதைநீயும் செம்மையாய்செய்ய
என்கவிகள் உலகோர்க்கு இவனால்செல்லும்
வருமதனில் வான்கலக்கும் ஆசிதிண்ணம் 41.

மேலும், மகான் மாணிக்கவாசகர் அருளிய நூலும் மற்றுமுள்ள ஞானியர்கள் நூல்களையும் வெளியிடும் பொறுப்பையும் நடராஜன் அவர்களுக்கே ஆசான் மாணிக்கவாசகர் கொடுத்துள்ளார்.

குறிப்பு : மகான் மாணிக்கவாசகர் அருளிய இந்நூலை வெளியிட பாடுபடுகின்ற அன்பர்களுக்கும், அன்பர் நடராஜனுக்கும் நிலை உயர அருள் செய்வதாக மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்.

.....சுபம்.....

# மகான் மாணிக்கவாசகர் ஆசிகாண்டம்

## 07 –12 –2003

நூலாசான் : A.A. தரணிபாலன்

அருள்சித்தி அடையும்ஒரு அரங்கா வாழ்க
அண்டபிண்ட மாந்தர்கட்கும் குருவே வாழ்க
இருவினையை கடந்திட்ட ஈசான வாழ்க
என்உயிரே என்வடிவே அரங்கா வாழ்க 01.

வாழ்கவென்று உன்பாட்டன் இரங்கி செல்வேன்
வையகத்தில் நீ எனக்கு பேரனாகும்
தாழ்வில்லா என்நூட்கு (திருமந்திரம்) புதுவிளக்கம்
தந்திட்ட உன்னையான் வள்ளல் என்றேன் 02.

வள்ளல்தான் இந்நூலை வழங்கச் சொன்னார்
(இராமலிங்கசுவாமிகள்)
வையகமே நலமடைய காத்திருக்கு
கள்ளமேது கலங்கமேது விழா நடக்கும்
கருணையுடன் வள்ளல்வந்து நிற்பாரப்பா 03.

அப்பனே உலகில் இனி இதற்கு நிகராய்
அமைந்திடுமோ விழாஒன்று முடியாதுமைந்தா
செப்புகிறேன் அதிசயமே பலரடைவார்
செகத்தோர்கள் ஞானம்பெறவே இதுவே காலம் 04.

காலத்தில் வள்ளல்உன்னை சார்ந்து விட்டார்
கடுந்தவத்தை எளிமையாக்கி தந்தாரப்பா
பாலகனே அகவல்தன்னால் அக்கினியை தூண்டி
பக்குவத்தை அடையவே வைத்துவிட்டார் 05.

விட்டகுறை இருந்ததனால் பற்றியாச்சி
வினையகன்று உனையானும் பற்றி கொண்டேன்
அட்டசித்தும் சித்திக்க வள்ளல் உள்ளார்
அவர்வேறு நான்வேறு நீவேறல்ல 06.

அல்லஎன சொல்லசொன்னார் வள்ளல்தானே
அவரின்பின் தோன்றிட்ட மெய்துறவி நீயே
கல்கிஎன்று சொன்னகாலம் கடந்து மைந்தா
கதிரவன்போல் வள்ளல்பட்டம் உனக்கே கிட்டும் 07.

கிட்டுமென சொன்னதுவும் வள்ளல்தானே
கூறியதோர் மந்திரமும் உனைஉலகறிய
இட்டமுடன் அஞ்ஞானம் பலர்க்கு நீங்க
இறையென்றால் என்னவென்று அறிவதற்கே 08.

அறிவதற்கே மந்திர உபதேசம் சொன்னோம்
(சிவயசிவ சிதம்பர இராமலிங்காய பரப்பிரம்மனே நம)
அரங்கன் என்றால் யார்என்று உலகம் அறியவேண்டும்
திரைமறைவு இல்லாத தீபம்நீயே
தெளிந்ததோர் ஞானம்கண்ட குருவும் நீயே 09.

குரு என்றால் யார்என்று அறிவதற்கே
கூறிட்டோம் மந்திரத்தை உணர வேண்டும்
வருவோரும் போவோரும் அரங்கனை கண்டால்
வாதங்கள் பேதங்கள் அற்று போகும் 10.

போகுமே சாக்காடு மந்திரத்தால்
புலையனும் மந்திரத்தை பெற்றுவிட்டால்
(புலால் உண்ணுபவர்களும்)
வாகுடனே ஞானசித்தி காண்பான் என்று
வள்ளலே முன்நின்று சொன்னாரப்பா 11.

அப்பனே இதன்விதையை விதைத்துவிட்டோம்
அக்கினிபோல் இதுபரவும் எந்தன்ஆசி
தப்பாது பலர்இதனால் விழித்துக் கொள்வார்
தரணியிலே உனைநாங்கள் பலர்க்குகாட்டி 12.

காட்டியே மெய்ஞான கருவைதந்து
கவலைதனை அழித்திடுவோம் வருவோர்க்கு இங்கே
வாட்டமென்ன வருத்தமென்ன நொடியில் நீக்கி
வாழவைப்போம் மந்திரத்தை உரைத்தோரைதான் 13.

தானிதனால் உனக்குபயன் கால்பங்குதானே
தானிதனால் உலகோர்க்கு முக்கால்பங்கு யோகம்
ஆனதொரு அவரடையும் ஞானஆசி
அப்படியே உனைசாரும் நீதான் வித்து 14.

வித்தாகி மரமாகி காய்கனியாகி
வையகத்தோர் களைப்பாற பிறந்தவன்நீயே
சத்துசித்து ஆனந்த நிலை உனக்கு
சாகாகலை உன்னாலே உலகோர்க்குகிட்ட 15.

கிட்டவே பலமாந்தர் விழாவிற்கு வந்து
குருதீட்சை பெறுவதற்கே மூலன் செய்தேன்
இட்டமுடன் வள்ளலே இதற்கு தலைமை
இருப்போமே அவர்பின்னால் அமர்ந்து நாங்கள் 16.

திருமூலதேவனாகிய நானும், நாதாந்த நந்தீசரும், அகத்தியரும், சட்டமுனியும், சண்டிகேசரும், கருவூராரும், சிவவாக்கியரும், மாணிக்கவாசகரும், கொங்கணரும், இடைக்காடரும், கோரக்கரும், ரோமரிஷியும், திருஞானசம்பந்தரும், புஜண்டரும், தூர்வாசரும், இராமதேவரும், அழுகண்ணரும் இன்னும்பல ஞானிகளும்.

நாங்களும் வள்ளலை குருவாய் ஏற்று
நானிலத்தில் எங்களுக்கு பேதமேது
பாங்கான வள்ளலும் ஈசனும் ஒன்றே
(இராமலிங்க சுவாமிகளும், சிவபெருமானும் ஒன்றே.)
பாடுதற்கு பேதமேது யாவும் ஒன்றே 17.

ஒன்றாக இருந்துநாங்கள் விழாவை நடத்தி
உன்னோடு கலந்து நாங்கள் வெற்றி செய்வோம்
என்உருவே வள்ளல்தான் வேறல்ல மைந்தா
எங்களுக்கு ஒருகுலமே ஒன்றாய் நிற்போம் 18.

நிற்கவே வள்ளலே சித்திதன்னை
நிகழ்த்தினார் வாசகனார்(மகான் மாணிக்கவாசகர்) தன்னைப்பற்றி
அற்புதமே அற்புதமே இருவரும் செய்தார்
அகிலத்தோர் இருபிரிவை பிரித்துவைத்தார் 19.

வைத்தார்கள் மூலவர்க்கம் கைலாயவர்க்கம்
மூடரவர் யாவருமே ஒன்றாகும் என்றோம்
சித்தர்கட்கு ஏதுவர்க்கம் ஏதுசாதி
சித்திநிலை ஒன்றுதான் எங்கள் நோக்கம் 20.

நோக்கிப்பார் எங்களையும் நொடியில் வருவோம்
நுண்ணறிவை ஒருகணத்தில் தருவோம் நாங்கள்
ஆக்குவது அழிப்பதுவும் அரைக்கணம்தானே
அஞ்ஞானம் மெய்ஞானம் விஞ்ஞானமெல்லாம் 21.

எல்லாமும் எங்களுக்குள் அடக்கம்மைந்தா
ஈசனும் மூலனும் ஒன்றாகும் மைந்தா
நல்லதொரு அகத்தியரும் நானும்ஒன்றே
நாரனனும் அறுமுகனும் நானும்ஒன்றே 22.

ஒன்றாக எங்களையும் பார்க்கவேண்டும்
ஓங்காரம் ஓங்கவேண்டும் அதுவே ஆசி
மன்னரான கவுசிகரும் நானும்ஒன்றே
மச்சமுனி வேறல்ல என்உருவம்தான் 23.

தானாக எவருமே புகழ்ந்ததில்லை
தலைவனைதான் நாங்கள் புகழ்ந்துநிற்போம்
ஆனதொரு எங்கள்வழி நின்றுவள்ளல்
அடைந்திட்டார் சித்திநிலை குருவே என்றோம் 24.

குருவென்றால் நடுவனை நிறுத்தி சொல்வோம்
(புருவ மத்தியாகி சுழிமுனையில்)
குவலயமே எங்களது விளையாட்டுஎல்லை
உருவான உயிரினங்கள் எங்கள் இனமே
ஒவ்வொரு உயிரோடும் நிற்போம் நாங்கள் 25.

நாங்களே முத்தொழிலை செய்துபார்ப்போம்
நாங்களே ஐந்தொழிலை விளையாட்டாய் செய்வோம்
நாங்களே ஞானிகளை உருவாக்கி நிற்போம்
நாங்கள்தான் அரங்கனை உருவாக்கி வைத்தோம் 26.

வைத்ததனால் உலகம் இன்று விழித்ததப்பா
வாராவிட்டால் மெய்ஞானம் அழிந்திருக்கும்
சித்தர்களை யாரென்று உலகுக்கு உரைத்த
செல்வனே அரங்கனே தேசிகனே வாழ்க 27.

வாழ்கவே மாந்தரினம் உன்னைபற்றி
வழுத்தினேன் (சொல்லுதல்) மகாமந்திரம் உனக்காகதானே
ஆழ்ந்ததொரு பலர்வினைகள் அழிவதற்கு
அமைத்தாய் நீ அழகாக இரண்டையும்தான் 28.

தானமைத்த அழைப்பிதழும் அழகுஎன்றேன்
தலையாக சிறுபாக மந்திர அட்டை
ஆனதொரு நேர்த்தியோடு அமைத்துஉள்ளீர்
அதுசெய்யும் ஒருகோடி அற்புதத்தை 29.

அற்புதத்தை உணரவைக்கும் சத்தியவாக்கு
அன்றுவந்தோர் அடைந்திடுவார் பேரானந்தம் திண்ணம்
கொற்றவனாய் உனைகண்டேன் கிழவன் இன்று
குமரனாய் பேரனாய் காண்பேன் இப்போ 30.

இப்பவும் மந்திரத்தின் அட்டையைதான்
இல்லமோடு உடன்வைத்தோர் அற்புதம்காண்பார்
செப்புகிறேன் அவர்க்கேது கண்டம்கட்டம்
சென்மவினை பில்லிசூனியம் பொடிப்பொடியாகும் 31.

ஆகுமிதை வைத்தோர்க்கே இவ்வாறென்றால்
அதைமுறையாய் தியானித்தால் என்போல் ஆவார்
வாகுடனே இதுவள்ளல் வாக்குதானே
வராதுஇனி இதுபோல் வாய்ப்புதிண்ணம் 32.

திண்ணமதாய் உலகோர்க்கே இதைநாங்கள் தந்தோம்
தேடிவாரீர் வந்துநலம் காண்பீர்குடிலில்
எண்ணமெலாம் சித்தியாகும் சித்திக்கவைப்போம்
எங்களுக்கு ஆனந்த பெருவிழாவாகும் 33.

ஆகும்இந்த மந்திரங்கள் மூன்றையும்தான்
அடக்கியே அமைத்தவிதம் சிறப்புமைந்தா
வாகுடனே சிவயசிவ மந்திரத்தை
வடித்துவிதம் பெருமையப்பா மகிழ்ந்தார்வள்ளல் 34.

வள்ளல்தானே சபைக்கு அன்று தலைவராகும்
வருவதுவும் அவரைப்பற்றி நாங்களும் அன்று
கள்ளமில்லா விழாவன்று திரைகள்நீக்கி
காட்டியே சோதியை மந்திரத்தை 35.

மந்திரத்தை ஒருசேர யாவரும் சொல்ல
மகாசக்தி அற்புதத்தை உணர்வீர்திண்ணம்
சுந்திரமாய் இதற்குநிகர் இனிஒன்று இல்லை
சுகம்பெறுவீர் அன்றுதிண்ணம் இதுஎன் ஆணை 36.

ஆணையிட்டு மூலன்வாக்கு இனிஎவர்க்குமில்லை
அரங்கனுக்கே என்சக்தி இனிஎவர்க்கும் இல்லை
ஆனதொரு விழாவன்று மாந்தர்கட்கு
அமுதளிக்க அமுதமே அமிழ்தமாகும் 37.

ஆகும்என் அருள்வாக்கு அரங்கனுக்கே
அடைவார்கள் மகிமைதனை தடைகள்நீங்கி
சாகாநிலை அடைவதற்கே இதுவே மார்க்கம்
சாற்றுகிறேன் மற்றவைகள் மெய்இல்லை என்று 38.

என்றுசொல்ல வள்ளல்தான் அதிகாரம்தந்தார்
இவையாவும் வள்ளல்வாக்கு என்வாக்கல்ல
இன்றுவந்த பிச்சைமணிக்கும் வாய்ப்பாகும்
என்ஆசி வள்ளல்ஆசி யாவருக்கும்உண்டு 39.

உண்டான அற்புதத்தை நிகழ்த்திகாட்டி
உருவாக்கி புதுயுகத்தை புதுவேதத்தை
கண்டுரைப்போம் புதுவழியை புதுமந்திரத்தை
கவலைஏது இனிஉலகோர் அமைதிகாண்பார் 40.

நிற்கவே நவகோடி சித்தரும் ஒன்றாய்
நீயும்அதில் நானும்அதில் வள்ளலே ஆசான்
கொற்றவனே சித்திநிலை நீ அடைந்தால்
குருஎன்று யான்சொல்வேன் பேதமேது 41.

நிற்கவே நவகோடி சித்தரும் ஒன்றாய்
நீயும்அதில் நானும்அதில் வள்ளலே ஆசான்
கொற்றவனே சித்திநிலை நீ அடைந்தால்
குருஎன்று யான்சொன்வேன் பேதமேது 42.

பேதமேது வேதம்ஒன்றே விளங்கிநிற்கும்
பேசிட்ட வார்த்தைதான் வேறுமைந்தா
ஆதிமுதல் அந்தமாய் இணைந்தேநிற்போம்
அகத்தியரும் மூலரும் வள்ளலும் ஒன்றே 43.

ஒன்றாக வள்ளல்தான் இனிஆட்சி செய்வார்
ஓய்வுகொண்டோம் வள்ளலுக்கே அதிகாரம்தந்தோம்
நன்றாக இனிஅவரே பிரபஞ்ச ஆசான்
நானிலமே எங்குசுற்றி வள்ளலைகாணும் 44.

காணுவதே இறுதிநிலை வழிவேறு இல்லை
கரம்பிடித்து நடந்தோர்கள் சித்திசித்தி
காணுவார்கள் இனிவேறு வேதமில்லை
கருத்தில்லை இனிவேறு வார்த்தையில்லை 45.

இல்லையப்பா மூலனே மெய்யாய் சொன்னேன்
இதன்பின்னும் புதுமைசெய்ய நீயே உள்ளாய்
சொல்லிஉள்ளேன் சிலசூட்சம் உனக்குதனியாய்
சுந்திரனே நீ அறிவாய் ஆசிமுற்றே 46.

.....சுபம்.....

# மகான் அகத்தீசர் ஆசிகாண்டம்

## 14 – 04 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன், ஸ்ரீ அகத்தியர் நாடிஜோதிடர்,
90A வள்ளுவர் நகர், சங்கிலியாண்டபுரம், திருச்சி – 1.

சுபத்தில் பிறந்ததொரு அரங்கா போற்றி
சூட்சமத்தை பிடித்ததொரு அரசா போற்றி
சுபத்தினை வழங்கிவரும் தேசிகா போற்றி
சுத்தத்தின் சுத்தமே நின்திருவடிகள் போற்றி 01.

போற்றியே சுபானு ஆண்டு முதலாம் நாளில்
புகலவந்தேன் புத்தாண்டு வாழ்த்து ஆசி
பார்சிறக்க இவ்வாண்டு உந்தன் ஆசி
பாருலகம் உன்பெருமை உணருமப்பா 02.

அப்பனே சுபானுவாம் இவ்வாண்டில்தான்
அரங்கர் உன் ஆசியால் சுபங்கள் பெருகும்
ஒப்பில்லா ஆண்டாண்டாய் தவங்கள் செய்து
உயர்வான ஆண்டவரின் இடத்தை எய்தி 03.

எய்தியே சுத்த சன்மார்க்கம் துலங்க
இவ்வுலகில் வந்திட்ட இறைவன் நீயே
மெய்ஞான ஆண்டவரின் கட்டளை இதுவே
மேதினியில் ஆண்டவரின் கட்டளையை ஏற்று 04.

ஏற்றுமே இவ்வுலகை ஆளவந்த
இறைஞான தேசிகரே வாழ்க வாழ்க
உற்றதொரு தேசமதின் தலைவன் நீயே
உலகத்தில் தேசியமாய் (ஒளிமயமாய்) வாழ்பவர் நீயே 05.

வாழ்ந்திடவே பலஞானிகள் பலசித்தர்கள்
வருமுலகில் பலசீடர்களை கொண்டு
வாழ்வளிக்க தொண்டுகள் பலபுரிவாயப்பா
வாழவைக்க வந்ததொரு மகானே வாழ்க 06.

வாழ்கவே மகான்களின் பெருமைகள் தன்னை
வையகத்தில் சிறக்கவைக்க வந்த வள்ளலே
வள்ளலின் வாரிசே வாழ்க பல்லாண்டு
வளர்க உன் தொண்டுகள் யாவும் உயர்க 07.

தொண்டுடனே புகழ் ஓங்க ஆசியுண்டு
தெரிவித்தேன் புத்தாண்டு இன்றுநாளில்
தொண்டுகள் ஓங்கிட தனம் சிறக்க
தரணியிலே ஞானிகளின் ஆசியுண்டு 08.

உண்டான இவ்வாண்டு உலகம் முழுதும்
உன்பெருமை அறம் சிறக்கும் ஆசியுண்டு
கொண்டுரைப்பேன் சித்திகளும் கூடிநிற்கும்
குருவுக்கும் குருவாக விளங்குவாயே 09.

விளங்கிடவே அகத்தியர் யான் அளித்தேன் ஆசி
வளம்பெருக சுவடிவழி அளித்தேன் இன்னாள்
களங்கமிலா சற்குருவே தேசிகா வாழ்க
கண்டுரைத்த புத்தாண்டின் ஆசிநூல்
இப்பாகம் முற்றும் முற்றே 10.

.....சுபம்.....

## மகான் அகத்தீசர் ஆசிகாண்டம்

**02 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

உண்மை ஆன்மீகம் உணர்த்திய அரங்கா போற்றி
உண்மை ஆன்மீகம் வளர்த்த அரசா போற்றி
உண்மை ஆன்மீகம் தந்த தேசிகா போற்றி
உண்மையே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தியர் என் ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் உந்தனுக்கே
பார்காக்க ஆன்மீகம் தனை உணர்த்தி
பாருலகை வாழவைத்த கடவுள் நீயே 02.

கடவுள் நின் திருவடியை வணங்குவோமே
காக்கின்ற சக்தியை பெற்றாய் நீயே
கடவுளாய் கலியுகத்தில் விளங்கு வாயே
கருணையில் உமக்குநிகர் உலகில் ஏது 03.

ஏதுவான ஆன்மிக உணர்வை உணர்த்தி
ஏழைகளின் பசி போக்கி வாழ்வு தந்து
மேதினியை மாற்றிவைத்தாய் அரங்கா நீயே
மக்களின் தாகம் தீர்த்த தீர்க்கதரிசி நீயே 04.

தரிசனமும் உமைகண்டோர் நலம் பெறுவார்
தரணியிலே உலகை அள வந்தாயப்பா
அருள்நிலையில் உயர்ந்திட்ட அரங்கா வாழ்க
அறத்தின்மழை பொழிந்திட்ட அரசா வாழ்க 05.

வாழ்கவே சித்திகளில் உயர்வாய் நீயே
வையகத்தை வாழவைப்பாய் ஆசிதந்து
வாழ்வுதர தவம்புரியும் அரங்கா நீயே
வையகத்தின் அருட்பெருஞ் சோதியப்பா 06.

சோதியே உன்சோதி உன்னில் உயரும்
சோதியதும் உச்சியை எட்டும்போது
மேதினியை மாற்றிடுவாய் அருள்பலத்தால்
மகத்தான ஞானரசம் அருந்தி மகிழ்வாய் 07.

மகிழ்ந்திடவே உலகமும் மகிழுமப்பா
மகான் நீ உயர உலகம் உயரும்
மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்களும் திளைப்பார்
மகான்உன் அருள்உயர ஆசியுண்டு 08.

உண்டான அறம் உயர ஆசியுண்டு
உரைத்திட்டேன் அகத்தியர் என் ஆசியுண்டு
கண்டுகொண்டோம் உந்தனின் அற்புதத்தை
கண்டுரைத்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

# ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

## 03 – 06 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தின் பேரரசே அரங்கா போற்றி
ஞானிகளின் ஆட்சிதரும் அரசா போற்றி
ஞானத்தில் சிறந்ததொரு தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தியர் என் ஆசிதன்னை
பூவுலகில் வழங்க வந்தேன் இன்றுநாளில்
பார்காக்கும் பெருந்தெய்வம் நீதானப்பா
பரம்பொருள் நின்திருவடியை போற்றினேனே 02.

போற்றியே மகிழ்ந்தோமே ஞானிகள் எல்லாம்
பூவுலகில் உம்மால்தான் மாற்றம் நடக்கும்
பார்த்துரைக்க அகத்தும் புறத்தும் நீயே
பலன்தரும் கற்பக விருட்சம் நீயே 03.

விருட்சம்போல் மக்களுக்கு எண்ணிய வற்றை
வழங்கிநீ பேரின்பம் கொள்வாயப்பா
அருட்கடாட்சம் தொண்டர்கட்கு வழங்குவாயே
அவரவர்க்கும் ஞானநிலை உண்டு உண்டு 04.

உண்டான உன்கருணை கண்டு வியந்தோம்
உலகத்தில் ஜாதிமத பேதம் இல்லா
தொண்டுகளை வழங்கிய தயாபரம் நீ
தரணியிலே உயர்வு தாழ்வு ஏதும்காணா 05.

காணாத கருணைஉள்ளம் உந்தன் உள்ளம்
கருணையில் உயிர்கள்மீது கொண்டபற்று
பேணவே காக்கின்ற எண்ணம் நீயே
பேசிடுவேன் எவ்வுயிர்க்கும் தீங்கிழைக்கா 06.

இழைக்காது அன்பு கொண்டே காத்தாயப்பா
எவ்வுயிரையும் சமமாக நீயும் எண்ணி
வாழவைத்தாய் அரங்கா நீ வாழ்க வாழ்க
வையகத்தில் உன்மார்க்கம் ஞானமார்க்கம் 07.

மார்க்கத்தின் தலைவன்நீ வாழ்க வாழ்க
மக்கள் குறைதீர்க்க வந்தகடவுள் நீயே
பார்சிறக்கும் உன்னருளால் உன்தவத்தால்
பார்சிறக்கும் உன்தவத்தால் உன்அறத்தால்தான் 08.

அறத்தினில் உமக்குநிகர் யாருமில்லை
அறத்தினை கடல்போலே வழங்கினாயே
அறத்தின் தலைவன் நீ வள்ளல் நீயே
அறத்தால் உலகை காக்கும் அரங்கா வாழ்க 09.

அரங்கா உன் அறம்சிறக்க ஆசியுண்டு
அரங்கா உன் தவம் சிறக்க ஆசியுண்டு
அரங்கா உன் அருள்உயர ஆசியுண்டு
அகத்தியர்யான் ஆசிதந்தேன் படலம் முற்றே 10.

.....சுபம்.....

## ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

**04 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

கலியுக கல்கியே அரங்கா போற்றி
கலியுக வள்ளலே அரசா போற்றி
கலியுக தெய்வமே தேசிகா போற்றி
கலியுக ரெங்கையா நின்திருவடி போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தியர் என்ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் உந்தனுக்கே
பார்காக்கும் அவதார புருஷன் நீயே
பாருலகம் சிறக்குதப்பா உந்தன் அருளால் 02.

அருள்பெருக மேன்மேலும் அறங்கள் செய்தாய்
அரங்கா உன்னருளால் மழையும் இப்போ
அருள்சிறக்க பொழியுதப்பா ஆசியுண்டு
அவணியையே உன்னருள்தான் காக்குதப்பா 03.

அப்பனே தமிழகமும் அமைதியாக
அரங்கா உன்னருளால் விளங்குதப்பா
ஒப்பில்லா நீ வாழ்ந்த பூமிதன்னில்
உன்எல்லையில் தீவிர வாதம் அண்டா 04.

அண்டா விலகிடுமே உந்தன் ஆசி
அரங்கா நீ வேண்டிவிட்டாய் மழையும் பொழிய
ஆண்டதனில் நிறைவாக மழைபொழியும்
அன்பர்கள் மனம் குளிர பொழியுமப்பா 05.

அப்பன்உன் ஆசியினால் விவசாயம் பெருகும்
அவணியின் இடர்யாவும் விலகுமப்பா
ஒப்பில்லா ஞானிகளும் அளித்தோம் ஆசி
ஓங்காரன் உன்னருளே உலகைகாக்கும் 06.

காக்கவே உன்குடிலை நோக்கி நாங்கள்
கருணை மழை பொழிந்திட வருவோமப்பா
ஊக்கமாக தொண்டுசெய்யும் அனைவருக்கும்
உயர்ஆசி அளித்திடுவோம் உயர்வார் வாழ்வில் 07.

வாழ்வினிலே உன்அருளால் ஞானிகள் ஆட்சி
வளம்பெறவே வந்தடையும் ஆசியுண்டு
வாழ்வளிப்பாய் கலியுகத்தை மாற்றிவைப்பாய்
வள்ளல் அரங்கராஜ தேசிகா வாழ்க 08.

வாழ்கவே எண்ணங்கள் சித்திபெற
வரமளிப்போம் ஞானிகளின் ஆசியுண்டு
வாழ்வளிக்கும் அருட்சோதி அரங்கா வாழ்க
வழுத்திவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே. 09.

.....சுபம்.....

# ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

## 05 – 06 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன்

அன்னதான சிறப்பை எடுத்துரைத்த அரங்கா போற்றி
அன்னதானத்தை சிறப்பாய் அருளிய அரசா போற்றி
அன்னதானத்தின் மகத்துவம் தந்த தேசிகா போற்றி
அன்னதானமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தியர்என் ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் குடில் சிறக்க
பார்காக்க அவதாரம் நீயும் கொண்டாய்
பார்காக்க மாதவத்தை புரிந்தாய் நீயே 02.

புரிந்ததொரு உன்தவமும் சித்தி சித்தி
பூவுலகை காக்கின்ற ஞானி நீயே
அருள்தரும் ஞானிநீயே வாழ்க வாழ்க
அமுத சுரபி நீதானே கலியுகத்தில் 03.

கலியுகத்தில் அமுதமழை நீபொழிந்தாய்
கோடிகோடி மக்களை காத்தாய் நீயே
நலிந்தவரை வாழவைத்த கடவுள் நீயே
நாயகன் உனை அண்டியோர் உயர்வார் வாழ்வில் 04.

வாழ்வினிலே தொண்டர்களை உயர வைத்தாய்
வந்தடைந்த அனைவரையும் காத்து வாழ்ந்தாய்
வாழ்வளிக்கும் தவயோகி அரங்கா வாழ்க
வாழ்வளிக்கும் உன்கொள்கை கடவுள் கொள்கை 05.

கடவுளின் மார்க்கமிது சன்மார்க்கம் தான்
கடவுளின் கொள்கையினால் சுலபமாகத்தான்
சோடைநீக்கி இறைஅனுபவத்தை பெற்று
சுருதிபடி எல்லா இன்பங்களையும் அடைந்து 06.

அடைந்துமே பெருவாழ்வு வாழலாமே
அருள்ஜோதி மயமாகி எங்கும் நிறைந்த
தடையில்லா இறைவனருள் அடையலாமே
தமிழகத்தை சிறப்படைய வைக்க வந்தாய் 07.

வந்தாயே உலகிலேயே தமிழகம் தான்
வளர்ந்துமே ஓங்கியே உயர்ந்ததப்பா
சிந்தையுடன் கடவுள் நம்பிக்கையை வளர்த்தாய்
சித்தர்களின் பெருமைதனை உணர வைத்தாய் 08.

உணர வைக்கும் உன்குடிலும் ஓங்கும்ஓங்கும்
உலகத்தை வாழவைக்கும் என்றுசொல்வேன்
உணரவைத்த ஞானியே அரங்கா வாழ்க
உரைத்திடுவோம் நடைமுறை தொடர்புநூல்
ஒன்று ஆசிபடலம் முற்றே 09.

.....சுபம்.....

## ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

**12 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஆனந்த பெருவிளக்கே அரங்கா போற்றி
ஆனந்த ஆட்சிதரும் அரசா போற்றி
ஆனந்தம் வழங்கிவரும் தேசிகா போற்றி
ஆனந்தமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தியர் என் ஆசிதன்னை
பூவுலகில் உந்தனுக்கு அளிப்பேன் இன்னாள்
பார்காக்கும் அரங்கருக்கு வழங்குவேனே
பாருலகை காக்கவந்த தேசிகா வாழ்க 02.

வாழ்கவே நிலையான இன்பம் தந்தாய்
வாடுபவரின் பசியதனை போக்குவதினால்
வாழ்வினிலே ஏற்படும் இன்பம்தானே

வையகத்தில் நிலையான இன்பமாகும் 03.

ஆகுமே அழிவில்லா இன்பம் இதுவே
ஆனந்தம் தந்திடும் சேவை இதுவே
யோகத்தை தந்தருளும் தொண்டு இதுவே
உயர்நிலையை தந்தருளும் இன்பமே அறம் 04.

அறத்தின்வழி இன்பஆட்சி தந்தாயப்பா
அரங்காஉமை போற்றியே ஞானிகள் மகிழ்ந்தார்
அருட்பிரகாச வள்ளல்நீ வாழ்க வாழ்க
அருள்தரும் கற்பகம்நீ வாழ்க வாழ்க 05.

வாழ்கவே உன்பாதை அழிவில்லா பாதை
வையகத்தில் உன்மார்க்கம் அழிவில்லா மார்க்கம்
வாழ்வினிலே பின்பற்றி வாழ்ந்தவர்க்கெல்லாம்
வையகத்தில் நிலையான பேரின்பம் உண்ட 06.

உண்டாகும் ஞானநிலை உண்டு உண்டு
உந்தனுக்கும் பெரும்வெற்றி காத்திருக்கு
தொண்டினால் தவசக்தி உயர்ந்ததப்பா
தரணியிலே ஞானியாக உலவுவாய் நீ 07.

உலவியே உலகமக்கள் அனைவருக்கும்
உயர்வான ஆனந்தம் அளிப்பாய் நீயே
கலகத்தை அகற்றியே கனிவை அளிப்பாய்
கருணைக்கடல் அரங்கா உன் ஞானம் வெற்றி 08.

வெற்றியதும் ஒருநொடியில் வந்துசேரும்
வெற்றியுண்டு இளமைதேகம் உந்தனுக்கே
வெற்றிகளும் வந்தடையும் ஆசியுண்டு
விளம்பினேன் அகத்தியர்யான் ஆசிநூல் முற்றே 09.

.....சுபம்.....

## ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

**28 – 01 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தின் ஜோதியே அரங்கா போற்றி
ஞானத்தின் பேரருளே அரசா போற்றி
ஞானத்தின் வல்லமையே தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தியர்யான் நித்தியசுவடி
பூவுலகில் அளித்திடுவேன் ஆசியோடு
சீர்செய்ய வந்தாயே உலகம் தன்னை
சிந்தனையில் உன்தவமே உலகை காத்தல் 02.

உலகத்தை காக்கவும் நீ அவதரித்தாய்
உன்தவம் வெற்றியாகும் ஆசியுண்டு
கலகங்கள் குழப்பங்கள் வறுமை பஞ்சம்
கருணையில்லா மக்களின் மனச்செயலால் 03.

செயலால் விளைந்துவிட்ட துன்பமப்பா
செப்பிடவே ஞானிகள்நாம் விலகிக்கொண்டோம்
நேயமிலா மக்களுக்கு உதவ மாட்டோம்
நிலமதனில் உலகமாற்றம் அடைவதற்கும் 04.

அடைவதற்கும் மக்கள் உமை உணர்வதற்கும்
அவனியிலே இறைவன் நடத்தும் நாடகமிதுவே
சோடைகள் அகன்றிடவே உம்மைநாடி
சுருதிபடி (வேதம்) நேயமதை வளர்த்துக் கொண்டால் 05.

கொண்டாலே உலகமாற்றம் நிகழும்தானே
குவலயத்தில் பஞ்சங்கள் வறுமை நீங்கும்
உண்டான நதிகளும் இணையும்தானே (கங்கை – காவிரிஇணைப்பு)
உலகத்தில் மும்மாரி மழைபொழியும் 06.
(மாதம் மும்மாரி மழைபொழியும்)

பொழியுமே நெல்விளையும் பஞ்சம் நீங்கும்
பூவுலகில் ஞானிகளின் ஆசி கிட்டும்
தெளிவுநிலை பெற்றிடவே உபதேசத்தை
தரணியெங்கும் பரப்பிடுவாய் அளிப்பேன் ஆசி 07.

ஆசியுண்டு இதன்காலம் வழங்கினேனே
அகிலமெங்கும் உன்புகழை ஓங்கச் செய்வாய்
ஆசிதனை அளித்திடுவாய் உலகத்தோர்க்கே
அன்புடனே நேயமதை வளரச் செய்வாய் 08.

செய்வாய் உலகமாற்றம் ஆகுமப்பா
சிறப்புஉண்டு ஞானிகளின் ஆசியுண்டு
மெய்யுடனே உலகமே உன்னை நாடும்
மேன்மையான காலம் வரும் அளிப்பேன் ஆசி 09.

ஆசியுண்டு அருந்தவத்தை தொடருவாயே
அறிவித்த வாசியோக பயிற்சி தன்னை
நேசமுடன் தொடர்ந்துசெய்ய ஆசியுண்டு
நிலமதனில் மேல்நிலை பயிற்சிகள் யாவும் 10.

பயிற்சிகளை சிலநாளில் தொடர்ந்தளிப்போம்
பாருலகில் தேகசித்தி யோகசித்தி
பயிற்சிகளால் நயனஒளி தானே தோன்றும்
பாருலகில் இதற்குரிய ஔடதமும் (மருந்து) 11.

ஔடதமும் அளித்திடுவோம் ஆசியுண்டு
அறமெங்கும் செய்திடவே பொருளும் ஈவோம்
தடைஏது அறப்பணிகள் தொடர்ந்து செய்வாய்
தரணியிலே பதுமாசனம் பாவவிமோசனம் 12.

விமோசனத்தை உலகுக்கு அளிப்பாயப்பா
விளம்பிவந்த ஆசனத்தில் அமர்ந்து தவம்
நேமமுடன் உன்எண்ணம் யாவும் சித்தி
நிலமதனில் பதுமாசனத்தில் அமர்ந்துகொண்டு 13.

கொண்டுமே வாசியதை நோக்குவாயே
குவலயத்தில் இருநாசியிலும் வாசி சமமாய்
கொண்டுரைக்க தொடர்ந்து வரும் நிலையறிந்து
குவலயத்தில் தவம்தொடர அளிப்பேன் ஆசி 14.

ஆசியுண்டு வெற்றியாகும் தவமே சடுதி
அவனியிலே வாசி சமமாய் ஓடும் காலம்
ஆசிதானே தவம்செய்ய உகந்த நேரம்
அதுதானே தொடர்ந்துவிடு தவமும் தன்னை 15.

தன்னிலே பதுமாசனத்தால் வாசிசமம் ஆகும்
தரணியிலே இடகலையும் பிங்கலையும்
உண்மையுடன் சுழிமுனையில் சேரும் காண்பாய்
உயர்ந்தெழும்பும் குண்டலியும் ஆசனத்தால் 16.

ஆசனத்தில் அமர்ந்துமே சுழியை நோக்கி
அருந்தவத்தை புரிந்திடுவாய் அரங்கா வாழ்க
நேசமுடன் சின்முத்திரை உணரவேண்டி
நூலாசான் அனுப்பிவைத்தோம் உணர்ந்துகொள் 17.

கொண்டாயே ஞானிகளும் மகிழ்ந்தோம் நாமே
குருமுனி என்உருவமதில் அதுவும் உண்டு
கண்டுகொள் அதுநானே அறிவாயப்பா
கண்டுரைத்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 18.

.....சுபம்.....

## ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

## 26 – 07 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன்

ஆனந்த ஜோதியே அரங்கா போற்றி
ஆனந்த வாழ்வுதரும் அரசா போற்றி
ஆனந்தம் தனைஈந்த தேசிகா போற்றி
ஆனந்தமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தியர் என் ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் உந்தனிற்கே
பார்த்துரைக்க உன்தவத்தால் உலகம் சிறக்க
பாருலகில் மனம் மிகழ்ந்தேன் கும்பன் (அகத்தியர்) யானே 02.

கும்பன் (அகத்தியர்) என் ஆசியுண்டு குடில்சிறக்க
குலவயத்தோர் மகிழ்ந்திருக்க ஆசியுண்டு
கும்பமுனி என்ஆசி உலகிற்கு ஈய
குருவும் நீ வழிவகைகள் செய்ய வேண்டும் 03.

வேண்டியே என் ஆசி மக்கள் அடைந்தால்
வறுமைபிணி இடரண்டா மகிழ்வு காண்பார்

**ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று காலையில் 30 நிமிடமும், மாலையில் 30 நிமிடமும், முடிந்தால் இரவு 12 மணிக்கு 30 நிமிடமும் சமமான இடத்தில் ஒரு வெண்ணிறத்துணியில் அமர்ந்து, திருவிளக்கு ஏற்றியும், நறுமணமுள்ள பத்தி வைத்தும் (திசை முக்கியமல்ல, பக்திதான் முக்கியம்) நாமஜெபம் செய்தவந்தால் முன் செய்த பாவங்கள் நீங்கி, புண்ணியம் பெருகும். மேலும், வறுமை நீங்கும், நோயும் தீரும். நமக்கு வரும் பல இடையூறுகளும் வராது. வாழ்க்கையில் பல முன்னேற்றங்களும் ஏற்படும். எனவே, **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் செய்யவதைத் தவிர வழியில்லை. ஆகவே, ஆசான் அகத்தீசர் திருவடியைப் போற்றுவோம், மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று வாழ்வோம்.

உண்டாகும் நன்மைபல மக்களுக்கு
உலகத்தில் மழைபொழியும் கழனி (விவசாயம்) செழிக்கும்

ஆன்மீக அன்பர்கள் தொடர்ந்து ஆசான் அகத்தீசர் திருவடியைப் பூஜித்தால், நாட்டில் மழைவளம் உண்டாகும். அதன் காரணமாக விவசாயம் நல்ல முறையில் நடைபெறும்.

செழிப்பாகும் பூமி எல்லாம் ஆசியுண்டு
(உலகம் அனைத்தும் செழிக்கும்.)
செப்புகிறேன் பின்வரும் வாக்கியத்தை
தெளிவுபெற மக்களெல்லாம் உணரும் வண்ணம்

தரணியிலே நவீனவகை (பல வண்ணங்களில்) அச்சிட்டு 05.

அச்சிட்டு பிரதிபல தமிழகமெங்கும்
அவனியிலே ஒட்டி வைக்க ஆசியுண்டு
அச்சிட்டு வெளியிடுவோர் அனைவருக்கும்
அருள்பெருகும் நலம் பெருகும் ஞானிகள் ஆசி 06.

ஆசியுண்டு ஞானசித்தி உண்டுஉண்டு
அறிவிப்பேன் நடைமுறையில் வாக்கியத்தை
ஆசிபெற அவரவரும் அச்சிட்டு
அற்புதமாய் வெளியிடவே ஆசியுண்டு 07.

ஒன்றே குலம்
ஒருவனே தேவன்
நாம் அனைவரும் அகத்தியர் குலம்
நமது இறைவன் அகத்தீசன் 08.

அகத்தீசன் என்று சொல்ல அவரவர்க்கும்
அருள்செய்வேன் அகத்தியர் என் ஆசியுண்டு
ஜெகமதனில் முறைசெய்ய அனுமதி தன்னை
சித்தர் உமக்கு அளித்திட்டேன் இன்றுநாளில் 09.

நாள்நாளும் அருள்உயர ஆசியுண்டு
நல்லாசி அளித்திடுவாய் தொண்டர்கட்கும்
சொல்லிட்டேன் அகத்தியர்யான் இன்றுநாளில்
செப்பிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 10.

.....சுபம்.....

ஆசான் அகத்தீசன் அருளிய

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**
**நாம் அனைவரும் அகத்தியர் குலம்**
**நமது இறைவன் அகத்தீசன்**

என்றகருத்துக்களை அடங்கிய கொள்கையை வெளியிடலாமா என்று ஆசான் அகத்தீசர் திருவடி பணிந்து ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத் தொண்டர்கள் வேண்டி கேட்கும்பொழுது ஆசான் அகத்தீசர் மனமகிழ்ந்து

மேற்கண்டபடி அமைத்து வெளியிட்டு, ஆசிபெற்றுக் கொள்ளுங்கள் என்றும் சுவடிமூலம் ஆசான் அகத்தீசர் 26–07–2003 அன்று அருள்வாக்கு அருளியுள்ளார்கள்.

எனவே, ஆன்மிக அன்பர்கள் மேற்கண்ட வாக்கியங்களை அமைத்து, சுவரொட்டியாகவோ (போஸ்டர்) அல்லது துண்டுப் பிரசுரமாகவோ வெளியிட்டு ஆசான் அகத்தீசர் ஆசி பெறலாம். அவரவர்கள் தங்கள் பெயர்களில் வெளியிடலாம் என்பது ஆசான் அகத்தீசர் அருள்வாக்கு.

உலகத்தில் பல்வேறு இனங்கள், பல்வேறு மதங்கள் இருப்பதால் இனக்கலவரங்களும், மதக்கலவரங்களும் ஏற்பட்டு பல உயிர்கள் மாண்டு மடிகின்றன. எனவே, ஒரே குலமாகிய அகத்தியர் குலம் மட்டும் இருந்தால், உலகத்தில் இனக்கலவரமோ மதக்கலவரமோ இல்லாது உலகம் அமைதியுடன் வாழும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் ஓங்காரக்குடிலில், பல்வேறு இனமக்களும், பல மதத்தைச் சார்ந்த மக்களும் ஒருதாய் மக்களாக இருந்து அறப்பணிகளை செவ்வனே செய்து வருகிறார்கள்.

இங்கே இனஉயர்வு தாழ்வு இல்லை. மதப்பிரச்சனையும் இல்லை. இதுபோல் உலகத்தில் உள்ள அனைவருக்கும் இதைக் கடைபிடித்தால் அதுதான் அகத்தியர் குலமாகும். இக்குலமாகிய அகத்தியர் குலம் உலகெங்கிலும் பரவினால் ஆச்சாரம் இல்லது கலாச்சாரப் பிரச்சனைகள் எழாது.

ஒரே குலம், ஒரே கலச்சாரமாக இருந்தால் மக்களில் உயர்வு தாழ்வு என்ற பேச்சுக்கே இடமிருக்காது. அகத்தியர் குலம் என்பதும் ஜீவதயவு அல்லது ஜீவகாருண்யம் அல்லது மனித நேயம் அல்லது மனிதாபிமானம் ஆகிய அனைத்தும் ஒரே பொருளைக் குறிக்கும். ஜீவகாருண்யம் என்பது அனைவரையும் கடவுளின் பிள்ளைகளாக நினைத்தாலும், நேசிப்பதுமே ஆகும்.

எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய அகத்தீசர் ஆசிபெற வேண்டும் என்றால் தன்னுயிர்போல் எல்லா ஜீவராசிகளையும் மதித்தலும், அவ்வுயிர்களுக்குப் பரிவு காட்டுதலும், அவ்வுயிர்களுக்கு வரும் இடர்களைத்

தீர்ப்பதே ஆசான் அகத்தீசர் ஆசிபெற உற்ற துணையாக இருக்கும்.

## ஆசான் அகத்தீசர் ஆசிகாண்டம்

**17 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

சங்கரனார் பொற்கமலம் பணிந்து போற்றி
சாற்றுகிறேன் அருள்மக்கள் வேண்டும் பலன்கள்
மங்களமாய் புவிதனிலே மாந்தர் வாழ
முனிவர்களும் சித்தர்களும் வழிவுரைத்தார் 01.

வழிகண்டு மாந்தர்கள் பலன்கள் பெற்று
வாழ்ந்திடவே தேவர்களும் வாழ்த்திநிற்க
வழியுண்டு யென்றுமே அகத்தியன் சொல்வேன்
தாழ்வில்லா ரகசியங்கள் பலதுமுண்டு 02.

உண்டென்ற ரகசியத்தை இவ்வுலகில்
உரைத்திடுவார் முனிவர்களும் அரங்கனிடத்தில்
அண்டிவரும் நாளதனை தினங்கள் யேழ்பின்
அகத்தியன்யான் கூறியே ஆசிதாரேன் 03.

ஆசியதால் கலியுகம் காக்கும் வழிகள்
அருள்தந்து உரைத்திடுவோம் மகனேவுனக்கு
பாசமுள்ள யென்மக்கள் பல்லாண்டு வாழ
பெருவரம் அளிக்கின்றேன் ஆசிமுற்றே 04.

.....சுபம்.....

# மகான் கருவூரார் ஆசிகாண்டம்

## 10 – 06 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன்

கருணையின் சிகரமே அரங்கா போற்றி
கருணையில் உயர்ந்ததொரு அரசா போற்றி
கருணையில் இறைவனே தேசிகா போற்றி
கருணையே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே கருவூரார் யான் ஆசிதன்னை
பூவுலகில் வழங்கவந்தேன் இன்றுநாளில்
பார்காக்கும் மன்னனாக நீயும் வந்தாய்
பாருலகில் குருவாகி துணையாய் நிற்பேன் 02.

நின்றேனே என்னாசி என்றும் உண்டு
நிலமதனில் துறவியாகி ஈதூழ் (இப்பிறப்பில்) வந்தாய்
நன்றுதரும் சேவைபல செய்தாயப்பா
நாயகன் உன் சேவையே ஆண்டவன் சேவை 03.

ஆண்டவன் உன்திருவடிகள் வாழ்க வாழ்க
அகம்மகிழ்ந்து கருவூரார் வாழ்த்தினேனே
தொண்டுகளும் பெருகிட ஆசியுண்டு
தரணியிலே அறம்செய்து ருணமும்ஏற்றாய் 04.

ஏற்றாயே உன்ருணங்கள் விலக ஆசி
இவ்வுலகில் தனம்பெருக அளிப்பேன் ஆசி
பற்றறுத்தாய் அரங்காநீ உலகை காக்க
பாருலகில் உன்தவம் வெற்றி வெற்றி 05.

வெற்றிபெரும் கருவூரார் அளிப்பேன் ஆசி
வெற்றியே அழியாத நிலை உமக்கு
வெற்றியுண்டு யுகம்யுகமாய் உலகை காப்பாய்
வெற்றிமேல் முருகனாக விளங்குவாயே 06.

விளங்கிடுவாய் கருவூரார் அளித்தேன் ஆசி
விளக்கிடுவாய் உண்மைகளை உலகத்தோர்க்கே
களங்கமிலா தேவன்நீ மக்களுக்கு
கடவுளின் அவதார அரங்கா வாழ்க 07.

வாழ்கவே வாழ்த்தினேனே அறங்கள் சிறக்க
வையகமும் சிறந்திட அளித்தேன் ஆசி
வாழ்வளிக்கும் பரம்பொருள் உந்தனுக்கே
வையகத்தில் துணையாக நிற்பேனப்பா 08.

அப்பனே ஆசியுண்டு அளித்தேன் இன்னாள்
அடுத்துவரும் மர்மநூல் உந்தனுக்கே
ஒப்பில்லா விளக்கமதை அளிப்பேன் இன்னாள்
ஓதிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

## ஆசான் சட்டைநாதர் ஆசிகாண்டம்

**13 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

அருந்தவ நாதனே அரங்கா போற்றி
அருந்தவ யோகியே அரசா போற்றி
அருந்தவ சித்தரே தேசிகா போற்றி
அருந்தவமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே சட்டைநாதர்யான் ஆசிதன்னை
பூவுலகில் வழங்கவந்தேன் இன்றுநாளில்
பார்காக்கும் யோகி நீ வாழ்க வாழ்க
பார்காக்க பலபிறவி எடுத்தாயப்பா 02.

அப்பனே அருட்பெருஞ் சோதியானாய்
ஆனாலும் கலியுக இடரை நீக்க
ஒப்பில்லா இப்பிறப்பு நீயும் கொண்டாய்

உன்னுள்ளே ஜோதியை யானும் கண்டேன் 03.

கண்டேனே கலியுகத்தின் கல்கியாவாய்
கருணையே கடவுளே அரங்கா வாழ்க
உண்டான உன்அறங்கள் உயர்வுகாண
உலகத்தில் சட்டநாதர் அளித்தேன் ஆசி 04.

ஆசியுண்டு உன்தவமும் உயர்வு காண
ஆசியுண்டு தொண்டரெல்லாம் உயர்வுகாண
ஆசியுண்டு அன்பரெல்லாம் மகிழ்வுகாண
ஆசியுண்டு மக்களெல்லாம் நலன்கள்காண 05.

காணவே சித்தர்களின் ஆசியுண்டு
கருணைக்கடல் உன்னருளால் உலகம் சிறக்கும்
பேணவே வள்ளல்களின் தலைவன் நீயே
பேசிடுவேன் உன்னருளால் உலகம் ஓங்கும் 06.

ஓங்கியே தொண்டரெல்லாம் சித்தர்களாவார்
உலகத்தில் சித்தர் பலர் தோற்றமாகி
ஓங்கார குடில் தலைமை பீடமாகி
உலகத்தை ஆட்சிசெய்யும் என்று சொல்வேன் 07.

சொல்லிடுவேன் அரங்காஉன் தவமும்வெற்றி
சொல்லிடுவேன் அரங்காஉன் அறமும்வெற்றி
சொல்லிடுவேன் அரங்காஉன் ஞானம்வெற்றி
சொல்லிடுவேன் அரங்காஉன் அனைத்தும்வெற்றி 08.

வெற்றிவெற்றி சட்டநாதர் (சட்டைமாமுனிவர்) ஆசியுண்டு
வெற்றிவெற்றி துணைநிற்பேன் குடிலில்யானும்
வெற்றிபெற வாழ்த்தினேன் இன்றுநாளில்
விளம்பிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

# மகான் கொங்கணர் ஆசிகாண்டம்

**14 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தின் சிகரமே அரங்கா போற்றி
ஞானத்தின் வழிசெல்லும் அரசா போற்றி
ஞானத்தின் ஞானக்கனலே தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே கொங்கணர் என் ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் உந்தனிற்கே
போற்றியே ஆசிபல தந்தோமப்பா
பூவுலகில் உன்பலமும் உயர்வதற்கே 02.

உயர்ந்திட்டால் உலகமும் உயருமப்பா
உன்னருளை உயர்த்திடவே அளிப்போம் ஆசி
நேயத்தை வளரவைத்தாய் உலகம் சிறக்க
நன்மைகளை வழங்கிட்ட நாயகன் நீயே 03.

நாயகன்உன் அருள்சிறக்க ஆசியுண்டு
நாயகன்உன் அறம்சிறக்க ஆசியுண்டு
நாயகன்உன் தவம்சிறக்க ஆசியுண்டு
நல்லவைகள் சிறந்திட ஆசியுண்டு 04.

அப்பனே அன்பு உண்மை சத்தியத்தை
அவனியிலே நிலைநிறுத்தி வாழவைப்பாய்
ஒப்பில்லா குருநாதர் நீதானப்பா
ஓங்கார குடில்தானே ஞானக்குடில் 05.

ஞானிகளும் வாழ்ந்துவரும் குடிலும் இதுவே
ஞானிகளும் வலம்வருவார் குடிலும் தன்னில்
ஞானஒளி ஜோதிதன்னில் வீற்றிருப்பார்
ஞானஒளி காண்பவர்க்கு அளிப்பார் ஆசி 06.

ஆசியிது சூட்சுமத்தின் ஆசியப்பா
அன்பர்கட்கு தொண்டர்கட்கும் சூட்சும ஆசி
ஆசியுண்டு நித்தம் நித்தம் பெறுவார் தானே
அரங்கா உன்னுள்ளும் ஞானிகள் உண்டு 07.

உண்டான ஞானத்தை வளரவைக்க
ஓங்காரக் குடில்நாடி சித்தர்கள் வருவார்
தொண்டர்களை மேலோங்க வைப்பார் தானே
தொண்டுகளும் உலகமெங்கும் சிறக்கவைப்பார் 08.

வைப்பார்கள் அரங்கா உன் அருளினாலே
வையகமும் சிறந்திடும் ஆசியுண்டு
ஒப்பில்லா உன்வெற்றி நெருங்குதையா
ஓதினேன் கொங்கணர்யான் ஆசிநூல் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் பிரம்மசித்தர் ஆசிகாண்டம்

**15 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

அகத்தியரே தெய்வம் என்றறிந்த அரங்கா போற்றி
அகத்தியரே உண்மை என்றறிந்த அரசா போற்றி
அகத்தியரே அருள்தரும் வல்லமை என்றறிந்த தேசிகா போற்றி
அகத்தியராய் விற்றிருக்கும் நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே பிரம்மசித்தர் யான் ஆசிதன்னை
புகலவந்தேன் ஆசியதை இன்று நாளில்
பார்காக்கும் தவசித்தே வாழ்க வாழ்க
பாருலகில் ஞானமதை வளர்க்க வந்தாய் 02.

வந்தாயே உன்தொண்டர் அன்பரும் ஞானி
வையகத்தில் அறத்தினது வல்லமை தன்னை
சிந்தையில் உணரவைத்த சித்தர் நீயே
சிறப்பான பிரம்மத்தை நீ உணர்ந்தாய் 03.

உணர்ந்துமே சித்திக்கும் பொருளுமானாய்
உண்மையின் போதகன் நீ வாழ்க வாழ்க
உணர்ந்து கொண்டாய் ஞானத்தின் சூட்சுமத்தை
உறுதியுடன் நான் சொல்வேன் வெற்றி வெற்றி 04.

வெற்றிகளும் உமைநாடி சேருமப்பா
வெற்றிமேல் முருகனே வாழ்க வாழ்க
பற்றறுத்தாய் உலகினிலே ஒருவன் நீயே
பாருலகில் உமக்கு நிகர் எங்கும் காணேன் 05.

காண இயலா கடவுள் நீ மக்களுக்கு
கருணைமொழி உன்மொழியே வேதமொழி
பேணவே உமை அடைந்த மக்களெல்லாம்
பெரும்பேற்றை அடைந்தவர்தான் என்று சொல்வேன் 06.

சொல்லிடுவேன் ஞானிகளின் ஆசிகிட்டும்
சித்தர்வழி வாழ்ந்துவரும் அரங்கா உமக்கு
நல்விதமாய் சித்திகளும் நாடி வருமே
நாயகனெ உன்னருளால் அகிலம் சிறக்கும் 07.

சிறப்பெல்லாம் மக்களுக்கு வழங்குவாய் நீ
சித்திகளை தந்திடுவாய் சீடர்கட்கும்
தரணியிலே தொடர்ந்தளிப்பேன் சூட்சுமநூல் ஒன்று
தாமுரைப்பேன் அருள்பெருக வைப்பாயப்பா 08.

அப்பனே ஞானமதை வளரவைப்பாய்
அருள்தருவாய் அரங்காஉமை வேண்டி நிற்போம்
ஒப்பில்லா ஞானவெற்றி உந்தனுக்கே
ஓதினேன் பிரம்மசித்தன் இப்படலம் முற்றே 09.

.....சுபம்.....

# மகான் மச்சமுனிவர் ஆசிகாண்டம்

## 16 – 06 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன்

அருள்தரும் கற்பகமே அரங்கா போற்றி
அருள்தரும் பொற்பதமே அரசா போற்றி
அருள்தரும் சிற்சபையே தேசிகா போற்றி
அருள்தரும் நின்மலரடியை போற்றி போற்றி 01.

போற்றியே மச்சமுனிவர்யான் ஆசிதன்னை
புகலவந்தேன் சுவடிவழி இன்றுநாளில்
பார்காக்க சாதனைகள் புரிந்தாயப்பா
பாருலகில் அறம்உயரும் ஆசியுண்டு 02.

உண்டான சூட்சுமங்கள் பலவும் கண்டாய்
உந்தனின் பக்குவத்தை உணர்ந்தோம் நாமே
தொண்டுகளில் உமக்கு நிகர் உலகில் ஏது
தவத்தினால் அருள்புரிந்தாய் அரங்கா நீயே 03.

அரங்கா உன்மனது உம்மைப் போலே
அவணியிலே பெரியோரும் யாரும் இல்லை
அரங்கமெனும் உலகத்தை ஆளும் தகுதி
அரங்கராசன் உந்தனுக்கே உண்டு உண்டு 04.

உண்டான இன்பமெல்லாம் உலகுக்கீந்த
ஓங்கார அற்புத பொருளும் நீயே
தொண்டருக்கும் தொண்டராக பணிவுமாவாய்
தவத்தினிலே உலகத்தில் உயர்ந்தோராவாய் 05.

உயர்ந்த உள்ளமே உந்தன் உள்ளம்
உலகத்தில் கனிவு மனம் கொண்ட தேவா
நேயத்தால் இப்பிறவி நீயும் கொண்டாய்
நிலமதனில் அறியாமை கண்டு நீயும் 06.

கண்டு நீ மனமுருகி கண்ணீர் விட்டாய்
கலியுகத்தை மாற்றிவைக்க வந்தாயப்பா
தொண்டுகளில் மக்கள்மனம் குளிர வைத்தாய்
தரணியிலே அவரவர்க்கும் மகிழ்வை தந்து 07.

தந்துமே ஞானமதை ஊட்டினாயே
தவயோகி உன்முயற்சி வெற்றிகாண
சிந்தையுடன் மச்சமுனி அளித்தேன் ஆசி
சித்திகளை எட்டிடுவாய் ஆசியுண்டு 08.

உண்டான சித்திகளை தோன்ற வைப்பாய்
உலகத்தில் ஞானசித்தர் காலமாக்கி
தொண்டுகளை சிறக்கவைப்பாய் ஆசியுண்டு
தானளித்தேன் மச்சமுனி ஆசிநூல் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் நந்தி தேவர் ஆசிகாண்டம்

**17 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

அகத்தியரின் அருள்பெற்ற அரங்கா போற்றி
அகத்தியர்வழி ஆட்சிசெய்யும் அரசா போற்றி
அகத்தியராய் விற்றிருக்கும் தேசிகா போற்றி
அகத்தியரே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே நந்தி தேவர் யான் ஆசிதன்னை
பூவுலகில் வழங்க வந்தேன் உந்தனுக்கு
பார்காக்கும் ஞானியே அரங்கா வாழ்க
பாருலகில் ஞானிகளின் வழியில் வந்தாய் 02.

வந்தாயே ஞானிகளின் துணை உமக்கு
வருமுலகில் உன்அறங்கள் உயர்வுகாண
சிந்தையுடன் நித்தம்நித்தம் அளிப்போம் ஆசி

சித்தர்நிலை பெற்றுவிட்ட அரங்கா வாழ்க 03.

வாழ்கவே நந்தியான் வாழ்த்தினேனே
வையகத்தின் பேரருள் நீ அரங்கா வாழ்க
வாழ்வுதரும் ஞானிநீ வாழ்க வாழ்க
வையகத்தில் பெரும்சக்தி உந்தனுக்கு 04.

உந்தனின் திருவடியை போற்றுவோமே
உலகமே உன்னருளால் இயங்குமப்பா
சிந்தையிலே நீசெய்த தவமும் சித்தி
சித்தர்களும் துணையாக உள்ளாரப்பா 05.

அப்பனே அஞ்சாதே கலங்கிடாதே
அகத்தியரின் பெரும்ஆசி உமக்கு உண்டு
ஒப்பில்லா நந்தியான் துணையாய் நிற்பேன்
உன்னுள்ளம் ஞானிகளின் இல்லம் என்பேன் 06.

இல்லமதில் ஞானிகள்பலர் வந்து போவார்
இவ்வுலகில் மக்களுக்கு அளிப்பார் ஆசி
நல்லவைகள் பெருகுதப்பா உந்தன் அருளால்
நந்தியான் பரிபூரண ஆசியளிப்பேன் 07.

அளிப்பேனே அறம்சிறக்க ஆசியுண்டு
அதற்குரிய தனம் கிட்ட ஆசியுண்டு
அளிப்பேனே குடில் ஓங்க ஆசியுண்டு
அரங்கர் நின்சக்தி உயர ஆசியுண்டு 08.

ஆசியுண்டு அரங்கா உன் தவமும் வெற்றி
அகிலத்தை காக்கும் உன் அறமும் வெற்றி
ஆசியுண்டு நந்தீசன் அளித்தேன் இன்னாள்
ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் கோரக்க மகரிஷி ஆசிகாண்டம்

## 18 – 06 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன்

உண்மை ஆன்மீகம் வளர்த்த அரங்கா போற்றி
உலகை ஆளவந்த எங்கள் அரசா போற்றி
ஆன்மிக உணர்வை ஊட்டிய தேசிகா போற்றி
அகத்தியர் சன்மார்க்க குருவே நின்திருவடி போற்றி 01.

போற்றியே கோரக்கர் யான் ஆசிதன்னை
பூவுலகில் வழங்கவந்தேன் இன்றுநாளில்
பார்காக்கும் ஞானஒளி அரங்கா வாழ்க
பாருலகை காத்துவரும் அரசா வாழ்க 02.

வாழ்க்கையில் மக்கள்குறை தீர்த்தாயப்பா
வையகத்தில் மரணத்தை வெல்லும் மார்க்கம் சொன்னாய்
வாழ்வுதரும் சித்தர்கள் ஆசிபெற்றாய்
வரமளிக்கும் சித்தர்களின் செல்வன் நீயே 03.

செல்வன் நீ ஆன்மநேய உறவை வளர்த்தாய்
சித்தர்கள் போற்றும் சித்தன் நீயே
அல்லலை போக்கவந்த அகத்தீசன் நீயே
அகத்தும் புறத்தும் காக்கும் அகத்தியர் நீயே 04.

அகத்தியராய் வீற்றிருக்கும் அரங்கா வாழ்க
ஆண்பெண் விதைக்கும் முக்திஎன்ற முதல்வரே
ஜெகத்தில் கல்கி அவதாரம் ஆனாய்
சித்தர்கள் வழித் தோன்றல் அரங்கா வாழ்க 05.

வாழ்கவே கோரக்கர் வாழ்த்தினேனே
வள்ளலார் உன்னுள்ளே ஜோதியாய் உள்ளார்
வாழ்வளிப்பாய் உலகிற்கே ஆசியுண்டு
வழிகாட்டி மக்களின் அச்சத்தை போக்கி 06.

போக்கியே மெய்ஞானம் உணர வைத்தாய்
பூவுலகில் உன்தேகம் ஞானதேகம்
தக்கதொரு சித்தரெல்லாம் உன்னுள் உள்ளார்
தவயோகி உன்சித்தி உயர்த்தி வைப்பார் 07.

உயர்த்தி வைப்பார் உலகையும் உந்தன்மூலம்
உயர்வான ஆசிபல தருவாரப்பா
நேயத்தின் மறுஉருவம் அரங்கா நீயே
நிழல்போலே உமை தொடர்வோர் ஞானியாவார் 08.

ஞானத்தை வளரவைக்கும் அரங்காஉம்மை
ஞானிகள் நாம் போற்றினோம் சுவடி மூலம்
ஞானம்பெருக கோரக்கர் ஆசியுண்டு
ஞாலமதில் வழங்கினேனே ஆசிநூல் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் பதஞ்சலி முனிவர் ஆசிகாண்டம்

**19 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

யோகத்தில் உயர்ந்ததொரு அரங்கா போற்றி
யோகத்தில் சிறந்ததொரு அரசா போற்றி
யோகசித்தி பெற்றுவரும் தேசிகா போற்றி
யோகியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே பதஞ்சலி முனிவர் யானே
புகலவந்தேன் ஆசியின் இப்பாகம் தான்
பார்காக்கும் உந்தனுக்கு யோகசித்தி
பதஞ்சலியான் உயர்த்திவைப்பேன் ஆசியோடு 02.

ஆசியோடு அருந்தவத்தை புரிந்த தேவா
அகம்மகிழ்ந்தேன் பதஞ்சலி என் ஆசியுண்டு
வாசியோகம் நீபுரிந்தாய் உலகை காக்க
வையகத்தில் உன்தேகம் இளமையாக 03.

ஆகவே யோகசித்தி அளிப்பேன் யானே
அகத்தியரின் அருள்வடிவே அரங்கா வாழ்க
யோகத்தால் உச்சியை நீ எட்டுவாயே
உயர்வான நிலைஉண்டு உந்தனுக்கு 04.

உந்தன் அருளினால் மக்கள் உயர்வார்
உந்தன் அருளினால் உலகம் உயரும்
சிந்தையிலே நீசெய்த யோகம் வெற்றி
சிவசிவா வாசிசித்தி உந்தனுக்கே 05.

உந்தனுக்குள் ஞானக்கனல் உயர்த்திவைக்கும்
ஓங்கார சக்தியதை ஏற்றி வைக்கும்
வந்தடையும் அட்டமா சித்தி எல்லாம்
வையகத்தின் பெருஞ்சோதி அரங்கா வாழ்க 06.

வாழ்கவே வரம்தரும் நாயகன் நீயே
வழிகாட்டும் அருட்குருவே வாழ்க வாழ்க
வாழ்வளிக்கும் உன்மார்க்கம் வாழ்க வாழ்க
வாழ்வுதரும் பேரருளே வாழ்க வாழ்க 07.

வாழ்கவே சித்திக்கும் சூட்சுமத்தை
வாசியோக மர்மத்தை தொடர்ந்தளிப்பேன்
வாழ்வினிலே நீகேட்ட மர்ம ஆசி
வழுத்திடுவேன் பதஞ்சலியான் இன்றுநாளில் 08.

நாள்முதலாய் அருள்உயரும் ஆசியுண்டு
நலமுண்டு மக்களுக்கே ஆசிதந்தேன்
சொல்லிட்டேன் சுவடிவழி இன்றுநாளில்
செப்பிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

# மகான் இடைக்காடர் ஆசிகாண்டம்

## 20–06–2003

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தின் சக்திகொண்ட அரங்கா போற்றி
ஞானத்தின் சக்திபெற்ற அரசா போற்றி
ஞானத்தின் வல்லமையே தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே இடைக்காடர் என் ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் உந்தனுக்கு
பார்காக்கும் ஞானிநீ வாழ்க வாழ்க
பாருலகில் உந்தனின் தபோபலத்தால 02.

தபோபலத்தால் மக்களையே காத்தாயப்பா
தரணியிலே கலியுகத்தை மாற்றிவைத்தாய்
தபோபல சக்தியே உந்தனுக்கு
தரணியையே காத்துவரும் அரங்கா வாழ்க 03.

வாழ்கவே இடைக்காடர் அளிப்பேன் ஆசி
வையகத்தில் நீஒரு சித்தரப்பா
வாழ்வுதரும் கடவுள் நீ மக்களுக்கு
வாழவைத்த தெய்வமே வாழ்க வாழ்க 04.

வாழ்கவே சித்திகளின் தலைவனப்பா
வையகத்தை காத்தருள்வாய் வாழ்கவாழ்க
வாழ்வளிக்கும் கருணையே வாழ்க வாழ்க
வரமளிக்கும் சோதியே வாழ்க வாழ்க 05.

வாழ்கவே உன்அறமே உயர்ந்த அறம்
வையகத்தை காக்கின்ற அறமும் இதுவே
வாழ்வளிக்கும் உந்தனுக்கு துணையாய் நிற்பேன்
வையகத்தின் பஞ்சத்தை அகற்றினாயே 06.

அகற்றியே அருள்பெருக வைத்த தேவா
அவணியின் அமைதிக்கு நீயே காரணம்
ஜெகத்தினையே உன்அறம்தான் காக்குதப்பா
சித்தர்களின் ஆசியுண்டு உந்தனிற்கு 07.

உந்தனுக்கு துணையாக இருப்போர்ஞானி
உன்னருளே உலகத்தின் உயர்ந்த அருள்
சிந்தையிலே நீசெய்த தவத்தினாலே
சித்தர்களும் மனம் மகிழ்ந்து வாழ்த்தினோமே 08.

வாழ்த்தினோம் தவம்வெற்றி உந்தனுக்கு
வையகத்தில் உன்அறமும் வெற்றி வெற்றி
வாழ்வளிப்பாய் இடைக்காடர் முழங்கினேனே
வழுத்திவந்த அசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் தூர்வாசர் ஆசிகாண்டம்

**22 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணிதரன்

தவத்திலே உயர்ந்ததொரு அரங்கா போற்றி
தவத்தின் வழி ஆட்சிதரும் அரசா போற்றி
தவத்திலே சிறந்ததொரு தேசிகா போற்றி
தவமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே தூர்வாச முனிவர் யானே
பூவுலகின் அரங்கருக்கு அளிப்பேன் ஆசி
பார்காக்க கடுந்தவத்தை புரிந்தாய் நீயே
பாருலகின் முதல்வனே வாழ்க வாழ்க 02.

வாழ்கவே ஞானிகள்நாம் வாழ்த்தினோமே
வையகத்தை வாழவைக்கும் ஞானப்பொருள் நீ
வாழ்வுதரும் ஞானிகளை மக்களுக்கு
வையகத்தில் காட்டிநீ வாழவைத்தாய் 03.

வைத்ததொரு ஞானக்கனி நீதானப்பா
வையகத்தில் உன்மொழியே இன்பம்தரும்
சத்தியமாய் இனிமைதரும் கனியைப் போலே
சகலருக்கும் வாழ்வுதந்த அரங்கா வாழ்க 04.

வாழ்கவே என் தபோபலத்தை எல்லாம்
வையகத்தில் உமக்களித்து மகிழ்வேனப்பா
வாழ்வாங்கு வாழவைப்பாய் உலகம்தன்னை
வாழ்கவே உலகம் சிறக்க ஆசியுண்டு 05.

உண்டான உலகத்தில் ஞானிகள் ஆட்சி
உத்தமனே ஞானிசித்தர் காலம் தன்னை
தொண்டினால் உருவாக்கிய தவசி நீயே
தவயோகி உன்உலகம் இப்பூவுலகம் 06.

இப்பூவுலகின் ஆசான் நீ ஒருவனப்பா
இவ்வுலகில் அவதாரம் பலவும் கொண்டாய்
தப்பாமல் நீசெய்த யோகம் வெற்றி
தளராது அறம்செய்த அரங்கா வாழ்க 07.

வாழ்கவே புண்ணியமே உந்தன்பலம்
வெற்றிக்கு வழிவகுக்கும் அருள்பலம் இதுவே
வாழ்வளிக்கும் உந்தனுக்கு பிரம்மரிஷிப்பட்டம்
வாக்கினால் அளித்தேனே வாசமுனி இன்னாள் 08.

முனிவர்கள் அருள்உமக்கு அளிப்போமப்பா
முழுமைபெற கலியுகத்தை மாற்றி வைப்பாய்
இனிமைதரும் உலகமாக மாற்றி வைப்பாய்
இவ்வுலகின் கல்கி நீ அரங்கா வாழ்க 09.

வாழ்கவே வாசமுனி அளிப்பேன் ஆசி
வாழ்கவே வாசமுனி அளிப்பேன் சக்தி
வாழ்கவே வெற்றியுண்டு உந்தனுக்கே
வழுத்திவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 10.

.....சுபம்.....

## மகான் கமலமாமுனிவர் ஆசிகாண்டம்

**23 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானிகளை உணரவைத்த அரங்கா போற்றி
ஞானவாழ்வு தந்தருளும் அரசா போற்றி
ஞானிகளை போற்றிவரும் தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே கமலமா முனிவர் யானே
புகலவந்தேன் ஆசியதை இன்றுநாளில்
பார்காக்கும் அரங்கா நீ வாழ்க வாழ்க
பாருலகில் உன்தொண்டு வாழ்க வாழ்க 02.

வாழ்கவே அறத்தின் வல்லமை நீயே
வாழ்த்திடுவேன் கமலமா முனிவர் உம்மை
வாழ்வளித்தாய் உமைசார்ந்த மக்களுக் கெல்லாம்
வறுமைதனை நீசுமந்து கொண்டாயப்பா 03.

கொண்டதொரு சுமையெல்லாம் அகன்றுமேவ
கமலமா முனிவர்யான் அளிப்பேன் ஆசி
தொண்டுகளில் நிகரில்லா பெருந்தகை நீயே
தரணியிலே ருணம்நீங்க அளிப்பேன் ஆசி 04.

ஆசிதந்தாய் உலகமக்கள் அனைவருக்கும்
அவரவரின் வினைகளை நீ தாங்கிக் கொண்டாய்
ஆசிபெற உமைநாடி வந்தவர்க்கெல்லாம்

ஆசிதந்தாய் அருட்கொண்ட நீ வாழ்க வாழ்க 05.

வாழ்கவென வாழ்த்தினேன் முனிவர் யானும்
வாழ்ந்திட்டால் உலகமும் உயருமப்பா
வாழ்வளிக்க பெரும்சுமையை தாங்கினாயே
வையகத்தில் உன்சுமையை பகிர்ந்து கொள்வோம் 06.

கொள்வோமே கவலையை நீ விட்டு விடு
கலியுகமே மாறிவிடும் உந்தன் ஆசி
சொல்லிடுவென் கொதிகலனில் இடையில் பழுது
சித்தனே பழுதடையா பார்த்துக் கொள்வோம் 07.

பார்த்துமே பழுதடையா விபரம் தன்னை
பாடிடுவேன் கமலமுனி நாளை உமக்கு
பார்சிறக்க வைத்திட்டாய் மகிழ்ந்தோமப்பா
பாருலகில் ஞானிகளின் மகிமை தன்னை 08.

தன்னிலே உலகுக்கீந்த ஆசான் நீயே
தரணியிலே நாமஜெபம் ஒன்றுதானே
உண்மையுடன் ஞானம்பெறும் வழியுமப்பா
உலகத்தில் ஞானிகளின் நாமத்திற்கு 09.

நாமத்திற்கு இணையான மந்திரமேது
நாயகனே உண்மைகளை நீ அளித்தாய்
நாமஜெபம் ஒன்றுதானே ஞானம் அளிக்கும்
நாட்டினேன் கமலமுனி ஆசிநூல் முற்றே 10.

.....சுபம்.....

## மகான் திருமூலர் ஆசிகாண்டம்

**25 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தின் வழிசெல்லும் அரங்கா போற்றி
ஞானத்தின் வழிநடத்தும் அரசா போற்றி
ஞானத்தின் சூட்சுமமே தேசிகா போற்றி

ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே திருமூலர் என் ஆசிதன்னை
புகலவந்தேன் அரங்கா உமக்கு இன்றுநாளில்
நேர்வழியில் உன்ஆட்சி நடக்குதையா
நேர்மையின் சிகரமே அரங்கா வாழ்க 02.

வாழ்க்கையில் அகத்தியரின் மொழிகள் தன்னை
வழுவாது கடைபிடித்தாய் அரங்கா நீயே
வாழ்வளிக்கும் அகத்தியராய் ஆனாயப்பா
வாலையால் ஆதாரம் ஆறும் கண்டாய 03.

கண்டுகொண்டாய் வாசிசிவயோகம் தன்னை
கருத்தாக பரைவாயில் பூட்டு கண்டாய்
உண்டான மவுனத்தின் ஓட்டம் பாரே
உலகத்தில் எட்டிரண்டும் பத்தும் கண்டாய் 04.

கண்டுரைப்பேன் கோடியுகம் வாழ்வாய் நீயே
கருணையே பரமானந்தம் உந்தனுக்கே
கண்டுகொள்வாய் பிரமமுப்பை ஆக்கை தன்னுள்
(முப்புவின் இரகசியத்தை உடம்பினுள் அறிதல்)
குவலயத்தில் வாசியை மறித்து நீயும் 05.

மறித்து நீ சித்தராக ஆனாயப்பா
மகத்தான குறிகண்டு மாயை வென்றாய்
நிறை சிவயோகமதை புரிந்துவிட்டாய்
நிலமதனின் ஞானிநீ வாழ்க வாழ்க 06.

வாழ்கவே திருமூலர் ஆசிஉனக்கு
வையகத்தில் உன்அருளே நிலைத்துநிற்கும்
வாழ்வாங்கு வாழ்ந்திடுவார் மக்களெல்லாம்
வறுமைதனை அகற்றிவைப்பாய் உலகத் தோர்க்கே 07.

உலகத்தோரை வாழவைக்கும் உத்தமன் நீயே
உண்மைகளை சத்தியத்தை நிலைநிறுத்தி
கலகத்தை அகற்றிவைக்கும் கடவுளாவாய்

கலியுகமே உம்மால்தான் மாற்றமாகும் 08.

ஆகுமே உன்தவத்தால் அருள் சிறக்கும்
அகிலமே வாழ்ந்திருக்கும் அளிப்பேன் ஆசி
யோகசித்தி தந்தருளும் அரங்கா வாழ்க
ஓதிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் புண்ணாக்கீசர் ஆசிகாண்டம்

**26 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தில் விளையாடும் அரங்கா போற்றி
ஞானத்தில் ஆட்சிசெய்யும் அரசா போற்றி
ஞானத்தின் அமுதமே தேசிகா போற்றி
ஞானமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே புண்ணாக்கீசர் என் ஆசிதன்னை
பூவுலகில் அளிக்கவந்தேன் இன்றுநாளில்
பார்காக்க பாடுபட்டாய் அரங்கா நீயே
பாருலகில் மக்களின் நிலையை எண்ணி 02.

எண்ணியே பலவலை உந்தனுக்கு
இவ்வுலகில் அறம்பெருக வேண்டுமென்று
எண்ணியே பலகோடி செலவு செய்தாய்
இவ்வுலகில் ருணம் வாங்கி அறத்தை செய்தாய் 03.

செய்தாயே பயமேது உந்தனுக்கு
சித்தர்களையும் ஞானிகளையும் துணையாய் கொண்ட
மெய்ஞான யோகியே அரங்கா வாழ்க
மேதினியில் கலக்கங்கள் இதுநாள் உண்டு 04.

உண்டான கலக்கங்கள் உமக்கு உள்ளும்
உலகத்தில் ஞானிகளும் காத்துநிற்போம்
தொண்டுகளை நாம்கண்டு மகிழ்ந்தோமப்பா
தவம்சிறக்க ஆசியுண்டு அளிப்பேன் யானே 05.

அளிப்பேனே சோதனையை வெல்வாய் நீயே
அகத்தியரின் அருட்செல்வம் அரங்கா வாழ்க
தெளிவுதந்தாய் மக்களுக்கே ஆசியோடு
தரணியிலே ஞானத்தை வழங்கி வந்தாய் 06.

வந்தாயே உன்சேவை உயர்ந்த சேவை
வரம்தருவேன் உன்பலமும் உயர்வு காண
சிந்தையிலே பெருந்தவத்தை கொண்ட தேவா
சித்தர்களின் ஆசியதும் உமக்கே உண்டு 07.

உண்டான உலகமதை காப்பதற்கு
உன்னருளை உயரவைப்போம் ஞானிகள் நாமும்
தொண்டுகளும் சிறந்திட ஆசியுண்டு
தவம் வெற்றியாகுதப்பா அருள்பலத்தால் 08.

அருள்பலத்தை உம்முள்ளே கண்டேன்யானே
அருள்பெருக புண்ணாக்கீசர் ஆசியுண்டு
பொருள்பலமும் பெருகிடவே ஆசியுண்டு
புண்ணாக்கீசர் அளித்தேனே படலம் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் புலத்தீசர் ஆசிகாண்டம்

**28 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

அற்புத சித்ததரும் அரங்கா போற்றி
அற்புத நன்மைதரும் அரசா போற்றி
அற்புதங்கள் நடத்திவரும் தேசிகா போற்றி
அற்புதமே நின்திருவடிகள் போற்றி போற்ற 01.

போற்றியே புலத்தியர் என் ஆசிதன்னை
பூவுலகில் மனமுவந்து அளிக்க வந்தேன்
அற்புதங்கள் நிகழ்த்திவிட்ட அரங்கா வாழ்க
அறம்வழியே சாதனைகள் புரிந்தாய் நீயே 02.

புரிந்திடுவாய் இன்னும் பல சாதனைதான்
பூவுலகில் பலநன்மை உம்மால் கிட்டும்
புரிந்திடுவாய் ஞானவழி சாதனைதான்
புகன்றிடுவேன் சித்திபெற ஞானியாகி 03.

ஞானவழி பெரும் ஆட்சி நடத்துவாயே
ஞானிகளே உந்தனுக்கு துணையாய் நிற்பார்
ஞானத்தை உலகிற்கே வழங்குவாரே
ஞானிகளால்தான் உலகத்தை காக்கமுடியும் 04.

முடியாத காரியத்தை முடித்து வைப்பார்
மும்மலத்தை வென்றதொரு அரங்கா உமக்கு
நாடிவரும் சித்திஎல்லாம் ஆசியுண்டு
நானிலத்தில் புலத்தியரும் துணையாய் நிற்பேன் 05.

துணையுண்டு வெற்றிவெற்றி அரங்கா உமக்கு
தவயோகி உமக்குநிகர் உலகில் ஏது
இணையேது தவத்திற்கு இவ்வுலகில் தானே
இவ்வுலகை காத்திடுமே உந்தன் தவம் 06.

தவசித்தி உந்தனுக்கே உண்டு உண்டு
தரணியையே காத்திடும் உந்தன் சித்தி
தவயோகி உன்வழியே மக்களெல்லாம்
தாமுரைப்பேன் நடந்துவர பஞ்சம் அகலும் 07.
(நாட்டில் வறுமை நீங்கும்)

அகலுமே அவரவரும் உம்மை நாட
அருள்பெருகும் மழைபெருகும் நலம் பெருகும்
ஜெகத்திலுள்ளோர் உமை உணர நன்மைகிட்டும்
சிறப்பில்லா நிலைமாறி நலம் பெறுவார் 08.

பெறுவார்கள் புலத்தியர் யான் உண்மை சொன்னேன்
பேசிட்டேன் மக்கள் உணர ஆசியுண்டு
உறுதியுடன் உன்வழியை பின்பற்றினால்
உலகம் உயரும் நலம் உயரும் ஆசிநூல் தந்தேன் 09.

தந்திடுவேன் மாலைஒரு சூட்சுமம்தான்
தவயோகி உன்மார்க்கம் உயர வைப்பாய்
வந்தடையும் நன்மையெல்லாம் மக்களுக்கே
வழுத்திவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 10.

.....சுபம்.....

## மகான் இடங்கழி நாயனார் ஆசிகாண்டம்

**28 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஆதிசிவம் ஆனதொரு அரங்கா போற்றி
ஆதிசிவ சக்தியே அரசா போற்றி
ஆதிசிவ சங்கரனே தேசிகா போற்றி
ஆதிசிவமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே இடங்கழி நாயனார் யானும்
புகலவந்தேன் ஆசியின் இப்பாகம் தான்
பார்காக்கும் ராஜராஜன் அரங்கா வாழ்க
பக்தியில் உயர்ந்ததொரு அரசா வாழ்க 02.

வாழ்க்கையில் எப்பொருளும் நிலையில்லை என்று
வையகத்தின் உண்மைதனை உணர்ந்து நீயும்
வாழ்வளித்தாய் உலகமக்கள் அனைவருக்கும்
வழங்கினாய் நீபெற்ற பொருளையெல்லாம் 03.

எல்லாமே இறைவனுக்கு உரியதென்று
ஈந்துமே மகிழ்ந்திட்ட ஈசன் நீயே
சொல்லிடுவேன் சிவம்வேறு நீவேறு அல்ல
சிவசக்தி அனைத்துமே உன்னுள் அடக்கம் 04.

அடக்கினாய் ஐம்புலனை உலகைக்காக்க
அவனியிலே கேட்டவர்க்கு கேட்டதை ஈந்தாய்
தடையின்றி அறங்கள் பல செய்தாய் நீயே
தரணியிலே செல்வங்கள் நிலையானதல்ல 05.

அல்லாத மாந்தர்க்கு அளித்தாய் செல்வம்
அறத்தின் வழி ஆட்சிசெய்யும் பேரரசன் நீயே
சொல்லிடுவேன் மெய்ஞான சிவபக்தன் நீயே
சிவராஜயோகி நீ வாழ்க வாழ்க 06.

வாழ்கவே இடங்கழி நாயனார் யானும்
வாழ்த்தியே மகிழ்ந்தேன் இன்று நாளில்
வாழ்வளிக்கும் ஈசனும் அளித்தேன் ஆசி
வையகத்தில் ஈசன் நீ இடங்கழி வாக்கு 07.

வாக்குரைத்தேன் சுவடிவழி இன்றுநாளில்
வையகத்தில் ஞானத்தை உணர்ந்தாய் நீயே
ஊக்கமாகும் உன்வெற்றி ஆசியுண்டு
உலகத்தில் திருவருளை அடைவாய் நீயே 08.

அடைந்திடுவாய் மகத்தான சக்தி பலம்
அமுது படைப்பதே (அன்னதானம்) உண்மையென்று உணர்ந்து
தடையின்றி சேவைபல செய்தாய் அப்பா
தவயோகி உன்வெற்றி நிச்சயம் தான் 09.

தான்புகல்வேன் ஈசனின்சக்தி உமக்கே
தரணியிலே மகத்தான சித்திபெற்று
நன்மைபல உலகிற்கே அளிப்பாய் நீயே
நாயனார் என் ஆசிதனை வழங்கினேனே 10.

வழங்கினேனே ஈசனை உம்முள் கண்டேன்
வாழ்த்தியே மகிழ்ந்தேனே அரங்கா உம்மை
வழங்கினேன் ஆசிதனை உந்தனுக்கே
வழுத்திவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் 11.

.....சுபம்.....

## மகான் பூனைக்கண்ணர் ஆசிகாண்டம்

**29 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தை வளரவைக்கும் அரங்கா போற்றி
ஞானத்தை உயரவைத்த அரசா போற்றி
ஞானத்தின் அருட்குருவே தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே பூனைக்கண்ணர்யான் ஆசிதன்னை
புகலவந்தேன் மகாயோகி அரங்கருக்கு
பார்காக்க தவம்புரிந்த அரங்கா வாழ்க
பாருலகில் நீஒரு விசுவா மித்திரர் 02.

மித்திரர்நீ உலகமக்கள் அனைவருக்கும்
மகத்தான சக்தியெல்லாம் உமக்கே உண்டு
சத்தியத்தை கடைபிடிக்கும் அரங்கா நீயே
சித்திகளை அடைந்திடுவாய் ஆசியுண்டு 03.

உண்டான உன்கவலை அறிவோம் நாமே
உலகத்தை நல்வழியில் மாற்றும் முயற்சி
தொண்டுகளால் ஞானத்தை உணர வைத்தாய்
தவயோகி உன்னருளே உலகில் நிலைக்கும் 04.

நிலைக்குமே பூனைக்கண்ணர் அளிப்பேன் ஆசி
நிலமதனில் சிகரத்தை எட்டுவாயே
நிலைபெறுமே தர்மமதும் கலியுகத்தில்
நின்சித்தி எட்டுவது சன நேரம்தான் 05.

தான்புகல்வேன் ஞானிகளுடன் உலவிவருவாய்
தவயோகி உலகமக்கள் அனைவருக்கும்
நன்மைகளை வழங்கிடுவாய் ஆசியுண்டு
நாயகனே உன்தேகம் ஞானதேகம் 06.

தேகத்தில் ஞானிகளும் வந்து போவார்
தேகமே ஒளியாக மாறுமப்பா
யோகத்தால் இளமையாகும் உந்தன் தேகம்
உலகத்தில் ஞானிகளின் நண்பன் நீயே 07.

நண்பன் உமை நாடியே ஞானிகள் வருவார்
நானிலத்தில் துணைசெய்வார் ஆசியுண்டு
நன்மையுண்டு உலகிற்கே அரங்கா உம்மால்
நாயகன் நீ சித்திபெற அளிப்பேன் ஆசி 08.

ஆசியுண்டு அறம்சிறக்க ஆசியுண்டு
ஆசியுண்டு தவம்சிறக்க ஆசியுண்டு
ஆசியுண்டு அரங்கா நீ வெற்றிகாண
ஆசிதந்தேன் பூனைக்கண்ணர் ஆசிநூல் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் புலிப்பாணி முனிவர் ஆசிகாண்டம்

### 30–06–2003

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானமே ஞானியே அரங்கா போற்றி
ஞானிகளும் உலகுக்கீந்த அரசா போற்றி
ஞானவாழ்வு வாழ்ந்துவரும் தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே புலிப்பாணி முனிவர் யானே
புகலவந்தேன் ஆசியின் இப்பாகம் தான்
பார்காக்கும் ஞானியே வாழ்க வாழ்க
பாருலகில் தவம்கண்டு வியந்தேன் யானே 02.

வியந்தேனே கலியுகத்தில் நீயே தெய்வம்
வல்லமைகள் உமக்குள்உண்டு கண்டேன் யானே
நேயத்தின் சிகரம்நீ வாழ்க வாழ்க
நேயமே சித்திகளின் ஆதாரம் தான் 03.

தான்புகல சாதாரண மக்களைப்போல்
தரணியிலே வாழ்ந்து நீவருவாய் அப்பா
நன்மைதரும் பரம்பொருளின் அவதாரம்நீயே
நானிலத்தில் தகுந்த காலத்தினிலே 04.

காலத்தினிலே உன்ஆற்றல் வெளிப்படும்பாரே
கதிரொளிபோல் உலகமக்கள் அனைவருக்கும்
காலமதில் அருள்செய்வாய் ஆசியுண்டு
கருணையே உந்தனை வணங்கியவர்க்கு 05.

வணங்கியவர்க்கு புண்ணியபலமும் கூடும்
வந்தடைந்த இடர்யாவும் விலகி ஓடும்
வணங்கியவர் எல்லாரும் பேறுபெற்றோர்
வளமுண்டு ஞானமுண்டு அவரவர்க்கும் 06.

அவரவர்க்கும் அருள்செய்யும் இறைவன் நீயே
அரங்கா உன்னருமை உணர்ந்தோம் நாமே
தவயோகி உன்தவம் வெற்றி வெற்றி
தரணியிலே நீசெய்யும் யோகம் வெற்றி 07.

வெற்றிவெற்றி உலகின் வெற்றி அரங்கர் வெற்றி
வெற்றிவேல் முருகனாவாய் ஆசியுண்டு
உற்றதொரு புலிப்பாணி அளித்தேன் ஆசி
உலகத்தின் ஞானியே வாழ்க வாழ்க 08.

வாழ்கவே அறம்சிறக்க ஆசியுண்டு
வையகத்தில் அருள்சிறக்க ஆசியுண்டு
வாழ்வளிக்க புலிப்பாணி அளித்தேன் ஆசி
வழுத்திவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

# மகான் காலாங்கி நாதர் ஆசிகாண்டம்

## 01 – 07 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானாந்தம் அடைந்துவரு் அரங்கா போற்றி
ஞானிகளின் சேவைதரும் அரசா போற்றி
ஞானானந்தம் வழங்கவந்த தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே காலாங்கிநாதர் யானே
புகலவந்தேன் ஆசியதை இன்றுநாளில்
சற்குருவே அரங்கா நீ வாழ்க வாழ்க
சத்தியத்தை நிலைநாட்ட வந்தாய் நீயே 02.

வந்தாயே பரம்பொருளின் அவதாரம் நீ
வையகத்தில் எங்கும் நிலைத்தவன் நீ
சிந்தையிலே அஞ்ஞானந்தன்னை அகல்விப்பாய் நீ
சிறப்புதரும் நல்லறிவே நீதானப்பா 03.

அப்பனே காலாங்கிநாதர் ஆசியுண்டு
அண்டமெல்லாம் நிறைந்திடும் அற்புத சித்தன் நீ
ஒப்பில்லா ஞானத்தின் பிரம்மம் நீயே
ஓங்கார குடிலோனே வாழ்க வாழ்க 04.

வாழ்கவே மெய்ஞானமாகி நின்றாய்
வையகத்தில் மிளிர்கின்ற மெய்ச்சுடரானாய்
வாழ்வினிலே ஆறாதார தெய்வங்களை கடந்து
வரமளிக்கும் மேலான ஆதியை நாடி 05.

நாடியே ஞானரசம் நீயும் உண்டு
நன்மைகளை யுகம்யுகமாய் வழங்குவாய் நீயே
தேடியே அலைந்தாலும் உம்மைப்போலே
தெய்வத்தை காண்பதுதான் அரிதினும் அரிது 06.

அரிதான நடமாடும் தெய்வம் நீயே
அரங்கராஜ தேசிகர் நீ வாழ்க வாழ்க
அறிந்து கொண்டோர் ஞானியாவார் சத்தியமே
அரங்கர் உனை புரிந்து கொண்டோர் ஈசனுமாவார் 07.

ஆவாரே புண்ணியரே உம்மை சூழ்ந்து
அருள் பணிகள் ஆற்றிடுவார் ஆசியுண்டு
தவயோகி ஆனவரே தொண்டு செய்வார்
தரணியிலே அவரவர்க்கும் ஞானம் உண்டு 08.

உண்டாகும் காலாங்கி அளித்தேன் ஆசி
உறுதுணையாய் உள்ளேனே வெற்றியுண்டு
தொண்டுகளும் உயர்ந்திட ஆசியுண்டு
தெரிவித்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் திருமூலர் ஆசிகாண்டம்

**15 – 07 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

யோகத்தின் நாயகரே அரங்கா போற்றி
யோகி வடிவானதொரு அரசா போற்றி
யோகத்தின் சூட்சுமமே தேசிகா போற்றி
யோகியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே திருமூலர் என் ஆசிதன்னை
புகலவந்தேன் இன்றுநாள் உந்தனுக்கே
பார்காக்கும் பராபரமே அரங்கா வாழ்க
பாருலகில் சோமப்பால் உண்டு மகிழ்வாய் 02.

மகிழ்வாயெ சொன்னோமே சூட்சுமங்கள்
மறைநூலில் சொல்லறியா சூட்சுமம் கொண்டு
மகிழ்ந்திருக்க திருமூலர் ஆசியுண்டு

மார்க்கமான சோமப்பால் உண்பதாலே 03.

உண்பதாலே இளமைநிலை கூடும்கூடும்
உலகத்தின் யுவராஜன் ஆவாய் நீயே
நன்மைதரும் இளமைராஜன் நீதான் என்பேன்
நானிலத்தில் உன்தவத்தால் அனைத்தும் சித்தி 04.

சித்தியுண்டு திருமூலர் ஆசி தந்தேன்
சித்தராக தனையறிந்து இருப்பாய் நீயே
நன்மைதரும் இளமைராஜன் நீதான் என்பேன்
நானிலத்தில் உன்தவத்தால் அனைத்தும் சித்தி 05.

உந்தனிற்கே யோகசித்தி சொல்லிவைத்தோம்
உலகத்தோர் பின்பற்ற இயலாதப்பா
சிந்தையில் கருணை நிலை உள்ளவர்க்கே
சித்திகளும் நாடிவரும் அளிப்பேன் ஆசி 06.

ஜீவகாருண்யத்தை கடைப்பிடிக்கின்ற மக்களுக்குத்தான் ஞானத்திற்குரிய அறிவும் பரிபக்குவமும் உண்டாகும். மேலும், ஞானிகளும் உற்ற துணையாக இருந்து வாசி நடத்தித்தருவார்கள். வாசி நடத்திக் கொடுத்தால்தான் தூலதேகத்தையும், சூட்சுமதேகத்தையும் அறிந்து கொள்ள முடியும். தூல, சூட்சும ரகசியத்தை அறிந்துகொள்ள ஜீவகாருண்யம் கடைப்பிடிக்காமல் நாம் எத்தனை நூல்கள் படித்தபோதிலும், உண்மைப் பொருள் அறிய முடியாது. ஆகவே, ஞானத்திற்கு உற்ற துணையாக இருப்பது ஜீவகாருண்யமும், ஆசான் அகத்தீசர் திருவடி பூஜையும்தான்.

ஆசியுண்டு அரங்கராசன் உந்தனுக்கே
அகிலத்தை ஆள்வதற்கும் அளிப்பேன் ஆசி
ஆசியுண்டு அரங்கா நீ இளமைபெற
அறம்கோடி செய்தவர்க்கே இதுவும் சித்தி 07.

சித்தியுண்டு சித்தர்களின் ஆசிதன்னால்
சித்தர்கள் ஆசி அடைந்துவிட்ட அரங்கா வாழ்க
சித்திகளால் நீ மகிழ ஆசியுண்டு

சித்திகளை நீ பெற்றால் உலகம் மகிழும் 08.

மகிழ்ச்சியுண்டு அனைவருக்கும் தந்தேன் ஆசி
மன்னவனே வாழ்க வாழ்க போற்றினேனே
மகிழ்ச்சிநிலை பெருகிடவே தந்தேன் ஆசி
மறைநூல்வழி தந்துவிட்டேன் படலம் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் போகர் ஆசிகாண்டம்

**16 – 07 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தின் பெருநிலையே அரங்கா போற்றி
ஞானத்தின் வாழ்வுதரும் அரசா போற்றி
ஞானத்தின் சித்திகண்ட தேசிகா போற்றி
ஞானமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே மகான் போகர் யானே
புகலவந்தேன் ஆசியதை இன்றுநாளில்
பார்சிறக்க ஞானத்தை உலகுக் கீந்தாய்
பரம்பொருளின் அவதார அரங்கா வாழ்க 02.

வாழ்கவே நீவாழ உலகில் நன்மை
வளங்கள்பல பெருகிடுமே ஆசியுண்டு
வாழ்வளிக்க ஆசிபல உமக்கு தந்தோம்
வெற்றிகளை வழங்கிடுவோம் சித்தியுண்டு 03.

உண்டான லலாடவிழிக் குறிப்பதாக
உத்தமர் நீ மனம் தன்னில் கண்ட சித்து
கொண்டுரைப்பேன் மதியமிர்த லகரிகொண்டு
கூறிடுவேன் சுயம் பிரகாச தீபம் துலங்கும் 04.

லலாடம் என்பது புருவ மத்தியாகி சுழிமுனையாகும். பத்மாசனத்தில் அமர்ந்து வினாத்தண்டு நிமிர்ந்து இருந்தும், புருவ மத்தியாகிய சுழிமுனையில் கண்னை மூடி இரண்டு விழியால் புருவ மத்தியை கூர்ந்து நோக்கினால் பல அற்புதங்களைக் காணலாம். மேலும் புருவ மத்தியில் கூர் பார்வை செலுத்தினால் மூலக்கனல் தோன்றி அதன் காரணமாக கபாலத்தில் அமிழ்தபானம் சுரக்கும். சுரக்கின்ற அமிழ்தபானத்தை முறையோடு உண்டுவந்தால் தேக கசடுகள் நீங்கி ஜோதி தோன்றி அதன் மூலம் சொல்லவொன்னா பேரானந்தம் பெறலாம். இந்த ரகசியத்தை ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் முன்னமே அறிந்ததாகும்.

துலங்குமே மூக்கு நடுவிருக்க தீபம்
தானுனக்கு முன்போலே தோணுமையா
கலங்காதே வள்ளல் பெருமானும் நீயே
கருணையே வள்ளலாகி அறங்கள் செய்தாய் 05.

முன்ஜென்மத்தில் சுழிமுனை திறந்து அமிழ்தபானம் உண்டும் ஜோதியை கண்டும் முழு சித்தி பெறாமல் தடைபட்டு விட்டது. காரணம் அடுத்த ஜென்மம் எடுக்கவும் அதன் மூலம் அன்பர்கள் பெருவாரியாக ஞானம்பெறவும், மேலும் உலக மக்கள் நன்மை அடையும் பொருட்டே ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் இந்த ஜென்மம் அவதரித்துள்ளார்.

செய்தாயே மோட்சமையா உமக்கு தானே
சித்திபல அன்பர்கட்கும் தொண்டர்கட்கும்
மெய்யுடனே (உண்மையுடன்) அளித்திடுவாய் ஆசியுண்டு
மோட்சங்கள் உலகிற்கே ஈயும் சக்தி 06.

முன்ஜென்ம தவவாழ்க்கைக்கு உற்ற துணையாக இருந்த அன்பர்கள் பல்வேறு இனங்களில் தோன்றி உள்ளார்கள். அவர்கள்தான் தற்போது குடிலில் இருந்து தொண்டு செய்கிறார்கள். அவர்கள் நலம் அடையவே ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள்

இந்த அவதாரம் எடுத்துள்ளார். இந்த அவதாரம் தொண்டர்களுக்கும் அன்பர்களுக்கும் மட்டுமல்லாது உலகம் நன்மை அடையும் பொருட்டு எடுத்த அவதாரம் ஆகும். இது எல்லாம் வல்ல இயற்கைக் கடவுள் சித்தமாகும்.

சக்தியதும் மகான் அரங்கருக்கே உண்டு
சர்வ வல்லமை உமக்களிப்போம் ஆசியுண்டு
பக்குவங்கள் உண்டப்பா உமக்கு தானே
பாருலகில் போகர்யான் அளித்தேன் ஆசி 07.

ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் தொண்டர்களுக்கும், அன்பர்களுக்கும் மட்டுமல்லாது உலகத்தில் உள்ள யார் தன்னை நாடி வந்தாலும் அவர்களுக்கும் வீடுபேறு அடையும் வல்லமையையும் மற்றும்ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்யும் வல்லமையையும் இன்னும் அனேக ஆற்றலையும் தருவார் என்று ஆசான் போக மகாரிஷி மனமகிழ்ந்து அருளியுள்ளார்கள்.

ஆசியுண்டு உன்தவத்தால் சுழிமுனை தன்னில்
அரங்கா நீ நினைத்தது அங்கே நேரும்காணே
ஆசியுண்டு நினைத்துப்பார் அனைத்தும் கிட்டும்
ஆசியுண்டு தவம்சிறக்க ஆசியுண்டு 08.

ஆசியுண்டு அறம்சிறக்க ஆசியுண்டு
அரங்காநீ உலகை ஆள ஆசியுண்டு
ஆசிதந்தேன் போகர்யா்ன இன்றுநாளில்
ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

மகான் போ மகாரிஷி சீனா, இங்கிலாந்து இன்னும் பல நாடுகளுக்குச் சென்று மூலிகைகள் பற்றியும், மற்றும் மருத்துவத்தைப் பற்றியும், கப்பல் கட்டும் முறையைப் பற்றியும், ஞானம் அடைவதற்குரிய மார்க்கத்தைப் பற்றியும்

போதித்தும் இன்னும் பல அற்புதங்களை செய்துள்ளார். அவரால் செய்யப்பட்டதுதான் போகர் 7000. அதில் பல அற்புதச் செயல்களைப் பற்றி பாடியுள்ளார்.

அவரை, தினமும் ஒரு வெண்ணிறத் துணியில் அமர்ந்து காலை 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் **ஓம் போக மகாரிஷி திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் செய்தால் முன்செய்த பாவங்கள் தீருவதோடு புண்ணியமும் பெருகும். புண்ணியம் பெருகப் பெருக சிறப்பறிவு உண்டாகும். மேலும், மும்மலமாகிய காமதேகத்தைப் பற்றியும் அதன் காரணமாகத்தான் அறியாமை என்ற பிறவி உண்டாகும் என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம். அவர் ஆசியால்தான் மும்மலமாகிய காமதேகத்தை நீத்து, சூட்சம தேகமாகிய ஒளியுடம்பைப் பெற முடியும். பக்தியால் அன்றி யோகத்தால் அஹ அளவும் அறிந்தும் சித்திபெற முடியாது.

பக்தி செலுத்தச் செலுத்த ஆன்மாவைப் பற்றி அறியமுடியும். ஆன்மாவைப் பற்றி அறிந்தால், மூச்சுக்காற்று இயக்கத்தைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம். போகமகாரிஷி இருந்தால்தான் பாவ புண்ணியத்தைப் பற்றியும், தூல சூட்சுமத்தைப் பற்றியும், நரக சொர்க்கத்தைப் பற்றியும், சிற்றின்பம், பேரின்பம் பற்றியும், சிற்றறிவு பேரறிவு பற்றியும், இரவாகிய சந்திரகலை பற்றியும், பகலாகிய சூரியகலை பற்றியும் அறிந்துகொள்ள முடியும். அவர் ஆசியே வாசியாகவும், அவர் ஆசியே அறிவாகவும், அவர் ஆசியே ஆன்மாவின் விளக்கமாகவும், அவர் ஆசியே நுட்பமான அறிவாகவும், அவர் ஆசியே மோட்சமாகவும் அமையும். ஆகவே, போக மகாரிஷியைப் போற்றுவோம், புனிதமுடன் (தூய்மையாக) வாழ்வோம்.

குறிப்பு : எல்லாம் வல்ல இயற்கைக் கடவுள் எல்லா அண்டங்களையும், எல்லா உயிர்களையும் சார்ந்திருந்து அருள் செய்தாலும், அதைப்பற்றி அறிகின்றவர்கள் ஒருசிலரே. அவர்கள்தான் தன்னை வஞ்சிக்ககூடிய காமத்தைப் பற்றியும், அதனால் தொடர்ந்து வருகின்ற பிறவிகள் பற்றியும் அறிந்து கொள்கிறார்கள். அறிந்து கொண்டு அதே இயற்கைக்கடவுள் துணைகொண்டு தம்மை வஞ்சிக்ககூடிய காமதேகத்தை வெல்லுகிறார்கள். இயற்கைக் கடவுள் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலை மட்டும் செய்யும் வல்லமை

உடையதாகும். அதே இயற்கை துணைகொண்டு தன்னை அறிந்து மும்மலமாகிய பகையை வென்றவர்கள். அவர்களின் முதன்மை ஆசான் மகத்துவம் பொருந்திய அகத்தீசராகும். அவருடைய திருவடியைப் பூஜித்தால்தான் இயற்கைக் கடவுளைப் பற்றியும், இயற்கைக் கடவுளால் படைக்கப்பட்ட தூல(மும்மலம்), சூட்சுமம் பற்றியும் அறிந்துகொள்ள முடியும். அவர் ஆசியில்லாமல் எத்தனை நூல்கள் படித்தபோதிலும், அணுவளவும் அறிந்துகொள்ள முடியாது. அவர் ஆசிபெறுவோம், மும்மலமாகிய பகையை உடைத்தெறிவோம், சூட்சமதேகமாகிய பிரணவ தேகம் பெற்று இன்புற்று வாழ்வோம்.

## மகான் நேச நாயனார் ஆசிகாண்டம்

**20–07–2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

நேசத்தின் தலைவனே அரங்கா போற்றி
நேசத்தில் உயர்ந்ததொரு அரசா போற்றி
பாசங்கள் மிகுதிகொண்ட தேசிகா போற்றி
பரம்பொருள் நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே நேச நாயனார் யானே
புகலவந்தேன் ஆசியதை இன்றுநாளில்
பார்சிறக்க ஞானிகள்மேல் அன்புவைத்தாய்
பாசம் கொண்டாய் உலகமக்கள் அனைவர் மீதும் 02.

அனைவர் மீதும் நீ கொண்ட அன்பினாலே
அறங்கள் பல என்நாளும் செய்தாயப்பா
இணையில்லா ஞானிகளின் திருவடிகள் தன்னில்
எண்ணத்தை வைத்துவிட்ட சித்தர் நீயே 03.

சித்தர்உன் மூன்றுவித பண்புகளினால்
1) அறப்பணி செய்தல், 2) ஞானிகளின் திருவடியைப் பூஜித்தல், 3) ஞானிகளின் பெருமைகளை பேசுதல்.
சித்திபெற்று வான் கலப்பாய் சத்தியமே

சித்தர்களின் திருநாமத்தின் பெருமை தன்னை
சிறப்புகளை அளவிட முடியாதப்பா 04.

அப்பனே அற்புத மந்திர மிதுவே
அறத்தாலும் இடைவிடா ஞானிகள் நாம ஜெபத்தாலும்
ஒப்பில்லா ஞானிகளின் திருவடியில் வைத்த மனத்தாலும்
ஓங்காரன் உன்வெற்றி நிச்சயமே 05.

நிச்சயமாய் நாம் சொல்வோம் வெற்றி உமக்கே
நேசம் கொண்டேன் உந்தனின் தொண்டர்மீதும்
அச்சமிலா ஞானிகள் நாம மந்திரத்தை
அவணியிலே இடையறாது தொடர்ந்துமே 06.

தொடர்ந்துமே உச்சரித்து வருவாராயின்
தானவர்க்கு கனவில்கூட ஞானிகள் காட்சி
தொடர்ந்துவந் ஞானிகளின் ஆசிகிட்டும்
தவயோக சித்திகளை பெறுவார் தானே 07.

பெறுவார்தான் உபாயமதை நானும் சொல்வேன்
பேசிடுவேன் உதயத்தில் துயில் நீத்தெழுந்தவுடன்
உறுதியுடன் அமர்ந்திருந்து ஏக நாழிகை காலம்
உச்சரிக்க ஞானிகள் நாமம் மனதினுள்ளே 08.

காலை எழுந்தவுடன் தொண்டர்கள் 24 நிமிடங்கள் **ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் செய்து வந்தால் பல இடர்கள் நீங்கி ஞானம் சித்திக்கும்.

உள்ளாக தியானித்து வருதல் வேண்டும்
உலகத்தில் வேலைகள் செய்யும் பொழுதும்
நல்விதமாய் இப்பயிற்சி தொடர நன்று
நானிலத்தில் இரண்டரை நாழிகைக்கு ஒருமுறையாய் 09.

அன்பர்கள் எந்த வேலையில் ஈடுபட்ட போதிலும் நாமஜெபம் செய்து வருதல் நன்மையாகும்.

ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை மகான் அகத்தீசர் திருவுருவை மனக்கண்ணில் நிறுத்தி, சில வினாடிகள் நாமஜெபம் உச்சரித்து வருதல் வேண்டும்.

முறையாக சிலகணங்கள் வேலையை நிறுத்தி
மனதளவில் ஞானிகளின் காட்சியை கண்டு
நிறைவாக மனதினுள் மந்திரத்தை
நிலமதனில் உச்சரித்து வருதல் வேண்டும் 10.

வேண்டியே தொடர்ந்துமே முறைகள் செய்து
விளம்பிடுவேன் இப்பயிற்சியில் நிலைபெற்றுவிட்டால்
தொண்டுபல செய்கின்ற வேளைதனிலும்
தெரிவிப்பேன் வேறுபணிகள் செய்யும் போதும் 11.

போதுமென்ன சயனம் கொள்ளும் வேளைதனிலும்
பூவுலகில் மனம் உச்சரித்துக் கொண்டேயிருக்கும்
பூதலத்தில் ஞானிகளை உணர்ந்து கொள்ளுதல்
புகன்றிடுவேன் அன்பர்கட்கும் தொண்டர்கட்கும் 12.

தொண்டர்கட்கு சாத்தியமாகும் எனஉரைப்பேன்
தெரிவித்த பெருமைமிகுந்த ஜெபயோகத்தால்
தொண்டர்களும் ஞானியாவார் சத்தியமே
தெரிவித்தேன் சித்திபல கூடுமப்பா 13.

அப்பனான அரங்கர் உன் எண்ணம் வெற்றி
அணுகிவரும் நேசநாயனார் அளித்தேன் ஆசி
ஒப்பில்லா பரம்பொருளே அரங்கா வாழ்க
ஓதிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 14.

.....சுபம்.....

## மகான் உரோமரிஷி ஆசிகாண்டம்

**20–07–2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தை பெற்றுவிட்ட அரங்கா போற்றி

ஞானத்தில் வாழ்ந்துவரும் அரசா போற்றி
ஞானத்தின் சிகரமே தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே மகான் உரோமரிஷி யானே
புகலவந்தேன் ஆசியதை இன்று நாளில்
பார்காக்கும் பரம்பொருள் நீ வாழ்க வாழ்க
பாருலகை ஞானதிருஷ்டி மூலம் கண்டு 02.

கண்டுநீ ஆட்சிபல செய்வாயப்பா
கண்டுரைப்பேன் பிரமஞானம் உந்தனுக்கே
உண்டான ஒளியான அறிவின் கண்ணும்
உயர்வான வெளியதுதான் அண்டத்துச்சி 03.

உச்சி மீதில் அறிவின்கண் மேலே பாய்ந்தால்
உயர்நிலையை பெற்றதொரு சீவாத்மாவும்
அச்சமிலா மௌனமென்ற பரமாத்மாவும்
அவனியிலே ஒன்றிரண்டும் ஒன்றாய் சேரும் 04.

சேருமே உந்தனுக்கே ஆசியுண்டு
சிவாசிவா வெளிஒளியாய் சேரும்பாரே
பாருலகில் அறுமுகனாய் வான்கலப்பாய்
பாடிடுவேன் உரோமரிஷி ஆசியுண்டு 05.

உண்டான பிரம்மஞான திருஷ்டிமூலம்
உலகத்தை ஆட்சி செய்வாய் அரங்கா வாழ்க
கொண்டுரைக்க நீ சொல்லும் கட்டளைகள்
குவலயத்தில் மாறாது நடக்குமப்பா 06.

அப்பனே உரோமரிஷி ஆசியுண்டு
அரங்கா உன்தவத்தால் எண்ணம் வெற்றி
ஒப்பில்லா சக்திகளை பெறுவாய் நீயே
ஓங்கார ஞானியே நீ வாழ்க வாழ்க 07.

வாழ்கவே உரோமரிஷி அளித்தேன் ஆசி
வையகத்தை வாழவைக்கும் கடவுள் உமக்கு

வாழ்வுஉண்டு கோடியுகம் உந்தனுக்கே
வரமளித்தேன் உரோமரிஷி இன்று நாளில் 08.

நாள்நாளும் சித்திகளும் கூடிவரும்
நாயகனே உந்தனுக்கே சித்தி சித்தி
சொல்லிட்டேன் உரோமரிஷி இன்றுநாளில்
செப்பிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் கோரக்கர் ஆசிகாண்டம்

**24 – 07 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஓங்கார ஞானியெ அரங்கா போற்றி
ஓங்கார குடில்வாழும் அரசா போற்றி
ஓங்கார சித்தியே தேசிகா போற்றி
ஓங்காரண் நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே கோரக்க முனிவர் யானே
புகலவந்தேன் ஆசியதை உந்தனிற்கே
பார்காக்க வந்ததொரு ஞானியே வாழ்க
பரம்பொருள் நின்திருவடிகள் வாழ்க வாழ்க 02.

வாழ்வளிக்கும் உன்தவத்தை கண்டு மகிழ்ந்தேன்
வையகமும் சிறக்குதப்பா உந்தன் அருளால்
வாழ்வளிக்கும் உன்தவம் ஓங்கி ஓங்கி
வழுத்திடுவேன் உச்சியைதான் எட்டுமப்பா 03.

அப்பனே உச்சிவெளி திறந்து காட்டும்
அருள்சிறக்க பிரம்மநிட்டை உரைப்பேன் இன்று
ஒப்பில்லா மண்ணூழி காலம் மட்டும்
ஓங்காரன் நீ வாழ உரைப்பேனப்பா 04.

அப்பனே மனதிலுந்தன் உருவம் தன்னை

அருள்சிறக்க மகிழ்ந்து நீ காண்பாயப்பா
ஒப்பில்லா வெளியதும் வெளிதான் தோணும்
உயர்வான விண்வெளியை கண்டுமகிழ்வாய் 05.

மகிழ்ந்திருப்பாய் பேரின்ப ஆசை பொங்கி
மனம் குவியும் அமுதம் ஊறும் எண்ணம் போலத்தான்
மகிழ்ந்திடுவாய் இடகலையும் பிங்கலையும் சுழன்று
மாறியே சுழிமுனையில் சேருமப்பா 06.

சேருமப்பா இடைவிடாது முறைகள் செய்வாய்
சித்தர்உன் உருவமே சித்திதரும் என்பேன்
உறுதியுடன் தொண்டர்களும் முறைகள் செய்ய
ஓங்காரன் உன்னுருவை தியானம் செய்தால் 07.

செய்தாலே சித்திகளும் கூடும் கூடும்
சடுதியில் மேன்மையாவார் ஆசியுண்டு
மெய்ஞானி உன்னுருவை மனதில் கொண்டு
மகத்தான ஞானிகளின் நாமஜெபம் 08.

நாமஜெபம் செய்திடவே ஆசியுண்டு
நானிலத்தில் அருள்கூடும் அளித்தேன் ஆசி
நேமமுடன் நலம்கூடும் ஆசியுண்டு
நிகழ்த்திவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் திருநாவுக்கரசர் ஆசிகாண்டம்

**17 – 07 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

தன்னை யறிந்திட்ட அரங்கா போற்றி
தலைவனை உணர்ந்திட்ட அரசா போற்றி
உண்மையை உரைத்திட்ட தேசிகா போற்றி
உத்தமர் நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே திருநாவுக்கரசர் யானே
புகலவந்தேன் ஆசியதை இன்று நாளில்
பார்காக்கும் தத்துவ ஞானி நீயே
பரம்பொருளின் அருள்பெற்ற அரங்கா வாழ்க 02.

வாழ்கவே உன் தொண்டே சிறந்த தொண்டு
வையகத்தை காத்திடுமோர் அற்புத தொண்டு
வாழ்வளிப்பாய் உலகத்திற்கே அரங்கா நீயே
வையகத்தின் பேரருளே நீ வாழ்க வாழ்க 03.

வாழ்கவே தொண்டினால் ஞானம் பெற்றாய்
வையகத்தை காத்திட்ட அரங்கா உமக்கு
வாழ்வுஉண்டு நிலைபெறுவாய் உலகில் நீயும்
வையகத்தின் மெய்ப்பொருள் கண்டாய் நீயே 04.

கண்டுகொண்டாய் உந்தனின் ஆன்மா தன்னை
குருவிடம் நீ ஆசிதனை பெற்றுக் கொண்டாய்
கொண்டுரைத்தாய் ஞானக்கல்வி உலகத்தோர்க்கு
குருமொழியே உன்மொழி இறைவன் மொழியே 05.

இறைவன்மொழி கேட்டவர்க்கு ஞானம் சித்தி
இன்பங்கள் பலஉண்டு என்று சொல்வேன்
நிறைவாக வாழ்ந்திடுவார் ஆசியுண்டு
நீடித்த தன்னலமற்ற தொண்டினால்தான் 06.

மக்கள் தொண்டாகிய மகேசன் தொண்டை யார் ஒருவர் தடையில்லாமலும், சலிப்பில்லாமலும் செய்து வருகிறார்களோ அவர்களுக்கே எல்லாம் வல்ல பரம்பொருள் உள்ளும் புறமுமாக இருந்து அருள் செய்யும். மேலும், உலகத்தில் தன்னலமற்ற தொண்டே புண்ணியத்தை வளர்க்கும் செயல்களாகும்.

தான்புகல இறையருளை அடைய முடியும்
தரணியிலே தொண்டுதான் புண்ணியம் வளர்க்கும்
நன்மைகளை தந்தருளும் அற்புதமே தொண்டு
நாயகனே உமை உணர்ந்தோர் உயர்வார் வாழ்வில் 07.

ஓங்காரக்குடிலாசான் நன்கு அறிந்தாலே தன்னலமற்ற தொண்டின் தன்மையையும், இறையருள் பெருமையையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் அறிய முடியும்.

வாழ்வினிலே உன்தொண்டு உயர்வுகாண
வரமளிப்பேன் திருநாவுக்கரசர் யானே

ஓங்காரக்குடிலாசான் மேற்கொள்ளும் அறப்பணிகளுக்கு முன்னே உற்ற துணையாக இருந்தும், மேலும் அறப்பணி செய்வதற்கு ஆசியும், அருளும் வழங்குவதாக மகான் திருநாவுக்கரசர் வரமளித்துள்ளார்கள்.

வாழ்வினிலே உம்தொண்டால் ஞானம்சித்தி
வந்தடையும் அனைவருக்கும் ஆசியுண்டு

ஓங்காரக்குடிலாசான் தொண்டு செய்வதால் குடிலாசானுக்கு ஞானசித்தியும், குடிலாசான் மேற்கொள்ளும் அறப்பணிகளுக்கு தொண்டு செய்யும் அன்பர்களுக்கும் ஆசி வழங்குவதாக மகான் திருநாவுக்கரசர் அருளியுள்ளார்.

உண்டா ஓங்காரகுடில் அருள் நிறைந்தகுடில்
உலகத்தில் அற்புதத்தை நிகழ்த்திவரும் குடில்
தொண்டுயர்நது மேன்மேலும் வெற்றிகூட
தவராஜ அரங்கருக்கு ஆசிதந்தேன் படலம் முற்றே 09.

ஓங்காரக்குடில் அருள் நிறைந்த குடில் என்பதற்கு காரணம் அங்கே பொருள் பற்றோ, பந்தபாசமே அல்லது ஜாதி வெறியோ, வேறுவேறு வகையான குற்றங்கள் இல்லாமையே ஆகும். அதனால்தான் அருள்நிறைந்த குடில் என்கிறார்கள். அற்புதத்தை நிகழ்த்திவரும் குடில் என்பது இதநாள்வரையில் 2714 இலவசத் திருமணங்களும், உள்ளூர் மற்றுமுள்ள கிராமப்புறப் பகுதிகளுக்கு இலவச குடிநீர் கொடுத்து வருவதும் மேலும் கோடிக்கணக்காக மக்களுக்கு பசியாற்றிவைத்தும், உண்மை ஆன்மீகத்தை உலகறியச் செய்தும், மேலும் மாதம் மாதம் கண்சிகிச்சை முகாமும்

இன்னும் பல அரிய செயல்களும் செய்து வருவதால் இது அற்புதச் செயல்களாகும்.

.....சுபம்.....

## மகான் செருத்துணை நாயனார் ஆசிகாண்டம்

**20–06–2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

அகத்தை தூய்மைசெய்யும் அரங்கா போற்றி
அகிலத்தை ஆட்சிசெய்யும் அரசா போற்றி
அகத்தியராய் விற்றிருக்கும் தேசிகா போற்றி
அகத்தியமே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே செருத்துணை நாயனார் யானே
புகலவந்தேன் ஆசியின் இப்பாகம் தான்
பார்சிறக்க வைத்திட்ட அரங்கா வாழ்க
பாருலகின் மாதவசி நீதானப்பா 02.

அப்பனே ஆலயத்தின் சேவை தன்னை
அவணியிலே இறைசேவை என்றிருந்தோம்
ஒப்பில்லா மக்களின் சேவையிலே
உயர்வான மகேசனை கண்டுவிட்டாய் 03.

கண்டுகொண்டாய் மனிதாபிமானமே
கருணையே ஆன்மீகத்துக்கு ஆதாரம் என்று
தொண்டு செய்து உணர்த்திய மகானும் நீயே
தவயோகி உன்பெருமை உணர்ந்து கொண்டோம் 04.

கொண்டுரைக்க ஆலயத்தை தூய்மைப்படுத்தி
குவலயத்தில் ஆண்டவனை அடைந்தோமப்பா
உண்டான அகத்தை தூய்மை செய்து
உலகத்தை ஆட்சி செய்யும் ஆண்டவன் நீயே 05.

ஆண்டவனே உன்பெருமை உணர்ந்து கொண்டோம்
அன்பே சிவம் என்ற தத்துவத்தை

தொண்டுசெய்து உணர்த்திய ஈசன் நீயே
தரணியிலே ஆண்டவன் உன் நாமம் தன்னை 06.

தன்னிலே உச்சரித்து வருவாராயின்
தவத்திலே உயர்ந்த தவம் இதுதானப்பா
உண்மையுடன் உலகத்திலே உயர்ந்த ஆலயம்
உந்தனின் ஓங்காரக்குடிலே ஆகும் 07.

குடில்சேவையே குவலயத்தில் உயர்ந்த சேவை
குருநாதர் உன்மார்க்கமே உயர்ந்த மார்க்கம்
நாடியே அருள்செய்து ஆசி தந்தேன்
நாயகனே எங்கள் பிழை பொறுத்தருள்வாய் 08.

அருள்செய்வாய் அகிலத்தோர்க்கே வேண்டிநிற்போம்
ஆண்டவனை அடையும் மார்க்கம் உந்தன் மார்க்கம்
அருள்தரும் இறையருளே அரங்கா வாழ்க
அன்புகொண்டு அகிலத்தின் உயிர்கள் தன்னை 09.

தன்னிலே நேசித்து சேவை செய்தாய்
தரணியிலே உன்நேசம் உயர்ந்த நேசம்
உண்மையுடன் ஈடுஇணை அதற்கு ஏது
உலகத்தில் ஆண்டவனாய் அவதரித்த 10.

அவதரித்த அரங்கருக்கு செருத்துணையானும்
ஆசிதன்னை அளித்தேனே சுவடிமூலம்
தவயோகி உன்தவம் வெற்றியாகும்
தரணியையே காத்துநிற்கும் உந்தன் தவம் 11.

தவம்சிறக்க ஆசியுண்டு அளித்தேன் இன்னாள்
தளராது அறம் ஓங்க ஆசியுண்டு
அவனியெங்கும் மகிழ்ந்திருக்க ஆசியுண்டு
ஆசிதந்தேன் செருத்துணை நாயனாரும் படலம் முற்றே 12.

.....சுபம்.....

# மகான் கருவூர் தேவர் ஆசிகாண்டம்

## 31 – 07 – 2003

நூலாசான் : V.T. பரணீதரன்

குருவடிவில் வந்ததொரு அரங்கா போற்றி
குருவுக்கும் குருவான அரசா போற்றி
குருவாகி வழிகாட்டும் தேசிகா போற்றி
குருவாக வந்ததொரு இறையே போற்றி 01.

போற்றியே குரு கருவூரார் என் ஆசிதன்னை
புகலவந்தேன் அகிலத்தின் குருஅரங்கருக்கு
பார்காக்கும் நேசனே அரங்கா வாழ்க
பாருலகில் உலகமெல்லாம் உன் வசம்தானே 02.

தானே உன் அருள்பெருக அளிப்பேன் ஆசி
தவயோகி உன்சக்தி உயரும் உயரும்
ஞானத்தில் உமக்கு நிகர் யாருமில்லை
ஞானதேவன் அரங்கர் உமை போற்றினேனே 03.

போற்றினேன் பற்றறுத்த துறவி உம்மை
பரம்பொருள் உமக்குநிகர் சக்தி உண்டோ
பார்காக்க மானிட உருவில் வந்தாய்
பரம்பொருள் உந்தனுக்கு துணையாய் நின்றேன் 04.

நின்றேனே ஞானத்தை வளர வைத்தாய்
நல்லறிவை மக்களுக்கு தந்தாயப்பா
நன்றுதரும் அறமதனை உணர வைத்தாய்
நாயகனே உமை உணர்ந்தோர் ஞானியப்பா 05.

அப்பனே சுவடிவழி அளித்தார் ஆசி
அற்புதங்கள் நிகழ்த்திவரும் சித்தனும் நீயே
ஒப்பில்லா உன்சக்தி ஓங்க ஆசி
ஓங்காரக் குடில்ஓங்க அளிப்பேன் ஆசி 06.

ஆசியுண்டு அன்பர்கட்கும் தொண்டர்கட்கும்
அருள் ஓங்க கருவூரார் ஆசியுண்டு
நேசம் கொண்டு இதன்காலம் வழங்கினேனே
நிலமதனில் எட்டிரண்டும் ஒன்றாய் கண்டாய் 07.

கண்டுகொண்டாய் பரிதிமதி சுழுமுனைதன்னை
காணாத முறிந்தெழுந்த முக்கோணத்தை
கண்டுகொண்டாய் தேனுருவாய் நிற்கும்பாரு
கூட்டமிட்டு பாராதே குறிகள் தோன்றும் 08.

தோன்றாத சுட்டசுடு காடுமது வெளியுமாகும்
தெரிவிக்க வாய்விளக்கா சூட்சுமம்தான்
நன்றுபெற வெட்டவெளி சூட்சுமம்தான்
நலமெல்லாம் கூடுமப்பா ஆசிநூல் முற்றே 09.

.....சுபம்.....

## மகான் புலத்தீசர் ஆசிகாண்டம்

**28 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணீதரன்

ஞானத்தின் அருட்குருவே அரங்கா போற்றி
ஞானத்தின் ஆட்சிதந்த அரசா போற்றி
ஞானத்தின் பண்டிதரே தேசிகா போற்றி
ஞானியே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே புலத்தீசர் யான் சூட்சும ஆசி
புகலவந்தேன் இன்றுநாள் உந்தனுக்கே
பார்த்துரைப்பேன் மக்களெல்லாம் நிலை மறந்தே
பாருலகில் ஆன்மீக வழியில் செல்லா 02.

செல்லாது நெறிதவறி புலாலை உண்டு
சூதுவுடன் வஞ்சகங்கள் பஞ்சமா பாதகம்
செல்லவே துன்பம்பல தொடருதப்பா
செப்பிடுவேன் உலகமக்கள் நலன்கள் காண 03.

காணவே உன்வழியை தொடர வேண்டும்
கண்டுரைக்க உன்வழியை தொடர்வதற்கே
பேணவே உலகமக்கள் அனைவரையும்
பஞ்சங்கள் வாட்டியும் வதைக்கும்பாரே 04.

வதைக்கும்பார் கலங்காதே அரங்கா நீயும்
வையகத்தில் மாற்றங்கள் நடக்கும் காணே
வேதனைகள் அகன்றுவிடும் ஞானிகள் ஆசி
விளம்பிடவே குடில் தொண்டா அனைவருமே 05.

அனைவருமே அன்புடனே நடத்தல் வேண்டும்
அவணியிலே பெருமாள்மலை அடிவாரத்தில்
இணையில்லா ஏழைகளும் தங்கியுள்ளார்
இவ்வுலகில் வறுமையுள்ளோர் அவர்கள் தானே 06.

அவர்களுக்கு உணவதனை பொட்டலமாக
ஆதரவாய் வழங்கிடுதல் நலமும் ஆகும்
அவணியில் குடில் தொண்டர் அனைவருக்கும்
அழுக்காறு அவாவெகுளி இன்னாசொல் குறளை 07.

குறளதனின் பொருளதனை விளங்கவைப்பாய்
கோபம் கொண்டும் மிரட்டியுமே வெளியில்தானே
தரணியிலே மக்கள் மனம் புண்படும் வண்ணம்
தான்நடந்து அன்னமதை ஈவதாலே 08.

ஈவதாலே இடர்பற்றும் தொண்டர்கட்கு
இவ்வுலகில் ஞானிகளின் சாபம்பற்றும்
அவணியிலே எவ்வுயிரையும் தன்னுயிர் போலே
ஆதரவுசெய்துமே அறத்தை செய்தல் 09.

செய்தால்தான் வீடுபேறு அளிக்குமப்பா
சதீஷ்எனும் தொண்டனும் அமைதியோடு
மெய்வழியில் நடத்தல் மேன்மைதரும்
மக்களின் ஆசியால் மகனும் உயர்வான் 10.

உயர்வானே அரங்கா உன் ஆசிஉயரும்
உலகமாற்றம் சடுதியில் காணுமப்பா
நேயம் கொண்டு புலத்தியர்யான் சூட்சுமம் சொன்னேன்
நிலமதனில் குடில்புகழும் ஓங்கும் ஓங்கும் 11.

ஓங்கார குடில் உயர ஆசியுண்டு
உலகத்தில் மக்களெல்லாம் இறையின் வடிவம்
(உலகோர் அனைவரையும் கடவுளின் பிள்ளைகளாக பாவிக்க வேண்டும்)
இங்கிதமாய் வழிநடத்தல் இன்பம் தரும்
இடராக புகன்றாலோ துன்பமாய் மாறும்
(கடவுளின் பிள்ளைகளாக பார்க்காமல் துவேசம் பேசினால் கடவுளின் கோபத்திற்கு ஆட்படுவார்கள்) 12.

மாறாத நிலையடைய அளித்தேன் சூட்சுமம்
மகத்தான பெரியோர்கள் அன்பே சிவமென்று
பாரதனில் சொல்லிவைத்தார் சூட்சுமத்தை
பாருலகில் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு 13.

தொண்டுவழி உயர்ந்திட்ட அரங்கா வாழ்க
தொண்டர்களும் உணரவேண்டி சூட்சுமம் சொன்னேன்
தொண்டுதான் உண்மையான இறையின் சேவை
தொண்டுதான் வாழ்க்கைதனை உயரவைக்கும் 14.

உயர்வான நிலைதரும் சக்தியே தொண்டு
உயர்ஞானம் அளித்திடும் ஆன்மீகதொண்டு
நேயத்தால் உயரலாம் ஞானியு் ஆகலாம்
நேயத்தை மறந்துவிட்டால் வாழ்வே நகரம் 15.

நரகம்போல் துன்பநிலை தொடருமப்பா
நேயத்தை மறந்திட்ட மக்களாலே
தரணியிலே துன்பங்கள் தொடரக்கண்டேன்
தவயோகி உன் அருளால் மாற்றம் உண்டு 16.

உண்டான ஞானிகளை துணையாய் வேண்டி
உலகத்தில் அன்பின்வழி நடந்து வந்தால்
உண்டாகும் பேரின்பம் அவரவர்க்கும்
உத்தமமாய் அன்பின்வழி நடப்பதற்கே 17.

நடப்பதற்கே அரங்கா நீ வழிவகை செய்வாய்
நாட்டினேன் சூட்சுமத்தை தொண்டர்கட்கே
நடந்திட்ட வெற்றி வெற்றி அவரவர்க்கும்
நாட்டிவந்த சூட்சும நூல் இப்பாகம் முற்றும் முற்றே 18.

.....சுபம்.....

28–06–2003 சனிக்கிழமை அன் மகான் புலத்தீசர் அருளிய சூட்சும காண்டத்தில் 7ஆவது கவியில் நான்காம் வரியில் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் ஆகிய திருக்குறள் கருத்துக்களுக்கு விளக்கம் தரவேண்டும் என்று சொன்னதனால் கீழ்க்கண்ட விளக்கம் தரப்பட்டுள்ளது.

**அழுக்காறு** : உலகத்தில் ஒரு சிலருக்கு பேச்சாற்றல் இருக்கும். ஒரு சிலருக்கு எழுத்தாற்றல் இருக்கும். ஒருசிலர் செயல்களைச் செம்மையாகச் செய்வார்கள். ஒருசிலர் செயல்களை வகுத்தும் தொகுத்தும் முறைப்படுத்தியும் செய்யச் சொல்வார்கள். ஒருசிலர் செயல்களின் தன்மையைப் புரிந்து, அவர்களே செய்து முடிப்பார்கள். ஒருசிலருக்கு செயல்களின் தன்மைகள் தெரியாது, சொன்னால் செய்வார்கள். ஒருசிலருக்கு செய்யவேண்டிய செயல்களைப் பற்றி முறைப்படுத்திக் சொன்னால் கேட்பார்கள், செயலைக் செய்துமுடிக்க மாட்டார்கள். ஒருசிலர் செயல்படுவார்கள். ஒருசிலர் செயல்களைப்பற்றிச் சொன்னாலும் புரிந்து செய்யமாட்டார்கள். எனவே, அவரவர்கள் வினைக்கு ஏற்றார்போலத்தான் எதையும் புரிந்து செயல்பட முடியும். ஆகவே, திறமை உள்ளவர்களைக் கண்டு திறமை இல்லாதவர்கள் அழுக்காறு ஆகிய பொறாமை கொள்ளக்கூடாது.

**அவா** : தர்மஸ்தாபனங்களுக்கு தயை சிந்தை உள்ளவர்கள் மிகுதியாகவும், குறைத்தும் அவரவர்கள் தகுதிக்குக் ஏற்றால்போல் பொருள் கொடுப்பார்கள். அந்த

பொருள்களை தர்மஸ்தாபனத்தில் செயல்படுகிறவர்கள் இது கடவுளால் கொடுக்கப்பட்டது என்றும், அந்த பொருளை தன் உணவு, உடை, உறைவிடம்(வீடு) மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்துவது கடவுள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். அந்த பொருளை தனக்கும் தன் சந்ததியினருக்கும் பல துன்பங்களைத் தந்து பொருள் தானாக நீங்குவதோடு தீவினையும் சூழ்ந்துவிடும். எனவே, பொதுநோக்கோடு அறப்பணி செய்வது நன்மை தரும்.

**வெகுளி, இன்னாசொல் :** அறம் செய்ய விரும்பு என்று ஔவையார் சொன்னார்கள். ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறவர்கள் தர்மகாரியம் செய்ய ஆர்வம் வேண்டும் என்று சொல்வார்கள். தர்மகாரியங்கள் செய்யும்பொழுது பொறாமை உள்ளவர்கள், அறியாமை உள்ளவர்கள் இடையூறு செய்வார்கள். அதை பொறுத்துக்கொண்டு செயல்பட வேண்டும். அதனால்தான் அடுத்த வரியில் ஆறுவது சினம் என்றார்கள். சினம் என்ற கோபத்தால்தான் இன்னாசொல்லாகிய வன்சொற்கள் தோன்றும். எனவே, ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறவர்கள் பொறாமை, பேராசை, சினம், வன்சொற்கள் ஆகிய குற்றங்கள் தம்மிடம் தோன்றாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அதுவே அறமாகும்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறவர்கள், உண்மைப்பொருளை உணர்ந்த சாதுக்கள் சங்கத்தைச் சார்ந்து செயல்பட வேண்டும். அவர்கள் அழுக்காறு ஆகிய பொறாமையும், அவா என்ற பேராசையும், வெகுளி என்ற சினமும், இன்னாசொல்லாகிய வன்சொற்களும் ஆகிய குற்றங்கள் தம்மிடம் இல்லாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ள முடியும்.

மகான் புலத்தீசர் திருவடியை நித்தமும் பூஜித்து வருகிறவர்களுக்கு எல்லா குணக்கேடுகளும் நீங்கி உயர்ந்த எண்ணம் உண்டாகும். பக்தி செலுத்த செலுத்த தான் குணக்கேடுகளை உணரவும் அதை நீக்கிக்கொள்ளவும் வல்லமை உண்டாகும். மேலும், பக்தி செலுத்த செலுத்த சுயநலம் நீங்கி பொதுநலத்தில் நாட்டம் உண்டாகும். அதுவே, வீடு

பேறுக்கு துணைசெய்யும். ஓம் புலத்தீசர் திருவடிகள் போற்றி போற்றி என்று பூஜிப்போம், அவர்கள் ஆசி பெற்று இன்புற்று வாழ்வோம்.

## மகான் புலத்தியர் ஆசிகாண்டம்

**15 – 06 – 2003**

நூலாசான் : V.T. பரணிதரன்

ஆனந்தத் திருநடனம் தில்லை தன்னில்
அகோர தாண்டவம் திருவெண்காட்டில்
வானவரை காத்திடவே விடையூர் வந்து
வருவோரின் வினைதீர்க்கும் வேலூர்தேவா 01.

தேவனே உனை வணங்கி அகத்தியர் யான்
தேடிவந்த என்குல மக்கள் வாழ
புவிதனில் பலவரங்கள் தேவியோடு
பரமசிவன் உனதருளால் அளிப்பேனின்று 02.

இன்றுமே ஈதூரில் எந்தனக்கு
உயர்வுபட ஆலயத்தை அமைத்து நன்றாய்
மனமுருகி வணங்குகின்ற மக்கள் நீங்கள்
மனம்போல வாழ்த்திடவே ஆசி தாரேன் 03.

ஆசியுடன் அகத்தியனின் பூசை செய்வோர்
அகிலத்தில் புண்ணியரென்று வேதம் நான்கும்
பேசியே கூறுவதை கண்டறிந்தேன்
பரமனென்ற அகத்தியன்யான் காத்தருள்வேன் 04.

அருள்பெற்ற மக்களெல்லாம் அரச நாளில்
அகத்தியன் ஆலயத்தில் பூசைசெய்து
பெருவரங்கள் பெற்றிதினால் இப்பிறப்பில்
பெருவாழ்வு அடைந்திடவே ஆசிதாரேன் 05.

ஆசியதும் கூறுகின்ற என்குரு நாதா
அடிபணிந்து புலிப்பாணி உரைப்பேனிப்போ
பாசமுடன் அகத்தியனின் அருளைவேண்டி
பகலிரவாய் நாமத்தை செபித்துக் கொண்டு 06.

செபித்து திரிகின்ற மக்கள் நீங்கள்
சிறப்புடன் இப்புவியில் வாழ்வீரப்பா
தப்பில்லா கலியுகத்தில் உயர்ந்து வாழ்வீர்
தவமுனி அகத்தியனை நினைத்துவிட்டால் 07.

நினைத்தாலே ஈரேழு சென்ம பாவம்
நீங்கிடுமே என்றுமே போகர் சொன்னார்
நினைவுகொண்ட முனிவரெல்லாம் தவமிருந்து
நானிலத்தில் தவம் செய்து அகத்தியம் கண்டார் 08.

அகத்தியத்தை கண்டதொரு முனிவரெல்லாம்
அகிலத்தில் ரிஷிகளாய் வாழ்வார் இன்று
செகத்திலே மாந்தர்கள் அகத்தியத்தை
சிறப்புடன் பூசித்தாலே தேவராவார் 09.

தேவராவார் என்றுமே வள்ளுவர் சொன்னார்
தெரிந்திட்ட மாந்தர்கள் பூசை செய்து
பலவினைகள் நீங்கியே பல்லாண்டு வாழ்ந்தார்
பாருலகில் பலசிறப்பு அகத்திய நாமம் 10.

அகத்திய நாமமதும் செபித்து நின்றால்
அகிலத்தில் வினையில்லா சேய் பிறக்கும்
புகழுடன் சிவவாக்கியர் கூறி நின்றார்
பல்லாயிரம் ஆண்டுகாலம் வாழ்வதற்கு 11.

வாழ்வதற்கு அகத்தியநாமம் பெருமருந்தாகும்
விளக்கமுடன் கூறினார் ஔவையார் தானும்
தாழ்வில்லா அகத்தியரை வணங்கி நின்றால்
தரணியிலே மரணமில்லா வாழ்வார் என்று 12.

என்றுமே கூறிநின்றார் பாம்பாட்டி சித்தர்
இப்படியே சித்தர்கள் முனிவர்களெல்லாம்
நான்கு யுகங்களாய் அகத்தியர் மகிமை
நல்லதை கூறியே யுகம்போற்ற வாழ்ந்தார் 13.

போற்றிடவே மும்மூர்த்தி தேவர்களும்
புனிதமுள்ள சித்தர்களும் ரிஷிகளெல்லாம்
குற்றமில்லா கணபதியும் முருகனோடு
கண்டதொரு தேவதைகள் கணங்களோடு 14.

கணங்களுடன் பூதங்கள் நவக்கோள்கள்
குவலயத்தில் காண்பதொரு நிறங்களெல்லாம்
மணம் வீசும் நறுமணங்கள் திசைகள் பத்தும்
முழுமையும் இவ்வுலகம் அகத்தியம் என்று 15.

என்றுமே கூறிட்டார் மச்சமுனி நூலும்
இவ்வளவு அற்புதங்கள் ஒன்றென்றால் அகத்திய நாமம்
என்றென்றும் நாமத்தை செபித்து விட்டால்
செபித்தோர் முதல் இலட்ச மக்கள் பலனடைவார் 16.

அடைந்திடும் நாமத்தை உலகோர்க்கெழுதி
அறிய செய்வோர் அகத்தியருக்கு சேயுமாவார்
எடுத்துரைக்க இதுகாலம் போராதப்பா
இதுக்கொரு விதியுண்டு சித்தர் கேட்க 17.

சித்தர்கட்கு எடுத்துரைப்போம் அறிவீர்கள் நீங்கள்
சிவபெருமான் பார்வதியும் மகிழ்ந்துமிப்போ
ஓதிடவே புலிப்பாணி ஓடிவந்தேன்
உலகில் நீங்கள் உயர்செல்வ நிதிகளோடு 18.

நிதிகளுடன் அதிர்ஷ்டங்கள் பெற்றுவாழ
நிதிதெய்வம் இலக்குமியை வணங்கியாசி
ஓதிடவே உயர்ஞானம் கல்விகாண
உலகிலே சரஸ்வதியை வணங்கி ஆசி 19.

ஆசியதுவுடன் பார்வதியை போற்றுகிறேன்
அருள்பொருள் இன்பமதும் நிறைவு காண
பாசமுடன் தினங்காத்து நல்வழி காட்ட
பரமசிவன் அருள்முனிவர் அகத்தியர் போற்றி 20.

போற்றியே வணங்குகின்றேன் புலிப்பாணியிப்போ
புவிதனிலே அகத்தியத்தை வணங்கிவிட்டால்
நிறைவுபெற்ற மரணமில்லா வாழ்வடைவீர்
நினைத்த வண்ணம் நிதி செல்வம் குன்றா வாழ்வு 21.

வாழ்வுதனில் உலகமுள்ள காலம் மட்டும்
வாழ்ந்திடும் உங்கள்குடி செழித்து நன்றாய்
அழகுபட ஆனந்தமாய் வாழ்வீர் என்றும்
அகத்தியமுனி வந்துப்பின் உரைப்பார் முற்றே 22.

**.....சுபம்.....**